

கல்கி
KALKI செப்டம்பர் 13, 1953
4 அணா



வெள்ளையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பில் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT
SOAP


S. 207-50 TM

# கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 7 | 1953 செப்டம்பர் 13 | விஜய ஆவணி 28உ

மாற்றான் மனைவிக்கு அவன் கணவனானான்!
அந்த மங்கையும் அவனைத் தழுவத் துடித்தாள்!

ஆனால் - அவனே

அந்தப் பேரழகுப் பெட்டகத்தைக் காணக் கூசினான்!
அந்தப் பெண்ணரசின் பொன்னுடலைத் தீண்டக் குன்றினான்!

உணர்ச்சிகளைத் திரைக்களத்தில் மோதவிட்டு
உண்மைக்கு 'வெற்றி' காணும் கலை விருந்து!

வங்கக் கலைஞர்

# தேவகி போஸ்

*தயாரித்த திரைக்காவியம்!*

# ரத்னதீபம்

## தமிழ்

## செப்டம்பர் 11உ முதல்

G.H.RAO

**சென்னை:- காஸினோ·· மஹாராணி··**
**மற்றும் தென்னாடெங்கும்...**

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 7

# வாழ்க தந்தை! வாழ்க தனயர்கள்!

குடும்பத்தின் தந்தை தம் வாழ்நாளெல்லாம் குடும்ப நலனுக்காகப் பாடுபட்டு வந்தார். எத்தனையோ கஷ்டப்பட்டார்; கடினமான வேலைகள் செய்தார்; கடன்களைத் தீர்த்தார்; கழனிகளைச் சீர்திருத்தினார். அண்டை அயலார் பார்த்து வியக்கும்படியான நிலைமைக்குக் குடும்பம் வந்திருந்தது.

இதற்குள் தனயர்கள் தலையெடுத்திருந்தார்கள். தந்தையின் சட்ட திட்டங்களும் கட்டுப்பாடுகளும் அவர்களுக்குப் பொறுக்கவில்லை. அவர்களில் சிலர் துணிந்து, "இத்தனை நாள் நீங்கள் குடும்ப நிர்வாகம் செய்தது போதும். இனி எங்களிடம் ஒப்புவித்து விட்டு ஓய்வு பெறுங்கள்!" என்றார்கள்.

"பேஷாக அப்படியே செய்யலாம். எனக்கும் சந்தோஷந்தான். ஆனால் இதில் ஆத்திரம் ஏன்? இன்னும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைத்து விட்டு உங்களிடம் ஒப்புவிக்கிறேன்!" என்றார் தந்தை.

"அதெல்லாம் முடியாது. உடனே ஒப்புவிக்க வேண்டும். எல்லாச் சிக்கல்களையும் நாங்களே தீர்த்து வைத்துக் கொள்கிறோம்" என்றார்கள் சில புதல்வர்கள்.

இன்னும் சிலர் "இத்தனை நாளாயும் உமக்கு ஆசை விடவில்லை. உடனே குடும்பத்தை ஒப்படைத்து விட்டு வீட்டை விட்டு வெளியேறும்!" என்றார்கள்.

"என் ஆசை மக்களே! இதோ இருக்கிறது குடும்ப பாரம்! தாராளமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்! நானும் விடைபெற்றுக் கொள்கிறேன்! வீட்டை விட்டு வெளியேறுகிறேன்!" என்றார் தந்தை.

பிறகு சிலகாலம் தந்தையார் ஊருக்குப் பொதுவான தர்ம காரியங்களை நிர்வகிப்பதிலும் வேதாந்த விசாரணைகளிலும் ஈடுபட்டிருந்தார்.

குடும்பத்தை ஒப்புக் கொண்ட தனயர்கள் நிர்வகிக்க ஆரம்பித்தார்கள். சில நாளைக்கெல்லாம் அதன் கஷ்டங்களை உணர்ந்தார்கள். ஒருவர் மீது ஒருவர் குறை கூறினார்கள். "நீ வெளியே போ!" "நீதான் வெளியேறு!" என்றார்கள். வசைமாரிகளைப் பொழிந்து கொண்டார்கள்.

நாலா பக்கமும் எதிரிகள் வலுத்துப் போனார்கள். கோர்ட்டுகளிலே தொடுத்திருந்த வழக்குகள் எல்லாம் விரோதமாய்ப் போயின. நஷ்டத்துக்கு மேல் நஷ்டமும் கஷ்டத்துக்கு மேல் கஷ்டமும் தொடர்ந்து வந்தன.

"ஐயோ! பாவம்! பெரியவர் இருந்தபோது இந்தக் குடும்பம் எவ்வளவு நன்றாக நடந்தது? எவ்வளவு சீரும் சிறப்பும் பேரும் புகழுமாய் இருந்தது? இப்போது இவ்விதம் சீர்கெட்டுப்போயிற்றே?" என்று அண்டை அயலார்கள் இரக்கப்பட்டார்கள்.

அவர்களிலே சிலர் "இவ்வளவு உருப்படாத பிள்ளைகள் எப்படித்தான் வந்து வாய்த்தார்களோ?" என்று பரிகசித்துச் சிரித்தார்கள்.


வெள்ளம் தலைக்குமேல் போய் விடும், குடும்பமே முழுகிப் போய்விடும் என்ற சங்கடமான நிலைமை ஏற்பட்டபோது, பிள்ளைகள் எல்லாரும் சேர்ந்து மறுபடியும் தகப்பனாரிடம் சென்றார்கள்.

"முன்னே கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோம். அசந்தர்ப்பமான சமயத்தில் தங்களைப் போகச் சொல்லி விட்டோம். போனதை யெல்லாம் மறந்து விடுங்கள்; மறுபடியும் வந்து குடும்பத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்றார்கள்.

"பிள்ளைகளே! முன்னே நான் திடமாயிருந்தேன்; அப்போது வெளியேறச் சொன்னீர்கள். இப்போது வயதாகித் தளர்ந்து போயிருக்கிறேன். இந்தச் சமயத்தில் வந்து கூப்பிடுகிறீர்களே? நீங்களே சமாளித்துக் கொள்ளுங்கள்!" என்றார் தந்தை.

தனயர்கள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. "இல்லை, இல்லை! தாங்கள் வந்துதான் ஆகவேண்டும். நாங்கள் எல்லாரும் நல்ல பிள்ளைகளாகி விட்டோம். தங்களுக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டோம். திரும்பி வந்து கெட்டுப் போன குடும்பத்தைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும்!" என்றார்கள்.

# இங்கே வெள்ளம்! அங்கே வெள்ளோட்டம்!




பெரியவரின் மனம் இளகியது. "எப்படியும் நம்முடைய பிள்ளைகள்; நம்முடைய குடும்பம்! கெட்டுப் போகட்டும் என்று எப்படி விட்டிருப்பது! சக்தி உள்ள வரையில் பார்க்கலாம்!" என்று எண்ணினார்.

"நிச்சயமாகச் சொல்லுங்கள்! நீங்கள் எல்லாரும் சேர்ந்து ஒருமுகமாக என்னைத் திரும்ப அழைக்கிறீர்களா! அல்லது யாருக்காவது ஆட்சேபம் உண்டா! ஒரு தடவைக்கு மூன்று தடவையாக யோசித்துச் சொல்லுங்கள்!" என்றார்.

"எல்லாம் யோசித்து விட்டோம். அனைவரும் சேர்ந்தே அழைக்கிறோம்!" என்றார்கள்.

தகப்பனார் இரண்டாவது முறையாகக் குடும்பப் பொறுப்பை ஒப்புக் கொண்டார். கெட்டுப் போன காரியங்களை யெல்லாம் சீர்திருத்தினார். கடன்களை அடைத்தார். கோர்ட் விவகாரங்களைத் தீர்த்தார். தரிசு கிடந்த நிலங்களைப் பண்படுத்தினார். முரண்டிக் கொண்டிருந்த ஆட்படைகளைத் தாஜா செய்து வேலை வெட்டிகளை ஒழுங்காகக் கவனிக்கப் பண்ணினார்.

பெரியவர் போனதிலிருந்து பொய்த்திருந்த வானமழையும் சமயம் பார்த்துப் பெய்யத் தொடங்கியது. வாய்க்கால்களில் தண்ணீர் வந்தது. குடும்பம் மறுபடியும் செழித்துப் பழைய அந்தஸ்தை அடையும் என்று நம்பிக்கை ஏற்பட்டது.

இச்சமயத்தில் கிளம்பினார்கள் பிள்ளைகளில் சிலர். "கிழவரே! உமக்கு வயதாகிவிட்டதென்பது மறந்து விட்டதா! நாங்கள் ஞாபகப்படுத்துகிறோம். குடும்பத்தை ஒப்படைத்துவிட்டுப் போம், ஐயா!" என்று சொல்லத் தொடங்கினார்கள்.

தந்தைக்குச் சிரிப்பு வராமல் என்ன செய்யும்! "என் அருமைக் கண்மணிகளே! சென்ற வருஷத்திலேயே நான் 'எனக்கு வயதாகிவிட்டது!' என்று சொன்னேனே! அப்போது கேட்காமல் பிடிவாதம் பிடித்தீர்களே! ஒரு வருஷத்திற்குள் ஒரு வயதுதானே அதிகம் ஆக முடியும்! எனக்கும் ஒரு வயது கூட 'ஆகிற்று'; உங்களுக்கும் ஒரு வயது கூட ஆகிற்று. ஒரு வருஷத்திற்குள் நான் திடீர் என்று இளைஞனாகி யிருக்க முடியாதே! நீங்கள் ஒருவேளை ஒரே வருஷத்தில் பத்து வருஷத்து முதுமை பெற்று விட்டீர்களோ, என்னவோ! அதனால் அவசரப்படுகிறீர்கள் போலும்! ரொம்ப சந்தோஷம்! எல்லாரையும் கூப்பிட்டுக் கேட்கிறேன். போகச் சொன்னால் நிச்சயமாகப் போய் விடுகிறேன். ஆனால் மறுபடியும் என்னைக் கூப்பிடும்படியான நிலைமையை உண்டு பண்ணிக் கொள்ளாதீர்கள். உங்களுக்குள் பேசி ஒரு நிச்சயமான முடிவுக்கு வாருங்கள். பிள்ளைகள் எல்லாரும் ஒற்றுமையாக நின்று குடும்ப நலனுக்குப் பாடுபட உறுதி கொள்ளுங்கள். 'உருப்படாத பிள்ளைகள்' என்று மறுபடியும் பெயர் எடுக்காதீர்கள்!" என்றார்.

"வெளியேறுக!" கோஷத்தை ஆரம்பித்தவர்களுக்கு மறுபடியும் சந்தேகம் வந்து விட்டது.

"இல்லை, இல்லை! அந்தமாதிரி நாங்கள் 'உடனே நீர் வெளியேற வேண்டும்' என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. ரொம்ப ரொம்ப வயதாகும் வரையில் இருந்துவிடப் போகிறீரே என்ற எண்ணத்தைக் கொண்டு சும்மா ஞாபகப்படுத்தி வைத்தோம். இன்னும் கொஞ்ச காலம் இப்படியே நடக்கட்டும். பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்!" என்றார்கள்.

தமிழ் நாட்டின் அரசியல் நிலைமை தற்சமயம் இந்தக் கட்டத்தில் இருக்கிறது.

இதில் நமக்கு வியப்பு எதுவும் கிடையாது. சென்ற வருஷத்தில் ராஜாஜி முதன் மந்திரி பொறுப்பை ஏற்கும் சமயத்திலும், இந்த விஜய வருடத்தின் ஆரம்பத்திலும் நாம் எழுதி யிருந்ததை நேயர்கள் பலர் மறந்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கும் வியப்பு ஒன்றும் ஏற்பட்டிராது.

ராஜாஜி இந்தப் பொறுப்பைச் சந்தோஷமாக முன் வந்து ஏற்கவில்லை. தவிர்க்க முடியாத கடமை என்று எண்ணித்தான் ஏற்றார். ஏற்றுக்

கொண்டபிறகு, யாரும் கனவிலும் எதிர்பார்த்திருக்க முடியாத காரியங்களை யெல்லாம் சாதித்திருக்கிறார். அவருடைய சாதனைகளைத் தேசம் முழுவதும் கண்டு வியந்து வருகிறது; பின்பற்றவும் முயன்று வருகிறது.

நாட்டுக்கு நல்ல தொண்டு செய்வதற்கு ஓர் எல்லையோ, வரம்போ கிடையாது. அதற்குக் காலத் தவணை கூற முடியாது.

நூற்றைம்பது ஆண்டு அன்னியர் ஆட்சியில் இருந்ததினால் வறுமையும் மற்றும் பல தீமைகளும் குடிபுகுந்த இந்த நாட்டில் நல்லவர்களுக்கெல்லாம் இன்னும் பலகாலம் தொண்டு செய்யச் சந்தர்ப்பம் இருந்து கொண்டுதா னிருக்கும்.

ஆனாலும் ராஜாஜி நீடித்து இந்தப் பொறுப்பை வகிப்பது இயலாத காரியம். அவர் எத்தனை காலம் தம் இன்றியமையாத கடமை யென்று கருதிப் பொறுப்பை வகிக்கிறாரோ, அதுவரையிலேதான் அவருடைய சேவையை எதிர்பார்க்கலாம். அதற்குப் பிறகு கூடிய விரைவில் மற்றவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவரை விடுதலை செய்ய வேண்டியதுதான்.

ராஜாஜி தொடர்ந்து பொறுப்பு வகிக்கும் சொற்ப காலத்தில் அவருடைய 'தனயர்கள்' அடுத்தபடி பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் என்னும் சொல்!''

என்ற வள்ளுவர் வாக்கை நிறைவேற்றுவதற்குத் தங்களைச் சித்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்வாதிகள் இவ்வாறு தங்களுக்கும் தங்கள் தந்தைக்கும் புகழைத் தேடிக் கொள்ளப் போகிறார்களா! அல்லது ஒளவை மூதாட்டி பாடியிருக்கும் வண்ணம்,

''பெற்றதே பெற்றன் பிறர்நகைக்கப் பெற்றதே
எற்றோமற் றெற்றோமற் றெற்று!''

என்று பெயர் எடுக்கப் போகிறார்களா என்பது இன்னும் சில காலத்திலேயே வெளியாகிவிடும்.

இந்த நாடு, பெரிய நாடு. இதில் பொதுத் தொண்டு செய்வதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. தேச பக்தியுள்ளவர்கள் அனைவரும் தொண்டு செய்வதற்கு இடம் இருக்கிறது. போட்டியும் பொறாமையும் பூசலும் வேண்டியதில்லை. ''நீ வெளியேறு!'' ''நீ வீட்டை விட்டுப் போ!'' என்று கூச்சல் கிளப்பத் தேவையே யில்லை.

ஆந்திர சகோதரர்கள் பிரிந்த பிறகு எஞ்சியுள்ள சென்னை மாகாணத்திலும், முக்கியமாகத் தமிழ் நாட்டிலும், கடினமான பிரச்னைகள் பல ஏற்படப் போகின்றன. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பெரு முயற்சி செய்தாக வேண்டும். இம்முயற்சியில் எல்லாரும் தோளோடு தோள் நின்று ஒத்துழைக்க வேண்டும்.

''தொழில் செய்யப் பெருந்தியம் வேண்டும்-அதில்
பல்லோர் கூட்டுறவு வேண்டும்.''

என்ற மகாகவியின் வாக்கு பூர்த்தியாக வேண்டும்.

தமிழ் நாட்டின் நலம் கருதி எல்லா அரசியல் கட்சியினரும் ஒத்துழைத்துப் பணி ஆற்ற வேண்டிய காலம் இது. ஆனால் குழப்பத்தையும் துவேஷத்தையுமே சாதனங்களாகக் கொண்டவர்கள் மனமுவந்து ஒத்துழைக்க முன் வருவார்களா என்பது சந்தேகந்தான்.

பல ஆண்டுகளாகத் தேசத் தொண்டில் ஈடுபட்ட காங்கிரஸ் வாதிகளாவது பூசல்களைக் கிளப்பிக் கொள்ளாமல், ஒருவரை யொருவர் வெளியேற்ற முயலாமல், வேற்றுமையின்றி, ஒற்றுமைப் பட்டுத் தமிழகத்துக்குத் தொண்டு செய்ய வேண்டு மென்று விரும்புகிறோம்.

வாழ்க தந்தை! வாழ்க நற்றனயர்கள்!

# இன்ப உலகத்தைக் காட்டிய ஞானி

தீர்க்க திருஷ்டி வாய்ந்த மாபெரும் ஞானியே உண்மையான கவி என்பது ஒரு மகானின் வாக்கு.

உலகத்தில் தோன்றிய ஞானிகளில் சிலர் இந்த வையக வாழ்க்கையைத் துன்பக் கடலாக வர்ணித்துள்ளனர். துன்பக் கடலைத் தாண்டிக் கரை சேருவதற்கு அவர்கள் ஞான மார்க்கத்தை உபதேசித்துள்ளனர்.

ஆனால் இந்த அகண்ட பூமி துன்பக்கடல் அல்ல, இன்பம் ததும்பும் கடல்தான் என்ற உண்மையைக் கண்டு உபதேசித்த ஞானி ஒருவர் உண்டு. இன்ப மயமான அக்கடலை மனிதன் அநுபவிக்கத் தெரியாமல் துன்பப்படுகிறான் என்பது அந்த மாபெரும் ஞானியின் சித்தாந்தம்.

அந்த மகானை ஈன்றெடுக்கும் பாக்கியம் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது. அவர்தான் எட்டயபுரத்தில் அவதரித்த சுப்பிரமணிய பாரதியார்.

உலகம் இனியது,
வான் இனிமை யுடைத்து, காற்றும் இனிது,
தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது,
மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது,
கடல் இனிது, மலை இனிது, காடு இனிது,
ஆண் நன்று, பெண் இனிது, குழந்தை இன்பம்,
இளமை இனிது, முதுமை நன்று,
உயிர் நன்று, சாதல் இனிது.

இவ்விதம் இந்த உலகத்தையே இன்ப உலகமாகக் காட்டியவர் பாரதியார்.

பாக்கியசாலிகளான தமிழ் மகா ஜனங்களுக்கு வற்றாத, சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த கவிச் செல்வத்தை வாரி வழங்கியுள்ள கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரின் அமர ஜயந்தி வழக்கம்போல் இவ்வருஷத்திலும் மாகாணம் எங்கும், தமிழர்கள் வசிக்கும் மற்ற இடங்களிலும் குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது.

பாரதியார், சங்கத்தின் ஆதரவிலே சென்னை தியாகராயநகர் ஹிந்திப் பிரசார சபையில் இம்மாதம் 11, 12 ம் தேதிகளில் பாரதியாரின் அமர ஜயந்தி விழா நடை பெறுகிறது. அந்த விழாவுக்குச் ''சுதேசமித்திரன்'' ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீனிவாசன் தலைமை வகிக்கிறார்.

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல், பிரமுகர்களின் பிரசங்க மாரியும் வித்துவான், விதுஷிகளின் இன்னிசை மாரியும் பொழிகின்றன. அமர வாழ்வு பெற்ற நமது கவிச் சக்கரவர்த்திக்குத் தமிழ்ப் பெரு மக்கள் தங்களுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதன் மூலம் தங்களுக்குப் பெருமையைத் தேடிக் கொள்கிறார்கள்.

கவிச் சக்கரவர்த்தி பாரதியாரும் அவர் போற்றி வணங்கிய மகா சக்தி வடிவமான சுதந்திர பாரத அன்னையும் இந்த வாரத்துக் ''கல்கி'' இதழ் அட்டையைச் சுப்பிரமாக அலங்கரிக்கிறார்கள்.

# புது டில்லியில் தமிழ்த் திருவிழா

[நமது விசேஷ நிருபர்]

(சென்ற வாரத் தொடர்ச்சி)

'தமிழ் விழா'வை ஒட்டி நிறுவப் பட்டிருந்த பொருட் காட்சி சாலைக்குள் நுழைந்து பார்த்தவர்களுக்கு எவ்வளவோ அதிசயங்கள் காத்துக் கிடந்தன. சிற்பக் கலையின் சிறப்பைப் பிரகாசமாக எடுத்துக் காண்பிக்கும் விதவிதமான விளக்குகள், உலோகச் சிற்பங்கள், சிலைகள், அவற்றின் புகைப் படங்கள், அரிசியில் தெய்வத் திருவுருவங்கள் யாவும் அழகாகச் சேகரிக்கப்பட்டு ரஸனையுடன் வைக்கப்பட்டிருந்தன. இம் முயற்சியில் தங்கள் உழைப்பை நல்கிய ஸ்ரீ வி. எம். சுரஸிம்மனையும், ஸ்ரீ கே. எஸ். ஜம்புநாதனையும் பாராட்டவே தோன்றுகிறது. ஓவியங்களில் காவியத்தைத் தீட்டிய பாலு சகோதரர்களின் சித்திரங்களும், புத்தகக் கண் காட்சியும் பொருட் காட்சிக்கு இன்னும் உயர்வை அளித்தன. இத்தகைய காட்சிச் சாலையைத் திறந்து வைத்த டில்லி பிரதம கமிஷனர் ஸ்ரீ சங்கர் பிரஸாத் தமிழ் நாட்டின் கலைச் செல்வங்களை வானளாவப் புகழ்ந்து பேசியதில் ஆச்சரியமில்லை.

தமிழரிடையே தமிழ்ப் பற்றை ஏற்படுத்துவதுடன் நில்லாமல் வட இந்தியர்களிடையே தமிழைப் பரப்ப வேண்டு மென்று விழாவில் சனிக்கிழமை மாலை 'ஆங்கில-ஹிந்திப் பகுதி' என்ற நிகழ்ச்சியையும் நிர்வாகிகள் இணைத்திருந்த நோக்கம் என்னவோ உயர்ந்தது தான்! ஆனால் அதற்கு அதிகப்படியான வட இந்தியர்கள் வராதது பெருங் குறையே! மேற்படி பகுதிக்குத் தலைமை வகித்த டில்லி ராஜ்ய முதல் மந்திரி ஸ்ரீ பிரம் பிரகாஷ் தனது சுவை மிகுந்த ஹிந்தி சொற்பொழிவில் இந்திய கலாசாரத்தின் அஸ்திவாரத்தில் பொன்னிழையிட்டுச் செல்லும் ஒருமைப் பாட்டை விளக்கினர்.

"தமிழர்கள் ஒரு கூட்டம்தான் வஞ்சனையின்றிக் கலைக் கண்களோடு எந்த பாஷையின் கலை அம்சங்களையும் ரஸிக்கும் உன்னத மனம் படைத்தவர்கள்" என்று வட இந்தியர்கள் அதிகம் வராத கோபத்துடன் படபடத்துக்கொண்டே ஸ்ரீ டி.பி. மீனாக்ஷிசுந்தரனார் தமது ஆங்கிலப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். ஆதிசிவன் பெற்றுவிட்ட தமிழ் மொழியின் சரிதத்தை ஆராய்ந்து, இந்தியச் சிந்தனையின் அடிப்படையே தமிழ் சிந்தனையாளர்களின் உபயம்தான் என்று அறுதியிட்டுக் கூறினர்.


அடுத்தபடியாக தமிழ் இலக்கியத்தின் சிறப்பை நயமான ஹிந்தியில் ஒருவர் பேசக் கேட்டுத் திகைத்து விட்டேன். "இவர் வட இந்தியரல்ல; இவர்தான் 'நவபாரத் டைம்ஸ்' ஸ்ரீ பி. சோமசுந்தரம். கல்கியின் கள்வனின் காதலி, ராஜாஜியின் வியாசர் விருந்து முதலியவற்றை ஹிந்தியில் மொழி பெயர்த்து உண்மையான தமிழ்த் தொண்டு செய்து வருபவர்" என்று பக்கத்திலிருந்த நண்பர் சொல்லக் கேட்டபோது மகிழ்ச்சி எல்லைக்குள் அடங்கவில்லை.

இலக்கியப் பிரசங்கங்கள் முடியுமுன்னே கலை விருந்தை ரஸிக்க வந்த ஜனக் கும்பல் ஹாலில் அமைதியைக் கலைத்ததுடன், பேச்சு நிகழ்ச்சிகளைத் தமிழிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று வற்புறுத்தியது. இப்போக்கைக் கண்டு வெகுண்ட பேராசிரியர் ஸ்ரீ அ. சீனிவாசராகவன் "இரண்டே வட இந்தியர்களானாலும் அவர்களுக்காவது பிரசங்கத்தை ஆங்கிலத்தில் நடத்தியே தீரவேண்டும்! சபையில் பேசிக் கொள்வது நிற்கட்டும்; தமிழின் பெருமை பேசப்படட்டும்" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு, "கொங்குதேர் வாழ்க்கை" என்ற பதச் சோற்றுப் பாடல் மூலம் தமிழ்க் கவிதையின் பக்குவத்தை ஆங்கிலத்தில் உணர்ச்சியுடன் விவரித்தார்.

ஹாலில் நிரம்பி வழிந்த கூட்டம் நல்லவேளையாக மேடையின் ஒரு பகுதியை விட்டு வைத்தது. இந்த கிடைத்த இடத்தில் கொத்தமங்கலம் ஸ்ரீ சுப்பு 'ஜிமிக்கி' என்ற வாத்தியத்தின் துணையுடன் பாரதியாரின் கதையை உணர்ச்சியுடனும் உருக்கத்தோடும் பாடித் தமிழ் விழாவில் அமரகவிக்கு அஞ்சலி செய்தார்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மெம்பரான ஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்காரின் பேத்திகளான குமாரிகள் லலிதா, பிரபா—இருவரது நாட்டிய நிகழ்ச்சிகள் அன்றைய விழாவுக்குச் சிகரம்போல் விளங்கின. ஆதிஸ்வரம் முதல் தில்லானு வரை இருந்த நிதி மந்திரி ஸ்ரீ ஸி. டி. தேஷ்முக் தலைமை புரையைத் தமிழிலேயே எழுதிப் படித்தது தமிழ் விழாவுக்குப் பெருமை தரும் அம்சம்; அதைவிடத் தமிழுக்கே சிறப்பான 'ழ'கரத்தை ஸ்பஷ்டமாக உச்சரித்தது அவருக்குப் பெருமை அளிக்கும் விஷயம்!

காதஸ்வரக் கச்சேரியுடன் முதல் நாள் விழா முடிவு பெற்றது.



கலைக் கண் காட்சியை டில்லி நகரத்துப் பிரதான கமிஷனர் ஸ்ரீ சங்கர் பிரஸாத் ஐ. ஸி. எஸ். திறந்து வைத்தார்.

## இரண்டாம் நாள் விழா

ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிய இலக்கியப் பகுதிக்குப் பன்மொழிப் புலவர் ஸ்ரீ டி. பி. மீனாக்ஷி சுந்தரனார் தலைமை வகித்தார். ஸ்ரீ டி. கே. ஷண்முகத்தின் இன்னிசை கூட்டத்தைத் தொடங்கி வைத்தது.

ஞாயிற்றுக்கிழமை காலையாக இருந்த போதிலும் நிறையத் தமிழர்கள் வராதது வருந்தத் தக்கது. இதற்குக் காரணம்



டில்லித் தமிழ் விழாவுக்கு விஜயம் செய்திருந்த தமிழ் நாட்டுப் பிரமுகர்களுக்கு, தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு டி. என். அவினாசிலிங்கம் செட்டியார் தேநீர் விருந்துபசாரம் செய்தார்.

இலக்கியப் பகுதிக்கும் ரசிகர்கள் கலந்து கொள்வதற்குக் கட்டணம் வைத்த குறையோ என்று தோன்றியது. கலை நிகழ்ச்சிகளுக்கு வேண்டுமானால் 'அனுமதிச் சீட்டு' வைப்பது சுலபமே ஒழிய இலக்கியத்துக்கும் அம்முறையைப் பின்பற்றியது வரவேற்கத் தக்கதல்ல.

ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியம் மிக எளிமையான நூல் என்றும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வளமையான சரிதத்தை விவரிக்கும் சிறந்த நூல் என்றும் பேராசிரியர் ஆ. முத்துசிவன் விளக்கினார். பத்துப் பாட்டு என்ற அழகிய இலக்கியப் பூங்காவுக்குள் டாக்டர் மு. வரதராசனார் சபையோரை அழைத்துச் சென்றார். காதலன் நித்தம் சந்திக்கும் இடத்தை மாற்றும் உபாயமாக அன்னை வளர்த்த புன்னை என்று சகோதரி பாவத்தை ஏற்படுத்தி அறத்தொடு கூடிய காதலைக் குறிப்பால் உணர்த்தும் காதலியின் செவ்வியைக் கூறும் 'நற்றிணை' பாடலைக் கலைமகள் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் வாயிலாகக் கேட்டவர்களுக்கு எட்டுத் தொகையும் படிக்கும் விருப்பம் ஏற்பட்டது. ஒழுக்க நூல்களான பதினெண் கீழ்க்கணக்கு பற்றி ஸ்ரீ மு. கோவிந்தசாமியின் பிரசங்கம் ரசமாக இருந்தது. திருக்குறள் வி. முனுசாமி குறள் கூறும் 'சொல்'லின் பயத்தை ஹாஸ்ய நதியில் பேசியபோது 'கொல்'லென்ற சிரிப்பு அடிக்கடி சபையில் நிலவிற்று. ஈழத்திலிருந்து வந்திருந்த ஸ்ரீ கா.பொ. ரத்தினம் காந்தி அடிகள் கடைப் பிடித்த கொள்கைகளுக்குத் திருக்குறள் கருத்துக்களினின்று மேற்கோள் காட்டி ரத்தினச் சுருக்கமாக செய்த பிரசங்கம் புதுமை நிறைந்தது.

இடைவேளையில் வயிற்றுக்கு உணவு படைத்த பின்னர் மீண்டும் செவிக்கு உணவு அளிக்க இலக்கியப் பகுதி ஆரம்பமாயிற்று. சென்னை அன்றும் 'சிலப்பதிகார'த்தைப் பற்றி ஸ்ரீ ம. பொ. சி. கிராமணியாரின் உணர்ச்சிகரமான சொற்பொழிவும், டாக்டர் வரதராசனாரின் 'மணிமேகலை' ஆராய்ச்சியும், கல்கத்தா ஸ்ரீ வரதராஜய்யரின் 'சீவக சிந்தாமணி'ப் பிரசங்கமும் சபையினரைச் சங்க கால இலக்கியத்திலிருந்து மூந்நூறு ஆண்டுகளுக்கு அப்பால் அழைத்து வந்து விட்டது. மறுவினாடி இடைக்கால இலக்கியமான சைவ, வைஷ்ணவ சமய நூல்களின் இலக்கியச் சோலைக்குள் சபையோர்கள், — கலைமகள் ஆசிரியர், டாக்டர் கே. என். கிருஷ்ணன் — இவர்கள் துணை கொண்டு உலவி வந்தனர்.

சுமார் இரவு ஏழு மணிக்குக் கலை விருந்து ஆரம்பமாயிற்று. அன்று மாயூரம் ஆர். சுப்ரமணியம் கோஷ்டியாரின் நாதஸ்வர இசைக்குச் செவி சாய்த்தவர்கள் 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பம்' என்பதை நிச்சயம் ஒப்புக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கோஷ்டியில் தவுல் வாசித்து முழக்கிய பால கோவிந்தராஜன் வயதில் சிறுவனாக இருந்த போதிலும் வாசிப்பில் பெரிய புள்ளியாகவே இருந்தான்!

ஸ்ரீ கே. என். தண்டாயுதபாணியின் சிஷ்யையான ஸ்ரீமதி கிரிஜா பக்கிரிசாமியின் நடன விருந்தைத் தமிழர்கள் மட்டுமின்றிப் பல வட இந்தியர்களும் மேல் நாட்டுக்காரர்களும் இருந்து ரசித்தனர். இறுதியாக அன்று ஸ்ரீ கந்தாவின் 'நவீன சுயம்வரக் கதை'யைக் கேட்டு விட்டுச் சிரித்த முகத்துடன் சென்றவர்களைப் பார்த்தால் சுயம்வர மாலை ஒவ்வொருவர் கழுத்திலும் விழுந்ததோ என்று கற்பனை செய்யவே தோன்றியது!

## மூன்றாம் நாள் விழா

திங்கட்கிழமை காலை ஆரம்பமாகிய இலக்கிய நிகழ்ச்சியிலே 'கம்ப ராமாயணம்' என்ற சுந்தரமானதொரு காப்பிய மாளிகைக்குள் சபையோர்களை அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டனர், பிரசங்கிகள். குணப் பண்பு நிறைந்த பாத்திரங்களான ராமனையும் பரதனையும் அறிமுகப் படுத்தினார், கலைமகள் ஸ்ரீ ஜகந்நாதன். அம் மாளிகையின் கவிதைச் சுவர்களிலே சித்திர வேலைப்பாடு செய்திருந்த கம்பன் சொல்திறத்தைத் தமக்கே உரிய புலமையுடன் பன்மொழிப் புலவர் எடுத்துக் காண்பித்தார். ஸ்ரீ முத்துசிவம் மாளிகையின் 'அந்தப்புர'ப் பெருமையைச் சாங்கோபாங்கமாக விளக்கினார். அம்மாளிகைச் சிற்பி அழுத்தம், வனம் முதலிய உத்திகளை எவ்வாறு கையாண்டிருக்கிறான் என்பதைத் தக்க பாடல்கள் மூலம் பேராசிரியர் ஸ்ரீ அ. சீனிவாச ராகவன் கூறியபோது "ஓகோ, கம்பனை இப்படியல்லவா அநுபவிக்க வேண்டும்" என்று வியந்தனர்.

கம்பன் புகழ் பாடிய சபையிலே மறுமலர்ச்சிக் கவிஞரான பாரதியின் பெருமையைப் பம்பாய்த் தமிழ்ச் சங்கப் பிரதிநிதி ஸ்ரீ டி. என். ஹரிஹரன் "கடலின்மீது கதிர்களை வீசிக் கடுகிவான் மிசை ஏறும்" சூரியோதயப் பாடல் மூலம் எடுத்துரைத்தார். ஸ்ரீ ரா. ரங்கராஜனின் 'பரணி' என்ற சொற்பொழிவுக்குப் பிறகு தமிழ் வளர்ச்சிக் கழகக் காரியதரிசி 'தற்காலத் தமிழ் இலக்கிய'த்தின் போக்கைப் பற்றித் தமது கருத்துக்களை வெளியிட்டார். கவிதைப் பகுதி நல்ல முறையில் வளரவில்லை என்று கூறிய மூச்சிலே, சரித்திரக் கதைகள் எழுதுவதில் மகத்தான வெற்றி பெற்றுள்ள 'கல்கி' ஆசிரியரின் சேவையைப் பாராட்டினார்.

சொற்பொழிவுகள் முடிந்து உச்சி வேளையை அடைந்து ஒரு 'சாண்' வயிற்றின் வேதனையை



தமிழ் விழாவுக்கு விஜயம் செய்திருந்த பொதுமக்கள் கூட்டத்தின் ஒரு பகுதி.

உணர்ந்திருக்கும் அந்த வேளையிலேயே 'பரிசுகள் வழங்குவதை' வைத்துக் கொள்ளப் போகிறார்கள் என்ற செய்தி ஆச்சரியத்தையே அளித்தது.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி* அவர்களது ஸ்ரீராமகிருஷ்ண உபநிஷதம் என்ற நூலுக்குக் கிடைத்த பரிசுப் பத்திரத்தை ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் பெற்றுக் கொண்டார்கள். பரிசுத் தொகை ரூ. 500 ராஜாஜியின் வேண்டுகோளின் பேரில் ராமகிருஷ்ண மடத்துக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டு விட்டது என்று அறிவிக்கப்பட்டபோது சபையோரின் கரகோஷம் சென்னையையே எட்டி யிருக்கும் போலிருந்தது! சென்னை எழுத்தாளர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ பி. கோதண்டராமனும் [இயற்கை விஞ்ஞானம், விவசாயம்) கலைமகள் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதனும் (சிறு கதை) பரிசுகளையும், ஸ்ரீ தியாகராசன் (கவிதை) பாராட்டுப் பத்திரத்தையும் நேரில் மௌனப் புன்னகையுடன் பெற்றுக் கொண்டார்கள்.

* * *

பிற்பகல் தாமதமாக ஆரம்பமாகிய நிகழ்ச்சியில் சொல்லாலும், இசையாலும், படங்களாலும் கலைத் தேவியை உருவாக்கிக் காண்பித்தார்கள். கலைப் பகுதிக்குத் தலைமை வகித்த ஸ்ரீ கி. சந்திரசேகரன் கலை பரிமளிப்பதற்கு வேண்டிய ஸஹிருதயம், கலையம்சம், ஆத்மானந்தம், கற்பனை இவற்றைப் பற்றித் தனது நீண்ட தலைமையுரையில் கூறியபோது கலையை அனுபவிப்பதற்குக் கால எல்லையே கிடையாது என்பதை எல்லோரும் உணர்ந்தனர். தமிழ்ப் பண்களைப் பற்றிய தனது ஆராய்ச்சியை ஸ்ரீ டி. கே. ஜயராமய்யர் இசையிலே வடித்தார். புதைபொருள் ஆராய்ச்சிக் கூடத் தலைவர் மாமல்லபுரம், நாகப்பட்டினம், சிதம்பரம் முதலிய இடங்களிலுள்ள தென்னிந்தியச் சிற்பங்களைப் புகைப் படத்துடன் விளக்கியபோது தமிழர்களின் உள்ளங்கள் பெருமிதத்தால் பூரித்தன.

கலை மேடை மறு க்ஷணம் விஞ்ஞான மேடையாக மாறியது. தலைமை வகித்த கணித மேதை (இராமானுஜக் கணிதக் கல்லூரி) ஸ்ரீ டி. விஜயராகவன், ஜெர்மன் நிபுணர் 'ஜார்ஜ் காண்ட்டோரின்' என்பவரது கணக்காராய்ச்சியைப் பற்றித் தூய தமிழில் விவரித்தார்.

டாக்டர் ராஜம்மாள் தேவதாஸின் ரஸத்தைப் பற்றிய உணவாராய்ச்சியைக் கேட்ட தமிழர்கள் தேசிய கலையை ஒட்டியாவது ரசத்துக்கு முழுக்குப் போட்டு விடுவார்கள் என்பது திண்ணம். வெறும் அரிசிச் சாதத்தைப் போட்டபோது எலிகள் வளர்ச்சியின்றிப் பிறந்த மேனிக்கு இருந்தனவாம்! போனால் போகிறது என்று கொஞ்சம் ரஸம் சேர்த்துக் கொடுத்தார்களாம்! ஒரு நாள் வந்து பார்த்தபோது கூடுகள் முழுவதும் எலிக் குஞ்சுகள் மயமாக இருந்ததாம்!

விழா இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் 'நன்றியுரை'யை ஆரம்பித்தார். இதனால் திருப்தி அடையாமல் ஸ்ரீ ஒ. வி. அழகேசனும் இந்தப் பணியில் துணை புரிந்து விழாவைச் சிறப்பித்த எல்லாருக்கும் வந்தனங்களை வள்ளல்போல் வாரி வழங்கினார்.

'ஔவையார்' இல்லாத தமிழ் இலக்கியம் ஏது! அதை ஒட்டி ஔவையார் கலந்து கொள்ளாத தமிழ் விழா சிறக்காது என்ற காரணத்திற்காக விழாவின் கடைசி அம்சமாக ஔவையார் திரைக் காட்சியும் ஏற்படுத்தி யிருந்தார்கள். ஜெமினியின் அற்புதத் திரை ஓவியத்தைக் கண்ட உள்நாட்டு மந்திரி கனம் ஸ்ரீ கே. என். கட்ஜு அவர்கள் பரவசமடைந்தார் என்பது அவரது பாராட்டுத் தலைமையுரையிலிருந்து புலனாயிற்று. படக் காட்சியைப் பார்த்து விட்டு வெளி வந்தவர்கள் எல்லாம் ஒரே வார்த்தையைத் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். 'அற்புதம்' 'அற்புதம்' என்ற புகழுரையைத்தான்!

இந்த விழா இவ்வளவு விமரிசையாக நடைபெற்றதற்கு யாரைப் புகழ்வது என்றே தெரியவில்லை. நிர்வாகிகள் யார் யார் என்றுகூடத் தெரிவிக்காமல் ஓயாமல் தொண்டர் குழாம் வேலை செய்து கொண்டே இருந்தது. டெல்லித் தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனைப் பாராட்டுவதா, தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் ஸ்ரீ அவினாசிலிங்கத்தைப் போற்றுவதா அல்லது ஸ்ரீ ஒ. வி. அழகேசனை வாழ்த்துவதா என்று திகைப்பாக இருக்கிறது. காரியதரிசிகளாகப் பம்பரம்போல் சுழன்று பணியாற்றிய ஸ்ரீமான்கள் நாகரத்தினம், ஆர். ரங்கராஜன், எம். ராமநாதன், கே. நாராயணஸ்வாமி, டி. ராமய்யா முதலியவர்களது தொண்டு மறக்க இயலாதது. பூர்ணம் விசுவநாதன், சதுமுகன், சுந்தா, ராஜி, கணபதி ராமன், ரா. நாராயணன், எஸ். சீனிவாசன், அ. வெ. கிருஷ்ணமூர்த்தி, ஆர். கே. சேது போன்ற இடைவிடாது பணியாற்றும் ஊழியர்கள் இருக்கும்போது தமிழ்த் திருவிழா விமரிசையாக நடப்பதற்குக் கேட்பானேன்!

* * *

செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதி டில்லி ரயில்வே ஸ்டேஷனில் தன்னை இடித்துத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த மகஜனக் கூட்டத்தை டிக்கட் பரிசோதகர் வியப்புடன் பார்த்தார். 'தமிழ் விழா'வில் கலந்து கொண்டவர்களை வழியனுப்ப வந்த ஜனத்திரள் அது என்று அறிந்து நிம்மதி அடைந்தார்.

# பொன்னியின் செல்வன்

## கல்கி

### அத்தியாயம் 40

### "நான் கொன்றேன்!"

திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் சோழ வம்சாவளியை விவரிக்கும்போது, "வானுலகைப் பார்க்கும் ஆசையினால் ஆதித்தன் அஸ்தமனத்தை அடைந்தான். உலகில் கலி என்னும் காரிருள் சூழ்ந்தது!" என்று கூறப்பட்டிருக்கிறது. வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரனாகிய சோழ சாம்ராஜ்யத்துப் பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலன் அகால மரணமடைந்தது பற்றித்தான் அவ்வாறு திருவாலங்காட்டுச் செப்பேட்டில் பொறிக்கப் பட்டிருக்கிறது.

ஆதித்த கரிகாலன் மரண முற்றுக் கிடந்த கடம்பூர் அரண்மனையின் அறையில் அப்போது உண்மையாகவே காரிருள் சூழ்ந்திருந்தது.

காளாமுகத் தோற்றங் கொண்டவனால் கழுத்து நெறி பட்டுத் தரையில் தடாலென்று தள்ளப்பட்ட வல்லவரையனுடைய உள்ளத்திலும் அவ்வாறே சிறிது நேரம் இருள் குடிகொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த உள்ளத்தில் ஒளி தோன்றிய போது, நினைவு வரத் தொடங்கியபோது, அவன் கண்களும் விழித்தன. ஆனால் அவனைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த இருளின் காரணத்தினால் அவனுடைய கண்ணுக்கு எதுவும் கோசரம் ஆகவில்லை. ஆதலின், அவன் எங்கே இருக்கிறான், என்ன நிலைமையில் இருக்கிறான் என்பதும் அவன் உள்ளத்தில் புலப்படவில்லை.

மண்டையை வலித்துக் கொண்டிருந்த உணர்ச்சி முதலில் ஏற்பட்டது. கழுத்து நெறிபட்ட இடத்திலும் வலி தோன்றியது. மூச்சு விடுவதற்குத் திணற வேண்டியிருந்ததை அறிந்தான். இந்த மண்டை வலி எப்படி வந்தது? இந்தக் கழுத்து வலி எதனால் ஏற்பட்டது? மூச்சு விடுவதற்கு ஏன் கஷ்டமாயிருக்கிறது? ஆகா! அந்தக் காளாமுகன்! அவனைத் தான் கண்டது உண்மையா? அவன் தன் கழுத்தை நெறித்துக் கொல்ல முயன்றது உண்மையா? எதற்காகக் கழுத்தை நெறித்தான்? தான் சத்தம் போடுவதைத் தடுப்பதற்காகவா? தன்னை அப்பால் நகர வொட்டாமல் தடுப்பதற்காகவா? ஏன்? ஏன்? அவனுடைய இரும்புப் பிடியை மீறிக் கொண்டு தான் போக விரும்பியது எங்கே? ஆகா! நினைவு வருகிறது! ஆதித்த கரிகாலரிடம் போவதற்காக! ஐயோ! அவர் கதி என்ன ஆயிற்று? நந்தினி என்ன ஆயினாள்? ரவிதாஸன் என்ன செய்தான்? தன்னைத் தடுக்கப் பார்த்துத் தரையில் தள்ளிய காளாமுகன் பிறகு என்ன செய்திருப்பான்?.........தான் இப்போது இருப்பது எங்கே? பாதாளச் சிறையிலா? சுரங்கப் பாதையிலா? கண் விழிகள் பிதுங்கும்படியாக வந்தியத்தேவன் சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தான். ஒன்றுமே தெரியவில்லை! கடவுளே! இப்படியும் ஓர் அந்தகாரம் உண்டா?.........தான் விழுந்த இடம் நந்தினியின் அந்தப்புர அறையில், யாழ்க் களஞ்சியத்தின் அருகில் என்பது நினைவு வந்தது. அங்கேயே அவன் கிடக்கிறானா? அல்லது வேறு எங்கேயாவது தூக்கிக் கொண்டு போய்ப் போட்டு விட்டிருக்கிறார்களா? இதை எப்படித் தெரிந்து கொள்வது?

இரண்டு கைகளையும் நீட்டித் துழாவிப் பார்த்தான். ஒரு பொருள் கைக்

குத் தட்டுப்பட்டது. அது என்ன? கத்தி போல் அல்லவா இருக்கிறது? ஆம்; கத்திதான்! திருகு மடல் உள்ள கத்தி! சாதாரணக் கத்திகளைவிட மிகச் சக்தி வாய்ந்தது! எவன் பேரிலாவது பாய்ந்தால், அவன் செத்தான்! இம்மாதிரி விசித்திரமான கத்தியை எங்கேயோ பார்த்தோமே? அது எங்கே? யார் கையில் பார்த்தோம்!...ஆம்! இடும்பன்காரியின் கையில் அல்லவா பார்த்தோம்! அன்று முன்னிரவில் நடந்தவையெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன! இந்தக் கத்தி இங்கே எப்படி வந்தது? ஓ! இதன் மடல் ஈரமாயிருக்கிறதே! ஈரம் எப்படி வந்தது? தண்ணீரா? இல்லை! எண்ணெயா? அதுவும் இல்லை! இரத்தமாகத்தான் இருக்க வேண்டும்! ஐயோ! யாருடைய இரத்தம்? ஒருவேளை தன்னுடைய இரத்தமேதானோ? வந்தியத்தேவன் தன் பின் மண்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அங்கேயெல்லாம் வலித்ததே தவிர, இரத்தம் வந்ததாகத் தெரியவில்லை. உடம்பில் வேறு எங்கும் கத்திக் காயத்தின் வலி இல்லை!......பின், இந்த முறுக்குக் கத்தியின் மடல் யாருடைய இரத்தத்தைக் குடித்து விட்டு இங்கே நம் அருகில் கிடக்கிறது? இதனால் அவன் யாரையும் காயப்படுத்தவில்லை. இதற்கு முன் அவன் கையினால் அதை எடுத்ததும் இல்லை! பின்னே யார் அதை உபயோகித்திருப்பார்கள்! இடும்பன்காரியாயிருக்குமா? அவன் யார்மேல் இதைப் பிரயோகித்திருப்பான்? ஒருவேளை இடும்பன்காரிதான் அந்தப் பயங்கரத் தோற்றங் கொண்ட காளாமுகனின் வேடத்தில் வந்தானோ? இல்லை! இல்லை! அப்படியிருக்க முடியாது! இடும்பன்காரி அவ்வளவு நெடிதுயர்ந்த உருவம் கொண்டவன் அல்ல......

இது என்ன? காலடிச் சத்தமா? யாராவது வருகிறார்களா? பேசாமல் இருக்கலாமா? குரல் கொடுக்கலாமா? வருகிறவர்கள் கையில் விளக்குடன் வரக்கூடாதோ? எங்கே இருக்கிறோம் என்றாவது தெரிந்து கொள்ளலாம் அல்லவா? இருட்டில் தெரியாமல் தன்னை மிதித்து விடப் போகிறார்களே?......

இந்த எண்ணம் தோன்றியதும் வந்தியத் தேவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். கையில் அந்தச் சிறிய கத்தியை ஆயத்தமாக வைத்துக்கொண்டு "யார் அங்கே?" என்று கேட்டான்.

அவனுடைய குரல் ஒலி அவனுக்கு அளவில்லாத வியப்பை அளித்தது. அதை அவனாலேயே அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை. அவனுடைய குரலாகவே தோன்றவில்லை. அந்தக் காளாமுகன் பிடித்த பிடியினால் அவனுடைய தொண்டைக்கு இந்தக் கேடு நேர்ந்திருக்கிறது. சத்தம் வெளியில் வருவதே கஷ்டமாயிருக்கிறது.

மறுபடியும் ஒரு தடவை "யார் அங்கே?" என்று உரக்கச் சத்தமிட்டுக் கேட்க முயன்றான். ஏதோ அதுவும் ஓர் உறுமல் சத்தமாக வந்ததே தவிர, குரல் ஒலியாகவே தோன்றவில்லை.

மீண்டும் காலடிச் சத்தம் விரைவாகக் கேட்டு நின்றது. வந்தவர் அவனுடைய குரலைக் கேட்டுப் பேயோ பிசாசோ என்று பயந்து வந்த வழியே திரும்பிப் போய் விட்டார் போலும்.

இதை எண்ணி வந்தியத்தேவன் சிரிக்க முயன்றான். சிரிப்புக் குரலும் அம்மாதிரி உருத்தெரியாமலே தான் ஒலித்தது.

சரி; இனி உட்கார்ந்திருப்பதிலோ, காத்திருப்பதிலோ பயனில்லை. எழுந்து நடந்து எங்கே இருக்கிறோம் என்று சோதித்துப் பார்க்க வேண்டியதுதான்.

எழுந்து நின்றான்; கால்கள் தள்ளாடின. ஆயினும் சமாளித்துக் கொண்டு நடந்தான். கைகளை எவ்வளவு நீட்டினாலும் ஒன்றும் தட்டுப் படவில்லை.

தூரத்தில் ஏதோ சிறிது பளபள வென்று தெரிந்தது. ஆகா! அது நிலைக் கண்ணாடி போல் அல்லவா இருக்கிறது? அதில் எங்கிருந்தோ மிக மெல்லிய ஒளிக்கிரணம் ஒன்று பட்டதினால் அது பள பளக்கிறது. ரவிதாஸன் கையில் புலியின் உடலை எடுத்துக் கொண்டு நுழைந்த தோற்றம் அந்தக் கண்ணாடியிலே பிரதிபலித்தது வந்தியத் தேவனின் நினைவுக்கு வந்தது. சரி, சரி! நந்தினியின் அந்தப்புர அறைக்குள்ளேதான் இன்னமும் இருக்கிறோம். ஆனால் ஏன் இங்கே இப்படி இருள் சூழ்ந்திருக்கிறது? ஏன் நிச்சப்தம் குடிகொண்டிருக்கிறது? இந்த அறையில் சற்று முன்னால் இருந்தவர்கள் அத்தனை பேரும் என்ன ஆனார்கள்?

இவ்விதம் எண்ணமிட்டுக் கொண்டே வந்தியத் தேவன் இருட்டில் தடுமாறிக் கொண்டு நடந்தான். வாசற்படிக் கருகில் போனால் ஒருவேளை வெளிச்சம் இருக்க

லாம்,—அல்லது அங்கிருந்து வெளியேறி யாரையாவது கேட்டு நடந்ததைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு சென்றான்.

ஏதோ காலில் தடுக்கவே மறுபடியும் தடால் என்று விழுந்தான். ஆனால் இம் முறை ஏதோ மிருதுவான பொருளின் மீது விழுந்தபடியால் பலமாக அடிபட வில்லை. அந்த மிருதுவான பொருள் புலியின் தோல் என்று தெரிந்தது. ரவிதாஸன் கையில் எடுத்துக் கொண்டு வந்து எறிந்த புலித் தோல்மீது அவன் விழுந்திருக்க வேண்டும்......

தடுமாறி விழுந்தபோது கையிலிருந்த கத்தி நழுவி விட்டது; அதைக் கண்டு பிடித்து எடுத்துக் கொள்வதற்காகக் கையை நீட்டித் துழாவினான். கையில் மிருதுவாக ஏதோ தட்டுப் பட்டது. வந்தியத் தேவனுடைய உடம்பெல்லாம் நடுங்கியது. ரோமங்கள் குத்திட்டு நின்றன; நெஞ்சில் பீதி குடிகொண்டது.

அப்படியும் இருக்க முடியுமா என்று எண்ணிக் கொண்டே மறுபடியும் தடவிப் பார்த்தான்.

ஆம்; அது ஒரு மனித உடல்தான்! அவன் கையில் தட்டுப்பட்டது அந்த மனிதனின் உள்ளங் கை! புலித்தோலை உடனே அகற்றித் தூர எறிந்தான். பிறகு உற்றுப் பார்த்தான். கண்ணுடியில் விழுந்த இலேசான ஒளி பிரதி பலித்துக் கீழே கிடந்த உடலையும் சிறிது புலப்படுத்தியது. ஐயோ!

இளவரசர் ஆதித்த கரிகாலர் அல்லவா கிடக்கிறார்? அவர் அல்ல! அவருடைய உயிர் அற்ற உடல்தான் கிடக்கிறது!

வந்தியத்தேவனுடைய நெஞ்சு விம்மித் தொண்டையை அடைத்துக் கொண் டது. கண்களில் அவனை அறியாமல் கண்ணீர் ததும்பியது.

நடு நடுங்கிய கைகளினால் கரிகால ருடைய உடம்பின் பல பகுதிகளையும் தொட்டுப் பார்த்தான். சிறிதும் சந்தே கத்துக்கு இடம் இல்லை. உயிர் சென்று விட்ட வெறுங் கூடுதான்!

அந்த உயிரற்ற உடம்பின் விலாப் பக்கத்திலிருந்து பெருகிப் பக்கத்தில் வழிந்திருந்த இரத்தம் அவனுடைய கைகளை நனைத்தது.

அச்சமயம் அவனுக்குக் குந்தவைப் பிராட்டியின் நினைவு உண்டாயிற்று. அந்த மாதரசி அவனை எதற்காக அனுப்பி வைத்தாளோ, அந்தக் காரியத் தில் அவன் வெற்றி அடையவில்லை. முழுத் தோல்வி அடைந்தான்! இனி அவள் முகத்தில் விழிப்பது எங்ஙனம்?

அவனால் எவ்வளவு பிரயத்தனம் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய் தாகி விட்டது. ஆனாலும் பயன்பட வில்லை. விதி வென்று விட்டது!

இளவரசரின் உயிரற்ற உடலை எடுத் துத் தன்னுடைய மடியிலே போட்டுக் கொண்டான். மேலே என்ன செய்வது என்று தெரியவில்லை. சிந்திக்கும் சக்தி யையே இழந்து விட்டான். சத்தம் போட்டு அலறுவதற்குத் தொண்டையி லும் சக்தி இல்லாமற் போய்விட்டது.

"இளவரசர் இறந்து விட்டார்; ஒப் புக் கொண்ட காரியத்தில் நாம் வெற்றி பெறவில்லை; குந்தவையின் முகத்தில் இனி விழிக்க முடியாது!" என்னும் இந்த எண்ணங்களே திரும்பத் திரும்ப அவன் மனத்தில் வந்து கொண்டிருந்தன.

இவ்வாறு எண்ணிக் கொண்டு அவன் எத்தனை நேரம் அங்கே உட்கார்ந்திருந் தான் என்பது அவனுக்கே தெரியாது.

தீவர்த்தி வெளிச்சத்துடன் மனிதர்கள் சிலர் அந்த அறையை நெருங்கி வருகி றார்கள் என்பதைக் கண்ட பிறகுதான் அவனுக்கு ஓரளவு சுய நினைவு வந்தது.

கரிகாலருடைய உடலைத் தன்னுடைய மடியிலிருந்து எடுத்துக் கீழே வைத்து விட்டு எழுந்து நின்றான்.

பத்துப் பன்னிரண்டு ஆள்கள் முன் வாசற் பக்கமிருந்து வந்தார்கள். அவர் களில் இருவர் தீவர்த்தி பிடித்துக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் வேல் ஏந்திக் கொண்டு வந்தார்கள்.

எல்லாருக்கும் முன்னால் கந்தமாறனும் அவனுக்கு அடுத்தாற் போல் பெரிய சம்புவரையரும் வந்தார்கள்.

வந்தவர்கள் எல்லாருடைய முகங் களும் பயப் பிராந்தியைக் காட்டின. தீவர்த்தி வெளிச்சத்தில் பேயடித்தவர் களைப் போல் காணப்பட்டார்கள்.

கந்தமாறனுடைய முகத்திலே மட்டும் கோபமும் ஆத்திரமும் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

அவன் வந்தியத்தேவனைப் பார்த்ததும் "அடே பாதகா! கொலைகாரா! சிநே கத் துரோகி! இராஜத் துரோகி! நீ தப்பித்துக் கொண்டு ஓடவில்லையா! போய் விட்டாய் என்றல்லவா நினைத் தேன்?" என்று கர்ஜனை செய்தான்.

பின்னர் பெரிய சம்புவரையரை நோக்கி, "தந்தையே! அதோ பாருங்கள் கொலைகாரனை! சிநேகிதன்போல் நடித்துப் பாதகம் செய்த பழிகாரனைப் பாருங்கள்! நம்முடைய வம்சத்துக்கு அழியாத களங்கத்தை உண்டு பண்ணிய சண்டாளனைப் பாருங்கள்! அவன் முகத் தோற்றத்தைப் பாருங்கள்! அவன் செய்த பயங்கரக் குற்றம் அவன் முகத்திலேயே எழுதி யுள்ளதைப்போல் பிரதிபலிப்பதைப் பாருங்கள்!" என்றான்.

சம்புவரையர் அதற்கெல்லாம் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் கீழே கிடந்த ஆதித்த



கரிகாலனுடைய உடலை அணுகினார். அதன் தலைமாட்டில் உட்கார்ந்து, சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "ஐயோ! விதியே! இது என் வீட்டிலா நேர வேண்டும்? விருந்துக்கு என்று அழைத்து வேந்தனைக் கொன்ற பழி என் தலையிலா சுமர வேண்டும்?" என்று புலம்பிக் கொண்டே தமது தலையில் படார், படார் என்று அடித்துக் கொண்டு புலம்பினார்.

கந்தமாறன், "தந்தையே! நம் குலத்துக்கு அந்தப் பழி ஒருநாளும் வராது! இதோ கொலைகாரனைக் கையும் மெய்யுமாய்ப் பிடித்திருக்கிறோம்! இவன் இளவரசரைக் கொல்வதற்கு உபயோகித்த கத்தி அதோ கிடப்பதைப் பாருங்கள்! அதில் இரத்தம் தோய்ந்திருப்பதைப் பாருங்கள்! முன்னால் நான் வந்து பார்த்த போது இவன் இல்லை, கத்தியும் இல்லை. ஓடப் பார்த்து முடியாமல் திரும்பி வந்து விட்டான்! ஒருவேளை இளவரசர் உடம்பில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிறதோ என்று பார்க்க வந்தான்போலும்! கத்தியால் குத்தியது போதாது என்று தொண்டையைத் திருகிவிட்டுப் போக வந்தான் போலும்! தந்தையே! இப்பேர்ப்பட்ட மகா பாதகனுக்கு,— சதிகாரத் துரோகிக்கு,— என்ன தண்டனை கொடுப்பது? எது கொடுத்தாலும் போதாதே?" என்று கந்தமாறன் பேசிக் கொண்டே போனான்.

வந்தியத்தேவன் ஏற்கெனவே தொண்டை நெறிந்து பேச முடியாதவனாயிருந்தான். கந்தமாறனுடைய வார்த்தைகள் அவனைத் திக்பிரமை கொள்ளச் செய்தன. தன்னைப் பிறர் கொலைகாரனாகக் கருதக் கூடிய நிலையில் அவன் இருப்பது அப்போதுதான் அவனுக்குத் தெரிய வந்தது. இளவரசனைக் குத்திக் கொன்ற குற்றத்தை யல்லவா இந்தக் கந்தமாறன் தன்மீது சுமத்துகிறான்? முன்னே இவன் முதுகில் நான் கத்தியால் குத்தியதாகச் சொன்னான். இப்போது இளவரசரை நான் கொன்று விட்டதாகவே சொல்கிறான்! நம் நிலை அப்படி இருக்கிறது! யாரும் சந்தேகிக்கக்கூடியதாக இருக்கிறது! ஆகா! அந்தப் பழுவூர் மோகினி,— அழகே வடிவான விஷப் பாம்பு,— இதற்காகவே திட்டமிட்டிருந்





தான் போலும்! இதற்காகவே தன்னைச் சில முறை காப்பாற்றினன் போலும்! குந்தவைப் பிராட்டியின் பேரில் இவளுக்கு உள்ள குரோதத்தை இவ்விதம் தீர்த்துக் கொண்டாள்! ஆகா! அந்தச் சௌந்தரிய வடிவங் கொண்ட பெண் பேய் எங்கே? எப்படித் தப்பித்தாள்? காரியம் முடிந்ததும் மந்திரவாதி ரவிதாஸன் முதலியவர்களோடு சுரங்க வழியில் தப்பி ஓடிவிட்டாள் போலும்!......

இவ்வாறு எண்ணமிட்ட வந்தியத்தேவன் சிந்தனை சட்டென்று இன்னொரு பக்கம் திரும்பியது! ஆதித்த கரிகாலரைத் தான் கொல்லவில்லை யென்பது நிச்சயம். ஆனால் வேறு யார் கொன்றிருப்பார்கள்? நந்தினியா? அல்லது ரவிதாஸனா? அல்லது காளாமுகனா?— ஒருவேளை தான் நினைவு மறக்கும் தறுவாயில் ஒரு கணம் தோன்றி மறைந்த மணிமேகலையாகத்தான் இருக்குமோ? அல்லது இந்த முறுக்குக் கத்தியை எடுத்து வந்தவனை இடும்பன்காரியாக இருக்குமோ? ஒருகால், கந்தமாறனே தான் நந்தினி மேல் கொண்ட மோகத்தினால் இந்தப் படுபாதகத்தைச் செய்துவிட்டு நம் பேரில் பழியைப் போடுகிறானா? அல்லது நந்தினி சொல்லிய அதிசயமான இரகசியத்தைக் கேட்டு விட்டுத் தன்னைத் தானே நொந்து கொண்ட ஆதித்த கரிகாலர் தற்கொலை செய்து கொண்டு இறந்தாரா?

கந்தமாறன், தன் பக்கத்தில் நின்ற ஆட்களைப் பார்த்து, "தடியர்களே! ஏன் சும்மா நிற்கிறீர்கள்? இந்தக் கொலைகாரனைப் பிடித்துக் கட்டுங்கள்!" என்று கத்தியதுந்தான் வந்தியத் தேவனுக்குத் தனது இக்கட்டான நிலைமை மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தது.

கந்தமாறனை அவன் இரக்கமும் துயரமும் ததும்பிய கண்களினால் பார்த்தான். ஒரு பெரு முயற்சி செய்து தொண்டையில் ஜீவனைத் தருவித்துக் கொண்டு, "கந்தமாறா! இது என்ன? நான் இத்தகைய கொடுஞ் செயலைச் செய்திருப்பேன் என்று நீ நம்புகிறாயா? எதற்காக நான் செய்ய வேண்டும்? எனக்கு என்ன லாபம் இதனால்? நண்பா!......." என்பதற்குள் கந்தமாறன், "சீச்சீ! நான் உன் நண்பன் அல்ல. அவ்விதம் கூறிய உன் நாவை அறுக்க வேண்டும். உனக்கு என்ன லாபம் என்றா கேட்கிறாய்? ஏன் லாபம் இல்லை? நந்தினியின் கடைக்கண் கடாட்சத்தைப் பெறலாம் என்ற ஆசைதான்! அடே! அந்தப் பழுவூர் மோகினி இப்போது எங்கே?" என்றான்.

"கந்தமாறா! உண்மையில் எனக்குத் தெரியாது. நான் இங்கே நினைவிழந்து கிடந்தேன். நீங்கள் வருவதற்குச் சற்று முன்புதான் நினைவு பெற்றேன். நந்தினி என்ன ஆனாள் என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை சுரங்கப் பாதை வழியாக வெளியேறி யிருக்கலாம். வேட்டை மண்டபத்தில் அவளுடைய ஆட்கள்,— வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள்,— நாலு பேர் காத்திருந்தார்கள். அவர்களுடன் நந்தினி போயிருக்கலாம்!"

கந்தமாறன், "ஓகோ! உன்னையும் ஏமாற்றி விட்டுப் போய் விட்டாளாக்கும். ஆனால் உனக்கு ஒன்றும் தெரியாது என்று சாதிக்க வேண்டாம். அதை யார் நம்புவார்கள்? நீ அவளுடைய மோக வலையில் விழுந்திருந்தாய், காலால் இட்ட காரியத்தைத் தலையினாலே முடிப்பதற்குத் தயாரா யிருந்தாய் என்பது எனக்குத் தெரியாதா? ஆதித்த கரிகாலரே சொல்லி யிருக்கிறார். நந்தினியும் அவரிடத்தில் உன்னைப் பற்றிய உண்மையைச் சொல்லி யிருக்கிறாள். அவள் தூண்டியோ, அவளுக்குத் திருப்தி தரும் என்று நினைத்தோ, நீ இந்தக் கொலை பாதகத்தைச் செய்து விட்டாய்! உன்னுடைய முகத்தில் விழித்தாலும் பாவம்!" என்றான்.

"கந்தமாறா! சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் இளவரசரைக் கொல்லவில்லை. அவர் உயிரைக் காப்பாற்றும் பொறுப்பைப் பழையாறை இளைய பிராட்டியிடம் நான் ஏற்றுக் கொண்டு வந்தேன்......"

"இவ்விதம் சொல்லித்தான் இளவரசரை ஏமாற்றினாய்! பிறகு வஞ்சகம் செய்து குத்திக் கொன்றாய்! இல்லாவிட்டால், இந்த அறைக்குள் எப்படி வந்து சேர்ந்தாய்? எதற்காக வந்தாய்?"

"கந்தமாறா! இளவரசருக்கு ஆபத்து வரப் போவதை யறிந்து அவரைப் பாதுகாக்க வந்தேன். அந்த முயற்சியில் தோற்றுப் போனேன். ஆனால் அது என் குற்றம் இல்லை. உன் தங்கை மணிமேகலையை வேணுமானால் கேட்டுப் பார்! அவள்தான் என்னை ......"

"சீச்சீ! என் தங்கையைப் பற்றிப் பேசாதே! அவள் பெயரையே சொல்லாதே! ஜாக்கிரதை! இனி அவள் பேச்சை எடுத்தால் தெரியுமா? உன் கழுத்தைப் பிடித்து நெறித்து இப்பொழுதே கொன்று விடுவேன்!"

இவ்விதம் கூறி விட்டுக் கந்தமாறன் வந்தியத்தேவன் மீது பாய்ந்து அவன் மார்பையும் தோள்களையும் சேர்த்துப் பிணைத்திருந்த கயிறுகளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினான்.

பின்னர், கீழே ஆதித்த கரிகாலன் உடலுக்கருகில் உட்கார்ந்து வேதனையில் ஆழ்ந்திருந்த சம்புவரையரைப் பார்த்து, "தந்தையே! இவனை என்ன செய்கிறது என்று சொல்லுங்கள்! நம் குலத்துக்கு அழியா அபகீர்த்தியை உண்டு பண்ணிய இந்தக் கொலை பாதகனை என்ன செய்கிறது என்று சொல்லுங்கள்! தாங்கள் அநுமதி கொடுத்தால் இவனை இந்த நிமிடமே கண்ட துண்டமாக்கிப் போடுகிறேன்! தந்தையே! சொல்லுங்கள்!" என்று கத்தினான்.

கரிகாலனுடைய உடலைத் தடவிப் பார்த்துக் கொண்டு பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்த சம்புவரையர் கந்தமாறனுடைய கூச்சலைக் கேட்டு அண்ணாந்து பார்த்தார்.

அவருடைய பார்வை கந்தமாறனுக்கு அப்பால் சென்றது. அந்த அறையிலே யிருந்த கட்டில் திரைச் சீலை அசைந்ததைக் கண்டார். மறு கணம் அத் திரைச் சீலையை விலக்கிக் கொண்டு ஓர் உருவம் வெளிப்படுவதைப் பார்த்தார். கண்களில் நீர் ததும்பி யிருந்த காரணத்தினால் திரைச் சீலையிலிருந்து வெளிப்பட்டு வந்தது யார் என்பதை அவர் உடனே தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் சிறிது அருகில் அந்த உருவம் வந்ததைக் கண்டதும் அவன் தனது செல்வக் குமாரி மணிமேகலை என்பதை அறிந்து கொண்டார். அதனால் அவருக்கு ஏற்பட்ட வியப்பும் அருவருப்பும் வேதனையுடன் கலந்து முகத்தில் தோன்றின.

"மணிமேகலை! நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று அவர் கேட்ட வார்த்தைகள், கந்தமாறனையும் திரும்பிப் பார்க்கும்படி செய்தன.

"அப்பா! நான் இங்கேயே தான் இருந்தேன். அவரை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று அண்ணனுக்குச் சொல்லுங்கள். அவர் பேரில் குற்றம் ஒன்றுமில்லை!" என்றாள்.

கந்தமாறன் "அப்பா! பார்த்தீர்களா? இந்தப் பாதகன் எப்படி என் தங்கையின் மனத்தைக் கெடுத்திருக்கிறான், பார்த்தீர்களா? இவன் பேரில் குற்றம் ஒன்றும் இல்லையாமே?" என்று சீறிக் கொண்டே சிரித்தான்.

"ஆம், அண்ணா! நிச்சயமாக இவர் பேரில் குற்றம் ஒன்றுமில்லை!" என்று மணிமேகலை உறுதியாகக் கூறினாள்.

கந்தமாறனை ஒரு பக்கம் ஆத்திரமும் இன்னொரு பக்கம் வெட்கமும் சேர்ந்து பிடுங்கித் தின்றன.

"தங்காய்! வாயை மூடிக் கொள்! உன்னை யார் இங்கே அழைத்தார்கள்? நீ இங்கே வந்திருக்கவே கூடாது. உன் புத்தி சுவாதீனத்தில் இல்லை. உடனே முன் கட்டுக்குப் போ! மற்றப் பெண்கள் உள்ள இடத்துக்குப் போ!" என்று கத்தினான் கந்தமாறன்.

"இல்லை, அண்ணா! என் புத்தி சுவாதீனத்திலேதான் இருக்கிறது. உன் புத்திதான் கலங்கிப் போயிருக்கிறது. இல்லாவிட்டால் இவர் இளவரசரைக் கொன்றதாக நீ குற்றம் சாட்டி யிருக்க மாட்டாய்!" என்றாள் மணிமேகலை.

கந்தமாறன், "அறிவு கெட்டவளே! இந்தக் கொலை பாதகனுக்கு நீ ஏன் பரிந்து பேசுகிறாய்?" என்றான்.

"அவர் கொலைபாதகர் அல்ல; அதனால் தான்!" என்றாள் மணிமேகலை.

கந்தமாறன் ஆத்திரச் சிரிப்புடன், "இவன் கொலைபாதகன் இல்லை என்றால், பின்னே யார்? இளவரசரைக் கொன்றது யார்? நீ கொன்றாயா?" என்றான்.

**"ஆம்! நான்தான் கொன்றேன்! இந்த வாளினால் கொன்றேன்!"** என்றாள் மணிமேகலை.

இந்த வார்த்தைகளைக் கேட்டு அங்கேயிருந்தவர்கள் அவ்வளவு பேரும் திகைத்துப் போனார்கள். அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டார்கள்.

ஒரு கண நேரத் திகைப்புக்குப் பிறகு கந்தமாறன் வந்தியத் தேவனை விட்டு விட்டு மணிமேகலையண்டை பாய்ந்து ஓடினான். அவள் கையிலிருந்த வாளைப் பிடுங்கிக் கொண்டான். அதன் நுனியை உற்றுப் பார்த்தான்.

"அப்பா! இதைக் கேளுங்கள். இவளால் இந்த வாளைத் தூக்கவே முடியவில்லை. இவள் இதனால் இளவரசனைக் கொன்றதாகச் சொல்லுகிறாள். இது இளவரசர் உடம்பில் பாய்ந்திருந்தால், திரும்ப இவளால் எடுத்திருக்க முடியுமா? இதன் நுனியில் பாருங்கள்! சுத்தமாய்த் துடைத்தது போலிருக்கிறது! வல்ல

வரையனைக் காப்பாற்றுவதற்காக இப்படிச் சொல்லுகிறாள்! இவன் பேரில் இவளுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? அவ்வளவு தூரம் இவளுடைய மனத்தை இந்தப் பாதகன் கெடுத்து விட்டிருக்கிறான். மாய மந்திரம் போட்டு மயக்கி விட்டிருக்கிறான்! அவனுடைய முகத்தைப் பாருங்கள்! அவன் செய்த குற்றம் அவன் முகத்திலேயே எழுதியிருப்பதைப் பாருங்கள்!" என்றான்.

உண்மையிலேயே வந்தியத் தேவன் முகத்தில் வியப்பும் திகைப்பும் வேதனையும் குடி கொண்டிருந்தன. இத்தனை நேரம் மௌனமாயிருந்தவன் இப்போது வாய் திறந்து, "கந்தமாறா! நீ சொல்வது உண்மைதான்! நான்தான் குற்றவாளி. உன் சகோதரி என்னைக் காப்பாற்றுவதற்காகவே இப்படிக் கற்பனை செய்து சொல்லுகிறாள்! இளவரசி! தங்களுக்கு நன்றி! என் உடலிலிருந்து உயிர் பிரிந்த பிறகும் தாங்கள் என்னிடம் வைத்த சகோதர பாசத்தை மறக்க மாட்டேன். ஆனால், தங்கள் தமையன் சொல்வதை இப்போது கேளுங்கள்! அந்தப்புரத்துக்குப் போய் விடுங்கள்!" என்றான்.

இதைக் கேட்ட கந்தமாறனுடைய குரோதம் சிகரத்தை அடைந்தது. முன்னமே சிவந்திருந்த அவன் கண்கள் இப்போது அனலைக் கக்கின.

"அடே! எனக்காக நீ சிபார்சு செய்யும் நிலைமைக்கு வந்து விட்டதா? நான் சொல்லிக் கேட்காதவள் நீ சொல்லித்தான் கேட்பாளா? இவள் உன்னிடம் அவ்வளவு சகோதர வாஞ்சை வைத்திருக்கிறாளா? இவள் என்னுடன் பிறந்தவளா? உன்னோடு பிறந்தவளா? என்னைக் காட்டிலும் உன்னிடம் இவளுக்கு மரியாதை அதிகமா? அது ஏன்? என்ன மாய மந்திரம் செய்து இவள் மனத்தை அவ்விதம் கெடுத்து விட்டிருக்கிறாய்? உன்னை நான் கொல்லுவதற்கு இதுவே போதுமே! இதோ, உன்னை யமனுலகம் அனுப்பிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்! உன் அருமைச் சகோதரி கையில் வைத்திருந்த வாளினாலேயே உன்னைக் கொல்லுகிறேன். அது உனக்கு மகிழ்ச்சி தரும் அல்லவா?"

இவ்வாறு கத்திக்கொண்டே கந்தமாறன் வாளை ஓங்கிக்கொண்டு வந்தியத் தேவன்மீது பாய்ந்தான். (தொடரும்)

# எங்கள் நன்றி

ஆகஸ்டு மாதம் 21-ம் தேதி செங்கற்பட்டு சரித்திரத்திலே ஓர் முக்கிய நாள். அன்று புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆதரித்துச் சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு வந்திருந்த ஜனத்திரளை இதற்கு முன் மகாத்மா காந்தியின் விஜயத்தின் போதுதான் கண்டோம். மேலும் நமது தாய்நாட்டுத் தவப் பயனாய் அவதரித்தவரும், தனிப் பெரும் தலைவரும், அறிவின் சிகரமும், ஆற்றலின் விளக்குமான ராஜாஜி அவர்களும், இம் மாகாண மக்களின் மனத்தில் மதிப்பிற்குரிய ஸ்தானம் பெற்றுள்ள நிதிமந்திரி சுப்பிரமண்யம் அவர்களும், சத்யமூர்த்தியின் சீடர், சொல்வன்மை தீரர், சட்டக் கலை நிபுணருமான சென்னை மேயர் டி. செங்கல்வராயன் அவர்களும், தமிழ் மக்களின் அன்பிற்கும், பண்பிற்கும் பாத்திரமான செம்புதந்த செல்வர் வெருளான கிராமணியார் அவர்களும், செங்கற்பட்டு ஜில்லாவுடன் உரிமையும் தொடர்பும் கொண்ட ஸ்ரீ எம். பக்தவத்சலம், ஸ்ரீ விஜயகம் ஆகியவர்களும், ஸ்ரீ வெங்கடாச்சாரியார், ஸ்ரீ ராஜாராம் நாயுடு, ஸ்ரீ வானம்பாடி மற்றும் பிரபல தலைவர்களும் அன்று விஜயம் செய்தது அத் தினத்தை மறக்க முடியாத ஓர் மகத்தான தினமாக்கி விட்டது.

ஏட்டுக் கல்வியுடன், உடல் உழைப்பின் உயர்வையும், மதிப்பையும் இளம் மாணவ மாணவிகள் அறிந்து அடையவும், நம் நாட்டின் ஜீவநாடிகளான கிராமங்களில் இன்றும் கல்வியின்மையால் கண்ணிருந்தும் குருடர்களாக இருக்கும் (52 சதவிகிதம்) குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட வகை செய்யவும், ஜாதி மத பேதங்களை நீக்கி, சமுதாயத்திலே சமத்துவம் ஏற்படுத்தவும் வழி செய்யும் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆதரித்து ஒரு மகாநாடும் அதை அடுத்துப் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

ராஜாஜியின் ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு மகத்தான ஆதரவு இம் மாகாண மெங்கும் உள்ளது. எதிர்ப்பவர்கள் சிலரே ஆயினும் அவர்கள் அதை அதிகப்படுத்திக் குழப்பம் விளைவிக்கப் பார்க்கிறார்கள். ஆகவே, ஆதரிப்பாளர்களின் குரல் இம்மாகாண மெங்கும் கேட்கட்டும் என்பதற்காகவே சேவாசங்கம் இம் மகாநாடு கூட்டிற்று. மகாநாட்டுக்கும், பொதுக் கூட்டத்துக்கும் வந்திருந்த பெருவாரியான ஜனத்திரளே புதிய கல்வித்திட்டத்தின் ஆதரவுக்குப் போதிய சான்றாகும்.

இம்மாதிரி மகா நாடுகள் நம் மாகாணமெங்கும் கூட்டப்பட வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள சமூகத் தொண்டு புரியும் ஸ்தாபனங்கள் இவ் விஷயத்தில் ஊக்கமும், உற்சாகமும் செலுத்தி ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்திற்கு ஆதரவும் வெற்றியும் அளிக்க வேண்டும்.


செங்கற்பட்டில் இம் மகாநாடு சிறப்பாக நடந்தேறியதற்கு எங்களுக்குப் பல துறைகளிலும் உதவியும், ஆதரவும் அளித்த செங்கற்பட்டு ஜில்லா டவுன் காங்கிரஸ் கமிட்டியார்களுக்கும், ஸ்ரீ என். ராமகிருஷ்ணய்யர் எம். எல். ஏ. அவர்களுக்கும், பொது மக்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செங்கற்பட்டு
1—9—53

சேவா சங்கத்தார்




CBK 12083 TAMIL



# இளவரசி பிரபா

**சீதா**

## 9. உன்னையே சரணடைந்தேன்

காட்டில் தனியாக விடப்பட்ட சங்கீத வித்வான் அங்கும் இங்கும் கொஞ்ச நேரம் அலைந்தார்.

அப்படி அலையும் போதெல்லாம் அவர் மூளை ரொம்பத் தீவிரமாக வேலை செய்தது! 'அந்தக் கிழவன் வீட்டில் ஒரு பெண் குழந்தையைப் பார்த்தோமே. அந்தப் பெண் முகத்தில் அரச களை தவழ்ந்ததே! ஒருவேளை அந்தக் கிழவன் சிறைப்படுத்தி வைத்திருக்கிறானோ! அது உண்மையாயின் அந்தக் குழந்தையை விடுதலை செய்து அழைத்துச் செல்ல வேண்டும்.

'நம் தேசத்தை இத்தனை நாள் அரசன் இருந்து அரசாண்டான் என்றால் இனி ஒரு அரசி யிருந்து ஆளட்டுமே! ராணி யின் ஆட்சியில் மக்கள் கூடச் சந்தோஷமாக இருப்பார்கள்! 'ராஜா, ராஜா ராஜா' என்று எதற்கெடுத்தாலும் ராஜா ஜபம் இத்தனை நாள் செய்து ஆகி விட்டது. இனி ஒரு ராணி யிருந்து ஆண்டால் மக்களுக்குக் கூடப் புதுமாதிரியாக இருக்கும் அல்லவா!

ஆகவே இந்தப் பெண்ணின் முழு வரலாற்றையும் அறிய வேண்டுமே! அதற்கு என்ன வழி?'

இப்படி யோசித்துக் கொண்டே ரொம்ப தூரம் நடந்து விட்டதில் அவர் கால்கள் தளர்ந்து விட்டன.

ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்தார். வயிறு பசித்தது; கண்கள் இருண்டன. சற்று நேரத்தில் கண்ணயர்ந்து விட்டார். எத்தனை நேரம் தூங்கினாரோ அவருக்கே தெரியவில்லை. கண் விழித்துப் பார்த்த போது, அவருக்கு மட்டும் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

அவர் தலை மாட்டில் ஒரு சோற்று மூட்டை யிருந்தது!

'அடாடா, யார் இந்தக் காட்டில் என் பசியை அறிந்து இவ்வளவு பரிவுடன் உணவை அளித்தார்களோ, அவர்கள் நீடூழி வாழட்டும்!' என்று வாழ்த்தி விட்டு மிக்க ஆர்வத்துடன் அந்தச் சோற்றைச் சாப்பிட்டார்.

எத்தனை நாட்கள் ஆயின அவர் அரிசிச் சோற்றைக் கண்டு. இன்று சாப்பிடக் கிடைத்ததில் அவருக்கு உண்டான ஆனந்தம் கொஞ்ச நஞ்சமல்ல.

குழந்தைகளுக்குச் சொல்லி முடியாத சந்தோஷம் ஏற்பட்டு விட்டால் துள்ளிக் குதித்துக் கும்மாளி போடும். பெரியவர்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள். வேறு விதமாகத் தங்கள் சந்தோஷத்தை வெளிப் படுத்திக் கொள்வார்கள். இதோ சங்கீத வித்வான் தம் சந்தோஷத்தை வெளிப் படுத்த மனம் விட்டுப் பலத்த குரலில் பாட ஆரம்பித்து விட்டார்.

கைகளை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டும், தொடையில் தாளம் போட்டுக் கொண்டும் பாட ஆரம்பித்து விட்டார். சாதாரணமாக அவர் பாட ஆரம்பித்தால் யாராகிலும் இரண்டு ரஸிகர்கள் எதிரில் உட்கார்ந்து தலையை ஆட்டினால்தான் அவருக்கு உற்சாகமாக இருக்கும். ஆனால் இப்பொழுது தன் எதிரில் யாருமில்லையே என்று அவர் சற்றும் நினைக்கவில்லை. அவர் பாடிக் கொண்டிருந்த பொழுது



மரங்கள் எல்லாம் காற்றில் அசைந்தாடின. அவற்றைப் பார்த்துச் சங்கீத வித்வான், தம் பாட்டைக் கேட்டுத்தான் மரங்கள் ரஸிக்கின்றன என்று நினைத்துப் புளகாங்கித மடைந்தார்.

ரொம்ப நேரம் பாடிக் கொண்டிருந்தார். அவர் தொண்டை வலிக்க ஆரம்பித்தது. 'சரி, பாடியது போதும்' என்று தீர்மானித்து நிறுத்தி விட்டுத் திரும்பினார்! அவருக்கு ஒரே வியப்பாகப் போய் விட்டது. ஏனெனில் அவருக்குப் பின்னால் நின்று இளவரசி பிரபா பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள் என்பதை இப்பொழுதுதான் அறிந்தார்.

ஆனால் பிரபாவைப் பார்த்ததும், "நீ அந்தக் கிழவன் வீட்டில் இருந்த பெண் தானே?" என்று கேட்டார்.

"எங்கள் தாத்தாவை, கிழவன் என்றெல்லாம் சொல்லாதீர்கள்! அவருக்குக் கோபம் வந்தால் என்ன செய்வார் தெரியுமா? அவர் ஒரு மந்திரவாதி என்பதும் நினைவிருக்கட்டும்!" என்றாள் பிரபா.

அவன் ஒரு மந்திரவாதி என்றதும் சங்கீத வித்வான் அப்படியே பயந்து போய் விட்டார். என்ன மாய மந்திரங்கள் எல்லாம் செய்வானோ அந்தக் கிழவன் என்று நடுங்கி விட்டார்.

"அப்படியானால் உன் தாத்தாவை நான் ஒன்றும் குறை சொல்லவில்லை, அம்மா! உன் பெயர் என்ன சொல்லு!" என்று கேட்டார்.

"என் பெயர் பிரபா!" என்றாள் இளவரசி பிரபாவதி.

"உனக்கு பாட்டு ரொம்பப் பிடிக்குமா?"

"ஆமாம்; அதுவும் நந்தகுமாரன் என்று ஒரு பையன் இந்தக் காட்டில் வந்து புல்லாங்குழல் வாசிப்பான். எவ்வளவு அருமையாக இருக்கும் தெரியுமா? தினம் அவன் எனக்கு வாசித்துக் காண்பிப்பான்! அவன் இப்போ எங்கே யிருக்கிறானோ என்ன செய்கிறானோ?" என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

"அவன் பெயர் என்ன சொன்னாய், நந்தகுமாரனா? அவன் எப்படி யிருப்பான் சொல்லு, பிரபா!" என்றார் சங்கீத வித்வான் ஏதோ யோசித்த வண்ணம்.

"அழகாக இருப்பான்; களை பொருந்திய முகம்; நீண்ட மூக்கு; அகன்ற கண்கள்; பரந்த நெற்றி; அந்த நெற்றியில் கூட இடது பக்கம் பெரிய மச்சம்..."

"இடது பக்கந்தானே. பேஷ்! பிரபா! அவன் என்னிடம் சிஷ்யனாக இருந்து சங்கீதம் கற்றுக் கொள்ளுகிறான். அவனை நீ பார்க்க வேண்டுமா? என்னுடன் வருகிறாயா, பிரபா! உனக்கு அவனைக் காண்பிக்கிறேன்" என்றார் சங்கீத வித்வான்.

பிரபா, நீண்ட பெருமூச்சு விட்டு விட்டுச் சும்மா இருந்தாள்!

"என்ன பிரபா, நான் சொல்லுவது உன் காதில் விழவில்லையா? உன்னுடைய சிநேகிதனைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் இல்லையா? என்னுடன் வந்து விடு பிரபா!" என்றார்.

"நான் இந்தக் காட்டை விட்டு நகரக் கூடிய நிலையிலிருந்தால், எத்தனையோ நாட்களுக்கு முன்பு நந்தகுமாரனுடன் சென்றிருப்பேனே" என்றாள்.

"ஏன் நீ வர முடியாதா?"

"நான் வருவேன்; என் தாத்தாவின் மந்திர சக்தி என்னைப் போக விடாது. நாற்றெட்டு இடையூறுகள் விளையும்" என்று கூறி விட்டுப் பிரபா அவ்விடத்தை விட்டு அகன்று போய் விட்டாள்.

சங்கீத வித்வான் ரொம்பநேரம் யோசித்தார். ஒன்றும் தோன்றவில்லை. இந்தப் பிரபா, பாவம்! சிறிய பெண். இந்தக் கிழவனிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறாளே! இவளுக்கு எப்படியாகிலும் விடுதலை வாங்கித்தர வேண்டுமே என்று யோசித்தார்.

அத்துடன் தம் சிஷ்யன் தான் காட்டில் ஒரு பெண்ணைப் பார்த்ததாகவும் அவள் ஒரு கொடியவனின் சிறையில் அகப்பட்டுத் தவிப்பதாகவும் கூறுவானே! அந்தப் பெண் இவள்தானோ என்று நினைத்தார். அடுத்த கணம் அவர் உள்ளத்தில் ஆயிரம் குரல்கள் 'இவளேதான்! இவளேதான்!' என்று எழுந்தன.

அப்படியானால் எப்படியும் இவளை மீட்டுக் கொண்டுதான் தேசம் திரும்புவது என்று தீர்மானித்தார். அடுத்தாற்போல் "சங்கீதமே, உன்னிடம் மயங்காதவர் இல்லை; மானும் மாடும் கண்ணனின் வேய்ங்குழல் ஓசையில் மயங்கின என்றால், இந்த மந்திரவாதியின் உள்ளமா உருகாது! சங்கீத வாணியே, உன்னையே சரணடைந்தேன். நீதான் என் காரியத்தைக் கைகூடச் செய்ய வேண்டும்" என்று இனிய குரலில் பாடிப் பிரார்த்தித்தார். (தொடரும்)

# புது ஆரம்பக் கல்வித் திட்டம்

நாட்டின் ஜனத் தொகை நாளுக்கு நாள் விஷம் போல் ஏறி வருகிறது. படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்துள்ளது. பட்டதாரிகள் ஒட்டிய கன்னங்கள், உலர்ந்த உதடுகள், கூன் விழுந்த முதுகு, சோர்வுற்ற நடை இவைகளுடன் காட்சியளிக்கிறார்கள். வெறும் 'ஏட்டுக் கல்வி' கற்றவர்களிடையே விவசாய வேலைகள், குடிசைத் தொழில்கள் இவைகளில் ஈடுபடுவது கேவலம் என்ற மனோபாவம் நிறைந்திருக்கிறது. அவர்களுக்குப் போதிய அநுபவமும் இல்லை.

கைத் தொழில் வளரும், உழவுத் தொழிலும் ஆக்கம் பெற்றால்தான் நவபாரதம் பொருளாதார முன்னேற்றம் காண இயலும். மாணவச் சிறார்களிடையே தொழிலை இழிவாக நினைக்கும் மனப்பான்மை மறைய வேண்டும்.

புதிய கல்வித் திட்டம் ஏழ்மை காரணமாகப் பள்ளிக்கூடத்திற்கு வர முடியாத முப்பத்தைந்து லட்சம் மாணவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு வரச் செய்வதற்கு வழி வகுத்துள்ளது. உழைப்பாளிகளின் குழந்தைகள் எளிதில் மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்துக்கு வர முடியும். அதன் பயனாக் கல்வி கற்கும் ஏழை மக்களின் குழந்தைகள் உயர்ந்த கல்வி பயின்று அறிவாளிகளாகி நாட்டுப் பணி புரிய வாய்ப்பு ஏற்படும்.

தொழிலாளியின் அந்தஸ்து உயர்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய எல்லா மக்களும் அரசாங்க உத்தியோகத்துக்கு ஆசைபட்டால் பெரும் ஏமாற்றமடைந்து தொழில் அநுபவமும் குன்றி வாழ்க்கைச் செலவுகளுக்கே திண்டாட வேண்டிய இழிநிலை ஏற்படும்.

கிராம மக்கள் எல்லோரும் விவசாயக் கலையை விருத்தி செய்து அதோடு கூட நிறைந்த கல்வியையும் ஒருங்கே அமையப் பெற்றுச் சிறந்த இந்திய பிரஜைகளாக மிளிரக் கூடிய சிறிய வாய்ப்பை இந்தப் புது ஆரம்பக் கல்வித் திட்டம் அளிக்கிறது.

ஜனநாயகம் மிளிர்கின்ற அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், நவீன பொதுவுடைமைக் கொள்கை ஆக்கம் பெற்றுள்ள ருஷ்யாவிலும் பாலர்கள் பயிலும் பள்ளிக்கூடப் படிப்பு நேரம் மூன்று மணியே யாகும்.

மகாத்மா காந்தி, கவியரசர் தாகூர், பெர்னார்ட் ஷா, லிவிங்ஸ்டன் இன்னோரன்ன பேரறிஞர்களின் ஆய்வுரைகளும் 'கல்வித் திட்டத்தின் கண் உழைப்பு, குணசீலங்கள், நிதர்சனமுறை, செயலாற்றல் இவைகள் இடம் பெற வேண்டும் என்றே வலியுறுத்தி யிருக்கின்றன.

ஆகையால் கிராமவாசிகள் எல்லோரும் ஆசிரியர்களுடன் ஒத்துழைத்துப் புதுக் கல்வித் திட்டத்தை வெற்றியுறச் செய்ய வேண்டும்.

திருப்புறம்பயம் பி. சின்னசாமி
25—8—53 தலைமை ஆசிரியர், போர்டு பாடசாலை

# என்ன ஆச்சரியம்!

சர்க்கஸ் கூடாரத்தில் பிரம்மாண்டமான கூட்டம் கூடியிருந்தது. சிங்கம், புலி, கரடி, நாய்கள், யானைகள் எல்லாம் பல வித வேடிக்கைகளைச் செய்து காண்பித்தன. ஜனங்கள் ஆரவாரித்தனர்.

சர்க்கஸின் கடைசிக் காட்சி ஒரு பயில்வானின் வீர சாகஸங்கள் என்று முன்னதாக அறிவிக்கப் பட்டிருந்தது. ஆகவே ஜனங்கள் அக் குறிப்பிட்ட காட்சியைப் பார்க்க மிகவும் உற்சாகத்தோடும் ஆவலோடும் காத்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் கடைசிக் காட்சி ஆரம்பமாயிற்று. நல்ல உடற் கட்டுடன் இருந்த சர்க்கஸ் பயில்வான் வெளியே வந்து தம் வித்தைகளை ஆரம்பித்தார்.

அவர் தமது மார்பில் ஒரு பெரிய பாறையை நாலு பேர்கள் உதவியைக் கொண்டு தூக்கி வைக்கச் செய்து அதைச் சில நிமிஷங்கள் தாங்கி ஜனங்களை அதிசயத்தில் ஆழ்த்தினர்; பிறகு யானையைத் தன் மார்பின் மீது காலை வைத்து நடக்கச் சொன்னர். இம்மாதிரி எத்தனையோ!

எல்லா வித்தைகளும் முடிந்தன. கடைசி வித்தை ஆரம்பமாயிற்று.

பயில்வான் ஒரு பெரிய எலுமிச்சம் பழத்தை எடுத்து நறுக்கி ஒரு பாதியை எடுத்துக் கொண்டு தம் பலம் முழுவதையும் செலுத்திப் பிழிந்தார்.

பிறகு அவர், "மகா ஜனங்களே, இந்த எலுமிச்சம் பழத்தை நான் பிழிந்து விட்டேன். இந்தச் சபையில் யாராவது பலசாலிகள் இருந்தால் அவர்கள் அரங்கத்துக்கு வந்து, நான் பிழிந்து விட்ட இந்த எலுமிச்சம் பழத்தில் இன்னெரு சொட்டுச் சாறு பிழிந்து விட்டால் அவர்களுக்கு ரு. 50, இனம்!" என்று வெற்றி மிடுக்கோடு சவால் விட்டு ஆர்ப்பரித்தார்.

சபையில் யாரும் எழுந்திருக்க வில்லை. சில விநாடிகள் மௌனமாய்க் கழிந்தன.

பதினறு, பதினைந்து வயது மதிக்கத் தகுந்த ஒரு மெலிந்த சிறுவன் கூட்டத்திலிருந்து அரங்கத்துக்குப் போனன்.


பயில்வான் கையில் இருந்த, பிழியப் பட்ட எலுமிச்சம் பழச் சக்கையை வாங்கி அந்தப் பையன் பிழிந்தான். என்ன ஆச்சரியம்! அந்தச் சக்கையிலிருந்து ஒரு சொட்டுச் சாறு விழுந்தது!

பயில்வான் அயர்ந்து போய், "தம்பி நீ யார்? உன்னைப் பார்த்தால் பயில்வானகத் தெரியவில்லையே!" என்று கேட்டார்.

"நான் பயில்வான் இல்லை. வட்டிக் கடை துவாரகாநாத்தின் பிள்ளை!" என்று அந்தப் பையன் பதில் அளித்தான்.

பயில்வான் ஐம்பது ரூபாயை அவனிடம் கொடுத்தார். ஆனல் அவருக்கு ஏற்பட்ட பிரமை நீங்கவில்லை. —விஜயம்

## மேயர் மகன் திருமணம்



சென்ற ஆகஸ்டு மாதம் 20உ சென்னை மேயர் ஸ்ரீ டி. செங்கல்வராயன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி டி. சி. ராம்குமாருக்கும், ஸ்ரீ ஜம்புலிங்கம் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ராஜகுமாரிக்கும், சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள "இந்திரப் பிரஸ்தம்" என்ற மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

திருமணத்துக்கு முதன் மந்திரி ராஜாஜி, சென்னைக் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா, மற்றுமுள்ள மந்திரிகள், நீதிபதிகள், பார்லிமெண்டு அங்கத்தினர்கள், சட்டசபை அங்கத்தினர்கள், கார்ப்பரேஷன் அதிகாரிகள், பிரமுகர்கள் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர்.



அன்று மாலை ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதரின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ந்தது.

வாழ்க, ராம்குமார்–ராஜகுமாரி

# இனி
# போலி தயாரிப்புகளுக்கு வழியில்லை




எங்கள் பிரசித்தி பெற்ற டாய்லட் தயாரிப்புகளைப் போல் கள்ளத்தனமாகப் பல போலி சரக்குகள் துர்விநியோகம் செய்யப்பட்டு வருவதால், எங்கள் தயாரிப்புகளின் பாக்கிங்கை அடியோடு மாற்றி விட்டோம்.

மூடி கையாட முடியாதபடி உறுதி வாய்ந்தது. மூடி தளர்ந்தோ அல்லது உடைந்தோ இருக்கும் பாட்டில்களை வாங்காதீர்கள்.

லேபிள் சிறிது மாற்றப் பட்டுள்ளது. பாட்டிலில் உள்ள வாசனை ரகத்தின் பெயர் லேபிளின் மேல் அச்சிடப்பட்டுள்ளது. சுலபமாக கண்டு கொள்வதின் பொருட்டு "கலர் ஸ்கீம்" முன்பிருந்தபடியேதான் இருக்கிறது.

பாட்டில், மேல் பாகத்திலும் அடியிலும் வளையங்களுடன், தெளிவாக தெரியும்பொருட்டு விசேஷ வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வேறு எவரும் இதை உபயோகிக்காத வண்ணம் ரிஜிஸ்டர்டு செய்யப்பட்டுமுள்ளது.



பாட்டிலின் அடியில் ரிஜிஸ்டர்டு நம்பரும், 'டாம்கோ' என்ற பெயரும் இருக்கிறது.

நீங்கள் அடுத்த முறை வாங்கும் போது, இப் புதிய அம்சங்களைக் கவனமாகப் பார்த்து, போலிகளைத் தவிருங்கள்.


## டாம்கோ


தேங்காயெண்ணை ஷாம்பூ
பரிமள காஸ்டர் கேச தைலம்
பரிமள கூந்தல் தேங்காயெண்ணை

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



1
2
3
4





## ஜெயப்பிரகாஷ் விஜயம்

★ ★ ★

1. சென்னை நகர சபை அளித்த வரவேற்பில் "பூதானம்" கோரினார் ஜெயப்பிரகாஷ். 2. "நாங்கள் கிரக தானம் அளிக்கிறோம்" என்றார் மேயர். 3. பூதானத்துடன் சில இடங்களில பூமாலைகளும் கிடைத்தன. 4. கும்பகோணத்தில் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அளித்த விருந்தில் கையெழுத்துத் தானம் வழங்கினார். 5. மேயரும் உதவி மேயரும் கமிஷனரும் நகரசபை வாசலில் விடையளித்தார்கள். 6. கும்பகோணம் முனிசிபல் சேர்மன் ஸ்ரீ குஞ்சிதபாதம் செட்டியாரின் உபசரிப்பு. 7. "கல்கி" ஆசிரியரின் இல்லத்தில் சமூகத் தொண்டர்கள் சிலரைச் சந்தித்தார்.





இப்பொழுது... இந்த
டால்கம் பௌடர் அந்த
உஷக்காலப்
புதுமையை
நாள் முழுதும் நிலைத்
திருக்கச்செய்கிறது!
அவ்வளவு
அவ்வளவு
தவிர, அவ்வளவு
பாண்ட்ஸ்
டால்கம் பௌடர்

# தமிழ்க் களஞ்சியம்

**டி. கே. சி**

## 35. கவிக் கலையின் பண்பாடு

கலைகள் இந்த உலகத்தில் எத்தனையோ, எண்ணிறந்தன. சமையல் ஒரு கலை. தமிழ் நாட்டிலுள்ள சமையலைப் பற்றி உலகத்திலேயே சிறந்தது இது என்று பதார்த்தங்களைப் பகுத்துணர்ந்த நிபுணர்கள் சொல்லுகிறார்கள். நமக்கு அனுபவத்தில் கண்ட விஷயங்கள் அவை. குழம்பில் எத்தனையோ விதம். ரஸம் என்றால் எத்தனையோ விதம். கறி வகைகளும் அப்படியே!

இவ்வளவையும் கண்டு மறந்து போகாமல் தொடர்ச்சியாகப் பாதுகாத்து வந்திருக்கிறார்களே தமிழர்கள், — என்று வியக்கிறார்கள் மேலே சொன்ன நிபுணர்கள்.

இது சம்பந்தமாக இன்னொரு விஷயமும் தெரியும் அந்த நிபுணர்களுக்கு. இந்தச் சமையல் கலை உருப் பெற்று வளர்ந்து விளங்குவதற்கு ஆயிரக் கணக்கான வருஷம் ஆகியிருக்கிறது என்பதும் தெரியும். இனி.

நம்முடைய தமிழ் நாட்டில் வழங்கி வருகிற ராகங்களும் அவைகளால் சங்கீதமும் (பாட்டும்) உருப்பெற்று விளங்குவதற்குப் பல்லாயிர வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அப்படியானால் அதன் பண்பாடு உலகத்திலேயே சிறந்தது என்று உலகத்து இசை வல்லார் சொல்லுவதில் வியப்பில்லை. சங்கீதம் இருக்கட்டும் அப்படி.

* * *

கலையிலெல்லாம் கலை கவி. தமிழ்க் கவியின் அற்புதமான அமைப்பை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் கடவுளுடைய சிருஷ்டியைத்தான் சொல்ல வேண்டும். வாழைப் பூ அமைந்திருக்கிற அற்புதம்தான் என்ன!—உள்ளும் புறமுமாக, மாதுளம் பழம் அமைந்துள்ள அற்புதம்தான் என்ன! இந்த இரண்டு வஸ்துக்களைக் கொண்டு கடவுளுடைய அற்புதச் சிருஷ்டியை ஒரு வகையாய் உற்று நோக்கி அனுபவிக்க முடியும்.

கிட்டத்தட்ட தெய்வப் புலமையோடு கூடிய கவிகளிலும் இந்த அற்புதத்தைப் பார்க்கிறோம். ஆம், அமைப்பு அத்தனை அதிசயம்தான்.

கவியாகிய கலை வளர்வதற்குப் பல்லாயிர வருஷம் வேண்டியிருக்கிறது. அப்படி வளர்ந்தது தமிழ்க் கவி.

மதுரையில் பாண்டியனது சங்கம் ஆயிரக் கணக்கான வருஷமாகவே தமிழ்க் கவியை வளர்த்து வந்தது. உயர்ந்த அற்புதமான கவிகள். அது காரணமாகப் பாண்டி நாட்டில் அபூர்வமான ரத்னங்கள் போல ஆங்காங்கு ஒளித்துக் கொண்டிருந்தன. அக்கம் பக்கத்து இதர நாட்டிலிருந்து வந்தவர்களுக்குப் பாண்டிய நாட்டுக் கவி வளம் ஒரு அதிசயமாகவே இருந்தது. அப்படி வளர்த்திருந்தார்கள் கவிக் கலையை.

மதுரையில் உண்டான ஒரு கவியைப் பார்க்கலாம். காதல் கவி.

பாண்டியனிடம் காதல் கொண்டாள் ஒரு பெண்.

பாண்டியனுக்கு உரியது பொதிகை மலை. அங்கே சந்தனக் கட்டையின் வளம். (ஆரம் = சந்தனக்கட்டை) சந்தனம் பூசுவது பாண்டியனுக்கு அந்தக் காலத்து அரிய நாகரிகம்.

கொற்கையும் பாண்டியனுக்கு உரிய இடம். முத்துச் சலாபம் குளிக்கிற இடம். உலகத்திலேயே சிறந்த முத்துக்களைக் கோத்து அணிந்திருந்தான் என்பதில் என்ன அதிசயம்?

இன்னொரு சரித்திர விஷயம். பர்மாவுக்கும் (தேவேந்திரனுடைய உலகம் என்று பர்மாவை அந்தக் காலத்தில் உபசரிப்பது வழக்கம்.) பாண்டி நாட்டுக்கும் வர்த்தகத் தொடர்பு இருந்து வந்தது. பர்மா அரசன் ஒருவன் அருமையான நவரத்னங்களைக் கோத்த ஒரு ஆரத்தைப் பாண்டியனுக்கு அனுப்பியிருந்தான். உலகத்திலேயே அது சிறந்த ஆரமாய் இருந்தது. அந்த ஆரத்தையும் வெகு காலமாகப் பாண்டியர்கள் பந்தோபஸ்தாய்ப் பார்த்து வந்தார்கள். முக்கிய

மான விழாக்களில் அதை அணிந்து கொலு வீற்றிருப்பார்கள், பவனியும் வருவார்கள். இனி கவிக்கு வரலாம்:

காதல் என்பது ஒரு வெறி: அது என்ன விளையாட்டெல்லாமோ விளையாடும். வார்த்தைகளைக் கொண்டும் விளையாடும். அந்த விளையாட்டைப் பார்க்கலாம்:

கோவா மலையாரம்

சந்தனம் பூசியிருந்தான் பாண்டியன் என்பது குறிப்பு.

கோத்த கடலாரம்

முத்து மாலையை அணிந்திருந்தான் பாண்டியன் என்பது பொருள்.

"கோவா மலையாரம்
கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம்

இவைகள் பாண்டியனுடைய மார்பில் உள்ளன என்று சொல்லுவதில் காதல் ரஸம் நிறைகிறது. மிக அருமையான பாடல்:

கோவா மலையாரம்
கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம்
தென்னர்கோன் மார்பினவே.

இத்தகைய பாடல்கள் உண்டாவதற்கு உயர்ந்த தமிழ்க் கவிகளோடு பாண்டிய நாட்டுப் புலவர்கள் பாடித் திளைத்திருக்க வேண்டும்.

## ★ ★ ★ ★ ★ ★ ★ மணி விழா ★ ★ ★ ★ ★ ★ ★

தமிழறிஞரும் சமூக சீர்திருத்தத் தந்தையுமாகிய திரு சொ. முருகப்பாவின் மணிவிழா 23-8-53 ஞாயிறன்று காரைக்குடி நகரத்து மதாபிமான சங்கத்தில் செட்டி நாட்டரசர் திரு ராஜா சர். முத்தய்யா செட்டியார் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. கட்டிடத்தின் முன்பு அலங்காரமாக அமைக்கப் பெற்றிருந்த சிங்காரப் பந்தலில் விழா வெகு சிறப்புடன் நடைபெற்றது. செட்டிநாடு முழுவதிலிருந்தும் மற்றும் தமிழக மெங்குமிருந்தும் ஏராளமான ஆண்களும் பெண்களும் விழாவுக்கு வந்திருந்தனர். முதலில் திரு சொ. முருகப்பாவையும் விழாத் தலைவரையும் பண்டைய தமிழ் நாட்டு வழக்கப்படி மேளதாளத்துடனும் மரியாதைக் குண்டுகளுடனும் குதூகலமாக வரவேற்று மகிழ்ந்தனர்.



இறை வணக்கத்துக்குப் பின், சங்கத் தலைவர் திரு அ. ராம - ராம. ராமநாதன் செட்டியார் விழாத் தலைவருக்கு வரவேற்பிதழ் ஒன்றை வாசித்தளித்தார். சங்கத்தின் சார்பில் திரு முருகப்பாவுக்கு வாழ்த்து இதழ் ஒன்றை அன்பர் திரு ராய. சொக்கலிங்கம் வாசித்தளித்தார்.

திரு சொ. முருகப்பாவின் 60 ஆண்டு நினைவாகச் சங்கத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட 60 வாழ்த்துக்களும் 61 பக்கங்களும் கொண்ட மணிவிழா மலர் ஒன்று ராய. சொக்கலிங்கம் அவர்களால் அன்புக் காணிக்கையாக திரு சொ. முருகப்பா அவர்களுக்கு வழங்கப் பட்டது. அதில் ராஜாஜி, திரு. வி.க., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியவர்களின் பாராட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.

புதுவயல் ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தார், கல்லுப்பட்டி செட்டியார் இளைஞர் சங்கத்தார் ஆகிய பல ஸ்தாபனங்களின் சார்பில் திரு முருகப்பாவுக்கு வாழ்த் துரைகள் வழங்கப் பெற்று மலர் மாலைகளும் கதர் மாலைகளும் அணிவிக்கப் பெற்றன.

முருகப்பாவின் மணிவிழாவிற்குத் தலைமை தாங்கிய செட்டி நாட்டரசர், ராஜா சர் முத்தய்யா செட்டியார் குறிப்பிட்டதாவது:—

தமிழிசைப் பணியில் என் தந்தையாருடன் திரு முருகப்பா அருந் தொண்டாற்றினர். அவர் தம் பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் சமூகத்துக்குப் பெருந் தொண்டு செய்து ஓரளவு வெற்றியும் கண்டார். துணிவுள்ளவர்கள் தான் எக்காரியத்தையும் சாதிக்க முடியும். திரு முருகப்பாவின் சிறந்த பண்பு அதுவே யாகும். தமக்குச் சரியென்று படுவதைச் சொல்லவும் செய்யவும் மிகுந்த துணிவும் அஞ்சா நெஞ்சமும் படைத்தவர். சமூக சீர்திருத்த வீரர். அவர் தொடங்கிய அந்தச் சமூக சீர்திருத்தத்தைப் பாராட்டுவதற்குக் காரைக்குடியில் 1953-ம் ஆண்டு இறுதிக்குள் செட்டியார் சமூக மகாநாடு கூட்டப் பெற வேண்டும் என்று கூறி அந்தக் கூட்டத்திலேயே ஆயிரத்து ஓர் ரூபாய் கொடுத்தார்கள்.

திரு சா. கணேசன் அவர்கள் முதுமையும் இளமையும் ஆண்டினால் அமைபவை அல்ல. உள்ள உறுதியும் எண்ணத் தூய்மையுமே இளமையைத் தரும் என்றும், முருகப்பா கடவுள் நம்பிக்கை உடையவர்தான். என்றாலும் சமூகத்திலிருக்கும் மூட நம்பிக்கைகளையும் குருட்டு வழக்கங்களையும் அறவே வெறுத்தவர் என்று கூறினர்.

காரைக்குடி நகரசபைத் தலைவர் திரு கரு. அப்பய்யா அம்பலம் முதலிய பல அன்பர்கள் சொ. முருகப்பா அவர்களின் சமூக சீர்திருத்த சேவையைப் பாராட்டிப் பேசினார்கள்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுதல்களுக் கெல்லாம் திரு சொ. முருகப்பா அவர்கள் நல்ல முறையில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.


கடைசியாகச் செயலாளர், திரு பழ. மெ. மெ. பழ. வெங்கடாசலம் செட்டியார் நன்றி கூற மணி விழா இனிது முடிந்தது.



WHAT HAVE THESE IN COMMON?
எந்தப் பொருளையும் சீதோஷ்ண ஸ்திதியின் தன்மைக்
கேற்பப் பாதுகாப்பது என்பது எல்லா உற்பத்தி
யாளர்களுக்கும் பெரிய பிரச்னைதான்.
வியக்கத் தக்க முறையில் உல
கப் பிரசித்தி பெற்ற ஸ்பார்ட்
டன், பண்டங்களின் பாதுகாப்
புப் பிரச்னையை மிகவும் சுலப
மாகவும் அழகாகவும் தீர்த்து
வைக்கிறது. பண்ட உற்பத்தி
யாளர்கள் இதை நன்கு
அறிந்திருப்பதனால் எப்போதும்
ஸ்பார்ட்டன் சரக்குகளையே
வாங்கி உபயோகிக்கிறார்கள்.
Spartan
INDUSTRIAL FINISHES
SILVER
உங்கள் உள்ளூர் வியாபாரியைக் கேளுங்கள். அல்லது எங்களுக்கு எழுதுங்கள்
Addisons Paints & Chemicals Ltd.
Madras-11.
டிஸ்ட்ரிபூட்டர்களும் ஸ்டாக்கிஸ்டுகளும் இந்தியா முழுவதும் உள்ளனர்


நாள் முழுவதும்
தெம்பூட்டி
நறுமணம்
அளிப்பது
கேரளா
ஸான்டல்வுட் சோப்
கேரள
சோப் இன்ஸ்டிட்யூட்
கோழிக்கோடு
சென்னை இண்டஸ்ட்ரீஸ் &
காமர்ஸ் டிபார்ட்மென்டின் பகுதி.


வெள்ளிக்கோட்டை
கூடிய
ஸைகிள் டயர்
GOODYEAR
குட்இயர்
டிலக்ஸ்
சைகிள் டயர்களும்
டியூப்களும்



# சிபாரிசுக் கடிதம்

டி. ஜி. எஸ்

'அரோஹரா பாங்கி'யின் காஷியர் இரவோடிரவாய்ப் பத்தாயிரம் ரூபாயைச் சுருட்டிக் கொண்டு ஓடி விட்டார் என்ற செய்தி காதில் விழுந்ததுமே சுரு சுருப் படைந்தான் ராகவன்.

பி. ஏ. பரீட்சை பாஸ் செய்த நாளாகவே அவனுக்கு ஏதாவது பாங்கியிலே வேலை செய்ய வேண்டுமென்ற ஆவல். ஆனால் அந்தனை நாள் வரை அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காமலிருந்தது. இப்போது ஒரு அயனான சந்தர்ப்பம் வாய்த்திருக்கும்போது அவன் சும்மா இருப்பானா?

அவன் எதிர் பார்த்தபடி ஒரு வாரத்திற்குள்ளாகவே பிரபல பத்திரிகையொன்றிலே அரோஹரா பாங்கிற்குக் காஷியர் வேண்டுமென்ற விளம்பரம் வெளியாகியிருந்தது.

'பி.ஏ. பாஸ் செய்தவராயும் கணக்கு எழுதுவதில் அனுபவமுள்ளவராயும், மூவாயிர ரூபாய் 'டிபாசிட்' கட்டக் கூடியவராயும் இருக்கவேண்டும். அதுவுமின்றி நாணயமுள்ள பெரிய மனிதர் ஒருவரிடமிருந்து சிபாரிசுக் கடிதம் வாங்கி வர வேண்டும்' என்று இருந்த நிபந்தனைகள் ஒரு நிமிடம் அவனைத் தயங்க வைத்தன.

அவனுக்கு 'அக்கௌண்ட்ஸ்' அனுபவம் இருந்தது. மூவாயிரம் ரூபாய் 'டிபாசிட்' கட்டவும் அவனுக்கு வசதியிருந்தது. ஆனால் அந்தச் சிபாரிசுக் கடிதம், அதற்கு எந்தப் பெரிய மனிதரைப் பிடிப்பது?

ராகவனுக்குத் தெரிந்தவர்கள் எல்லோரும் 'சின்ன மனிதர்'களாயிருந்தார்களே தவிர சிபாரிசுக் கடிதம் கொடுக்கக் கூடிய பெரிய மனிதர்களாயில்லை.


ராகவன் யோசித்தான். திடீரென்று அவனுக்குக் கோபாலனின் நினைவு வந்தது.

'அட! கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறேனே! கோபாலனைப் பிடித்தால், எத்தனை சிபாரிசுக் கடிதம் வேண்டுமானாலும் வாங்கித் தருவானே?' என்ற எண்ணம் எழுந்தபோது அவன் அரோஹரா பாங்கியில் வேலை கிடைத்து விட்டதாகவே மகிழ்ந்தான்.


கோபாலன் உள்ளூரில் பிரபல சங்கீத சபைக் காரியதரிசி. ராகவனின் அந்தியந்த நண்பன். அவனுக்குத் தெரியாத பெரிய மனிதர்கள் யாருமே இல்லை.

ராகவன் அவனிடம் விஷயத்தைப் பிரஸ்தாபித்ததும், "பூ! இவ்வளவு தானா? எங்கே நீ 'டிபாசிட்' பணத்தைத்தான் புரட்டித் தரச் சொல்லப் போகிறாயோ என்று நினைத்தேன். சிபாரிசுக் கடிதத்தைப் பற்றிக் கவலைப் படாதே, உன்னை இந்திரன் சந்திரன் என்றெல்லாம் வர்ணித்து எழுதித் தரச் சொல்கிறேன் ஒருவரை" என்றான்.

ராகவன் மகிழ்ச்சியுடன் திரும்பினான். மறு நாளே கோபாலன் சிபாரிசுக் கடிதத்தை வாங்கிக் கொடுத்தான். ஊரில் அதைக் கொடுத்த பெரிய மனிதரைத் தெரியாத



சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ நடராஜாக் கல்விக் கழகத்தில் தமிழ்ப் பெரியார் திரு வி. க. வின் பிறந்த நாள் விழா ஆகஸ்டுமாதம் 26-ம் தேதியன்று டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த திரு எஸ். சச்சிதானந்தம் பி. ஏ. எல். டி., ஸ்ரீமதி ஆர். ராஜரத்தினம் எம். ஏ. எல். டி. ஸ்ரீமதி பார்வதி முதலியவர்களையும் கழக உறுப்பினரையும் படத்தில் காணலாம்.



சென்ற பதினைந்து ஆண்டுகளாக விழுப்புரம், மகாத்மா காந்தி பாடசாலை ஸ்ரீ பெ. க. லட்சுமணசுவாமி அவர்களின் நிர்வாகத்தின் கீழ் மிகத் திறமையாக நடைபெற்று வருகிறது. மேற்படி பள்ளிக்கூடத்தில் சுமார் 800 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். மாணவர்கள் படிக்க விசாலமான கூரைக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. சென்ற வருஷம் தீபாவளியின் போது திடீரென்று பள்ளியின் கூரைக் கட்டிடங்கள் தீக்கிரையாகி விட்டன. பள்ளிக்கூடத்துக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது.

தீயினால் பாதிக்கப்படாத நல்ல கட்டிடம் கட்டி மாணவர்கள் கல்வி பயில வேண்டும் என்ற ஆர்வத்தில் ஸ்ரீ லட்சுமணசுவாமி அவர்கள் பொது மக்களிடம் நிதி திரட்டினார். கிடைத்த நிதியைக் கொண்டு செங்கல்லும் சுண்ணாம்பும் கலந்த, தீயினால் பாதிக்கப்படாத ஒரு கூடம் அமைத்தார். அந்தக் கூடத்தின் திறப்பு விழா 2-9-53-அன்று திரு வி. ஆர். நாகராஜன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அறநிலையப் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ வெங்கடசாமி நாயுடு அவர்கள் கூடத்தைத் திறந்து வைத்தார்கள்.

இது போன்று இன்னும் இருபத்து நான்கு கூடங்கள் கட்டினால்தான் பள்ளிக்கூடத்தை நல்ல முறையில் நடத்த முடியும் என்று ஸ்ரீ லட்சுமணசுவாமி கூறுகிறார். பணமும் மனமும் படைத்த தமிழ் மக்கள் மேற்படி பள்ளிக்கூடத்துக்குத் தாராளமாய் உதவக் கேட்டுக் கொள்கிறோம். பொருள் உதவி செய்ய விரும்புவோர் "ஸ்ரீ பெ. க. லட்சுமணசுவாமி, நிர்வாகி, மகாத்மா காந்தி பாடசாலை, விழுப்புரம்" என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

வர்களே கிடையாது. அவருக்கு மத்திய அரசாங்கத்தில் கூடச் செல்வாக்கு உண்டு என்று சொல்லுவார்கள்.

பாங்கியின் மேல் அதிகாரிகளைச் சந்திப்பதற்குக் குறிப் பிட்டிருந்த தேதியிலே ராகவன் அரோஹரா பாங்கிற்குப் போயிருந்த போது மற்றும் ஐந்து பேர்களே அங்கு 'இண்டர்வ்யூ'விற்கு வந்திருந்தனர். மூவாயிரம் ரூபாய் 'டிபாஸிட்' கட்ட வேண்டுமென்றால் எத்தனை பேரால் முடியும்?

ராகவன் அவர்களிடம் பேச்சுக் கொடுத்த போது அவர்களில் ஒருவனுக்கும் 'அக்கௌண்ட்ஸ்' அனுபவம் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டான். அதுவுமில்லாமல் அவர்கள் வாங்கி வந்திருந்த சிபாரிசுக் கடிதங்களைப் பற்றி என்னவென்று சொல்வது? அவற்றைக் கொடுத்தவர்கள் பெரிய மனிதர்கள் என்றால், ராகவன் நண்பர்கள் எல்லாருமே பெரிய மனிதர்கள்தான்!

ராகவன் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டான். 'பைத்தியங்கள்! எதற்கு இங்கு காத்திருந்து நேரத்தை வீணாக்குகிறார்கள்...' என்ற நினைவில் எழுந்தது அந்தச் சிரிப்பு.

பத்து மணிக்குச் 'சந்திப்பு' ஆரம்பமாயிற்று.

ஒவ்வொருவராக உள்ளே போய் அரை மணி நேரம் இருந்து விட்டு முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு வெளியேறினர்.

ஐந்தாவதாக வந்தது ராகவனுக்கு அழைப்பு.

அவனைச் சில கேள்விகள் கேட்டார் மானேஜர். அவைகளுக்கு அவன் அளித்த பதில் அவருக்குத் திருப்தி அளித்தது.

"உங்களைப் போன்ற ஆள்தான் வேண்டும் எங்களுக்கு. ஹ்ம். சிபாரிசுக் கடிதம் ஏதாவது கொண்டு வந்திருக்கிறீரா? காஷியர் வேலை பாருங்கள்! ஒரு தரம் அனுபவப் பட்ட பிறகு இவ்விஷயத்தில் நாங்கள் கொஞ்சம் கண்டிப்பாகவே யிருக்க வேண்டியுள்ளது" என்றார் மானேஜர் புன்னகையுடன்.

'இந்தச் சிபாரிசுக் கடிதத்தைக் கண்டதும் நீங்கள் அயர்ந்து தான் போவீர்கள்' என்று எண்ணிய படியே ராகவன் 'கோட்' பையிலே பத்திரமாய் வைத்திருந்த சிபாரிசுக் கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்டினான்.

அதைப் பார்த்த மானேஜர் உண்மையிலேயே அயர்ந்துதான் போய் விட்டார்!

பாவம்! அவன் எந்தப் பெரிய மனிதரிடமிருந்து சிபாரிசுக் கடிதம் கொண்டு போயிருந்தானோ அந்தப் பெரிய மனிதர் தான் அரோஹரா பாங்கியின் ஓடிப்போன காஷியருக்கும் சிபாரிசுக் கடிதம் கொடுத்திருந்தார். அதனால்தான் மானேஜர் அயர்ந்து போனார்!



# இருள் அகன்றது!

ஆர். எஸ். மணி



"உங்க அருமை அக்கா கடுதாசி எழுதி இருக்கான். பாருங்கோ" என்று வெறுப்புடன் கூறிய வண்ணம் கையில் வைத்திருந்த கடிதத்தைத் தன் கணவனிடம் கொடுத்தாள் கமலம். ஆபீஸ் உடைகளைக் கழற்றிக் கொண்டிருந்த கோபாலய்யர் தம் சகோதரி ராஜத்திடமிருந்து கடிதம் வந்திருக்கும் செய்தியைக் கேட்டு ஆச்சரிய மடைந்தார்.

"ராஜம் என்ன எழுதி இருக்கிறாள்?" என்று கேட்டுக் கொண்டே அக்கடிதத்தைக் கையில் வாங்கினார்.

"நீங்களே படிச்சுப் பாருங்கோ" என்று சற்று வெறுப்புடன் கூறிவிட்டு உள்ளே சென்றாள் கமலம்.

கோபாலய்யர் அவள் கொடுத்த கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்:

கோபாலனுக்கு ராஜம் அநேக ஆசீர்வாதம்.

இங்கு யாவரும் க்ஷேமம். கமலம், மீனாட்சி, மற்றும் உன் குழந்தைகள் க்ஷேமமா? மதுரைமீனாட்சி அம்மனின் கிருபையினால் ராமு இந்த வருஷம் 'மெட்ரிகுலேஷன்' பாஸ் செய்து விட்டான். அவன் மேலே படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஆனால் என் நிலைமைதான் உனக்குத் தெரியுமே? பணத்திற்கு எங்கே போவது? ஆகவே அவன் படிப்பை இத்துடன் நிறுத்திவிட உத்தேசித்து இருக்கிறேன். இவ்வளவு நாட்கள் வரை எப்படியோ கஷ்டப்பட்டுக் காலம் கழித்து விட்டோம். இனிமேல் அவன் எங்கேயாவது உத்தியோகம் பார்த்து நாலு காசு சம்பாதிக்க ஆரம்பித்தால்தான் கஷ்டமில்லாமல் வாழ முடியும். ராமுவைச் சென்னைக்கு அனுப்பி வைக்கிறேன். நீதான் அவனுக்கு ஏதாவது வேலை பார்த்து வைத்து அவனை ஒரு மனிதனாக்க வேண்டும். என் குடும்பத்தின் விளக்கு உன்னால் தான் எரிய வேண்டும். இது விஷயத்தில் உன்னையே பூரணமாய் நம்பி இருக்கிறேன். உன்னாலான உபகாரத்தைச் செய்வாய் என்று எண்ணுகிறேன்.

இப்படிக்கு,
ராஜம்.

பல வருஷங்களுக்குப் பிறகு தன் சகோதரியிடமிருந்து வந்த கடிதத்தைக் கண்ணுற்றுச் சற்று நேரம் வரையில் மௌனமாக நின்று கொண்டிருந்தார் கோபாலய்யர்.

"ஆமாம்! உங்களுக்கு என்ன செய்கிறதாக உத்தேசம்?" என்று அவர் மௌனத்தைக் கலைத்தாள் கையில் காப்பி டம்ளருடன் பிரவேசித்த கமலம்.

"ராஜத்துக்கு என்னை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாள். ராமுவினால்தான் அவளுக்குக் கொஞ்சமாவது சந்தோஷம் ஏற்பட வேண்டும்" என்று அநுதாபம் நிறைந்த குரலில் கூறியவாறு காப்பியை அருந்தினார் கோபாலய்யர்.

"சரிதான்! நம்ம நிலைமையே கஷ்டத்திலே இருக்கு! இன்னும் அவனை வேறே

இங்கே கொண்டு வந்து வைத்துக்கொண்டு யார் கஷ்டப்படுவது? இந்தக் காலத்திலே அவன் அவன் பி. ஏ. எம். ஏ. படிச்சுட்டு வேலையில்லாமே திண்டாடிக்கொண்டு இருக்கிறான்கள். இவன் வந்தவுடனே யார் இவனுக்கு வேலை கொடுத்துவிடப் போகிறார்கள்? 'வேலைக்கு ஏற்பாடு பண்ணுகிறேன். வேலை கிடைச்சப்புறம் கடுதாசி போடறேன்'னு பதில் எழுதிப் போட்டுடுங்கோ" என்று கூறி முடித்தாள் கமலம்.

"எங்கள் ஆபீசின் கிளைக்காரியாலயம் ஒன்று பெங்களூரில் திறக்கப் போகிறார்கள். நான் துரையிடம் சொன்னால் அவனுக்கு ஒரு வேலை கிடைக்கும். ஏதோ நம்மாலான உபகாரம்" என்று கூறிவிட்டுக் கமலத்தின் முகத்தைப் பார்த்தார். அவளுடைய கடுகடுப்பான பார்வையி லிருந்தும் அவள் 'படுக்'கென்று மூக்கவாய்க் கட்டையைத் தோள் பட்டையில் இடித்துக் கொண்டதிலிருந்தும் தான் ராமுவுக்கு வேலை தேடி வைப்பதை அவள் விரும்பவில்லை என்பதை உணர்ந்து அவளைச் சமாதானப் படுத்த முயன்றார் கோபாலய்யர்.

"இதோ பார் கமலம்! நாமோ இப்போ ரொம்ப கஷ்டப்படுகிறோம். இருநூறு ரூபாய் சம்பளத்திலே நாலு குழந்தைகளைக் காப்பாற்றவேண்டி இருக்கிறது. இந்த நிலையிலே மீனாட்சிக்கு வேறே கலியாணம் பண்ணியாகணும். அவளுக்குக் கலியாணம் ஆகிவிட்டால் பிறகு கவலையில்லை. மற்ற பிள்ளைக் குழந்தைகள் எப்படியோ பிழைத்துப் போகும். ராமுவுக்கு வேலை பார்த்து வைத்து மீனாட்சியை அவனுக்குக் கலியாணம் பண்ணி விட்டால் நம்ம கவலை கொஞ்சம் குறையும்" என்றார் கோபாலய்யர்.

"சரிதான்! உங்க அக்காவா இதுக்குச் சம்மதிப்பாள்? பிள்ளைக்கு வேலை ஆகிற வரையிலேதான் இந்த அன்பெல்லாம். பிள்ளைக்கு வேலையாகிச் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டால் அப்புறம் ஆயிரம் கொண்டா இரண்டாயிரம் கொண்டா என்று கேட்க மாட்டாளா! உங்க அக்காவைப் பற்றி நீங்க இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவளுடைய குணம் எனக்குப் பத்து வருஷத்துக்கு முன்னமேயே தெரியும்" என்று கூறினபோது கோபாலய்யருக்குக் கோபம் வந்து விட்டது.


"போதும் போதும்! அவளைப் பற்றி நீ என்னிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம். மீனாட்சியை ராமுவுக்குத்தான் கொடுக்கப் போகிறேன். என் விஷயத்திலே அனாவசியமாய்த் தலையிடாமல் போய் உன் வேலையைப் பாரு" என்று கூறிவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

பிடிவாத குணமும் முரட்டுத்தன்மையும் கொண்டிருந்த தன் கணவனுடன் வாதிப் பதில் சிறிதும் பயன் இல்லை என்பதை உணர்ந்த கமலம் தன் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டாள்.

கமலத்துக்குத் தன் நாத்தனார் ராஜத்தின் மீது அத்தனை வெறுப்பு ஏற்பட்டதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. ராமு இரண்டு வயது குழந்தையாக இருந்தபோதே ராஜத்தின் கணவன் இறந்து விட்டான். முதலில் ராஜம் சென்னையில் வேலை பார்த்து வரும் தன் சகோதரன் வீட்டில் வாழலாம் என்று நினைத்தாள். ஆனால் தன் சகோதரன் சொற்ப வருவாயில் மிகுந்த கஷ்டத்துடன் வாழ்ந்து வருவதை அறிந்த அந்த யோசனையைக் கைவிட்டாள். மதுரையில் அவள் கணவனின் பூர்விக சொத்து கொஞ்சம் இருந்தது. அதன் மூலம் வந்த சொற்ப வருவாயைக் கொண்டு தன் குழந்தையுடன் மதுரையிலேயே வாழ்ந்தாள் ராஜம். தன் குழந்தை மிகுந்த குடிகையுடனும் கெட்டிக்காரத் தனத்துடனும் இருப்பதைக் கண்டு அவனால் தன் பிற்கால வாழ்வு சுகப்படும் என்று எண்ணி அகமகிழ்ந்திருந்தாள் ராஜம்.

சென்னையிலிருந்த கோபாலய்யர் ராஜத்துக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அவருடைய வேண்டுகோளின்





"கைத்தறியிலே எவ்வளவு உயர்ந்த அங்கவஸ்திரங்களெல்லாம் கிடைக்கிறது. பாருங்கோ ஸார். இவர் வாங்கி இருக்கிறார்."

பேரில் கமலத்தின் முதல் பிரசவத்தின்போது ராஜம் உதவி செய்யப் போனான். தனக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதை அறிந்து மிகுந்த கவலை அடைந்த கோபாலய்யர் 'இவள் ராமுவுக்காகவே பிறந்திருக்கிறாள். நீ இவளைத்தான் ராமுவுக்குக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்' என்றார். 'நம் கையில் என்ன இருக்கிறது? எல்லாம் மதுரை மீனாட்சியின் செயல்' என்று கூறிக் குழந்தைக்கு மீனாட்சி என்று பெயர் வைத்துவிட்டு மதுரைக்குத் திரும்பி வந்து சேர்ந்தாள் ராஜம்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு பிரசவத்தின் போதும் கோபாலய்யர் தன் சகோதரியின் உதவியை நாடினார். ஆனால் குழந்தையின் படிப்பு கெடும் என்கிற காரணத்தினால் ராஜம் வரவில்லை. தன் சகோதரன் பெரிய குடும்பஸ்தனாகிக் கஷ்டப்பட்டு வருவதை நினைத்து வருந்தினாள் ராஜம். இருவருக்கு மிடையே கடிதப் போக்குவரத்து மட்டும் நடந்து கொண்டிருந்தது.

கோபாலய்யர் ராஜத்தைக் கொஞ்சநாட்கள் வந்து இருந்து விட்டுப் போகும்படி எழுதி யிருந்தபடியாலும், ஏழெட்டு வயதான ராமு பட்டணத்தைப் பார்க்க வேண்டுமென்று நச்சரித்தபடியாலும் அந்த வருஷக் கோடை விடுமுறையின்போது ராமுவுடன் தன் சகோ தரன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் ராஜம். கமலத்தின் மூத்த பெண் மீனாட்சிக்கு வயது ஐந்து. மற்ற இரண்டு குழந்தைகளும் அவ ளுக்கு இளையவர்கள்தான். குழந்தைகள் அனைவரும் 'அத்தை, அத்தை' என்று சதா ராஜத்தின் கால்களைச் சுற்றிய வண்ணமே இருந்தன. ராஜமும் குழந்தைகளைக் குளிப் பாட்டுவது, அவர்களுக்குத் தலை வாரிவிட்டுப் புது உடை அணிவிப்பது, பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற எல்லா வேலைகளையும் கவனித்துக் கொண்டாள். மேலும் கமலத் தின் வீட்டு வேலைகளுக்கும் உதவியாக இருந் தாள். கலியாணமானது முதல் கஷ்டத்தி லேயே ஆழ்ந்து கிடந்த கமலத்துக்கு நாத்த னார் வந்திருப்பது சற்று உதவியாக இருந்தது.

ஆகவே கமலமும் ராஜத் தின் மீது மிகுந்த அன்புடன் தான் இருந்தாள். ஆனால் அது நீடிக்கவில்லை. அவ ளுக்குத் தன் நாத்தனாரின் மீது வெறுப்பு உண்டாகும் படியான சம்பவம் ஒன்று ஒரு நாள் நடந்தது.

அன்று ராமுவின் பல வந்தத்தின் பேரில் சென்னை யைச் சுற்றிப் பார்த்து விட்டு வரவேண்டுமென்று கிளம்பினாள் ராஜம். 'அத் தையோடு நானும் சேர்ந்து போவேன்' என்று அழ ஆரம்பித்து விட்டாள் மீனா. ராஜம் கையில் அதிகப் பணம் கொண்டுவர வில்லை. மீனாட்சியை அழைத்துப் போனால் குழந்தைகள் அழுவார்கள். எல்லோரையும் அழைத்துப் போகக் கையில் பணம் இல்லை. ஆகவே மீனாட்சியை எவ்வளவோ சமாதானப் படுத்தினாள் ராஜம். ஆனால் அவள் பிடிவாதம் குறையவில்லை. 'அப்பாவின் பிடிவாதத்தை இந்தப் பொண்ணு அப்படியே கொண்டு வந்திருக்கு' என்று அவளைக் கண்டித்தாள் கமலம். கடைசியில் மீனாட்சியையும்கூட அழைத்துப்போவது என்று நிர்மானித்தாள் ராஜம். மீனாட்சிக்குத் தலை பின்னி விட்டுப் பாவாடை, சட்டை முதலியவைகளை அணி வித்ததும் 'எனக்கு அந்தச் சங்கிலி வேணும்' என்று அழ ஆரம்பித்து விட்டாள். பல குடும்ப கஷ்டத்திற்கு மத்தியில் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி ஒரு மாங்காய் மாலை செய்து போட்டுக் கொண்டிருந்தாள் கமலம். நல்ல நாள் கிழமைகளில் அந்த நகையை மீனாட் சிக்குப் போட்டு அழகு பார்ப்பாள் கமலம். அதனால்தான் இப்போது அந்த நகையைக் கேட்க ஆரம்பித்தாள் மீனாட்சி. குழந்தை நகையைத் தொலைத்து விட்டு வந்து விட்டால் என்ன செய்வது என்கிற அச்சத்தினால் சங்கிலியைப் போட மறுத்தாள் கமலம். மீனாட்சி மறுபடியும் பிடிவாதத்தை ஆரம் பித்து விட்டாள். 'குழந்தை கேட்கிறது போட்டு அனுப்பேன். நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? அவ்வளவு அஜாக் கிரதையாகவா இருந்து விடுவேன்!" என்று ராஜம் குழந்தைக்குப் பரிந்து பேசினாள். கடைசியில் கமலம் அரை மனதுடன் குழந் தையின் கழுத்தில் நகையைப் போட்டு அனுப்பி வைத்தாள்.

ராஜம் மீனாட்சியை ஒரு கையிலும் ராமுவை மற்றொரு கையிலும் பிடித்துக் கொண்டு பொருட் காட்சிச் சாலை, மிருகக் காட்சிச் சாலை, சைனா பஜார் முதலிய இடங்களை எல்லாம் சுற்றிக் காண்பித்து விட்டுக் கடற் கரைக்குப் போய்ச் சேர்ந்தாள். ராமுவும் மீனாட்சியும், மணலில் உட்கார்ந்து சற்று நேரம் வரை விளையாடிக் கொண்டிருக்


புத்துணர்வூட்டும் புதுமை
மகிழ்வளிக்கும்
மணம்
TSR
• சந்தனாதித் தைலம்
• அரைக்கீரை விதைத் தைலம்
• பிருங்காமலக தைலம்
• கோகுல் கூந்தல் தைலம்
தேவைக்கு ஏற்ப வாங்க வசதியான
ஏகவாசி "பாக்கிங்"களில் கிடைக்கும்.
டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம் (S. India)
T. S. R. & Co.
Sandanathi Thailam

தனர். இருட்டும் சமயத்தில் அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள் ராஜம்.

மீனாட்சி வீட்டினுள் வந்தவுடன் முதல் முதலாக அவளுடைய கழுத்தைத் தான் கவனித்தாள் கமலம்.

“எங்கேயடி நகை?” என்று பதை பதைப்புடன் கேட்டாள். அதுவரை ராஜம் மீனாட்சியின் கழுத்தைக் கவனிக்கவில்லை. கழுத்தில் நகை காணாததைக் கண்ட போது ராஜத்தின் நெஞ்சு பகீரென்றது.

இருநூறு ரூபாய் பெறுமானமுள்ள நகையைத் தொலைத்து விட்டு வந்து நிற்கும் மீனாட்சியைக் கண்டு கமலத்திற்குத் துக்கமும் கோபமும் மாறி மாறி வந்தன. தன் நாத்தனாரின் அஜாக்கிரதையின் மீதும் அவளுக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது.

“நகையைத் தொலைத்துவிட்டு வந்து நிற்கிறாயே! இதுக்குத்தானா நகை வேணும்னு அழுதே! நீயும் அந்த நகையோட போயிருக்கக் கூடாதா மூதேவி!” என்று கூறிய வண்ணம் குழந்தையின் கன்னத்திலும் முகத்திலும் பளீர் பளீர் என்று நாலு அறை கொடுத்தாள். மீனாட்சி வலி பொறுக்க முடியாமல் ‘அத்தை, அத்தை’ என்று அலறிய வண்ணம் ராஜத்தின் அருகில் ஓடினாள். ராஜம் மீனாட்சியை அணைத்துக் கொண்டு “அழாதே! நான் உனக்கு இதை விட நல்ல நகையாக வாங்கித் தருகிறேன்” என்று துக்கம் தளும்பக் கூறி அவளைச் சமாதானப் படுத்தினாள்.

இப்படி நடக்கும் என்று அவள் சற்றும் எதிர் பார்த்தவள் அல்ல. தன்னால் குழந்தை அடி பட நேர்ந்ததைக் குறித்து உள்ளம் புழுங்கினாள் ராஜம். கமலம் தன் மீதிருந்த ஆத்திரத்தைத்தான் குழந்தையின்மீது காட்டி இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ள ராஜத்திற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. மன வேதனையில் அவள் சாப்பிட வில்லை. அன்று இரவு கமலம் தன் கணவனிடம் நகை காணாமல் போனதைப் பற்றிக் கூறிக் கண்ணீர் சிந்தினாள். கடைசியாக ‘உங்க அக்கா நகையைப் போடுன்னு சொன்ன போதே சந்தேகம்தான். நான் எதிர்பார்த்தது போலத்தான் நடந்திருக்கு’ என்று கூறி விசித்தாள். இவ் வார்த்தைகள் ராஜத்தின் மனத்தில் ‘சுருக்’கென்று தைத்தன. கமலம் தன்னையே சந்தேகிப்பதை அறிந்தபோது அவள் மனம் புழுப்போல் துடித்தது. அதற்குப் பிறகு அவளுக்கு அந்த வீட்டில் இருப்பது முள்மேல் இருப்பதுபோல் இருந்தது. மறுநாளே ராமுவுடன் மதுரைக்குத் திரும்பி விட்டாள் ராஜம்.

கோபாலய்யர் இந்தச் சம்பவத்தை வெகு விரைவில் மறந்து விட்டார். ஆனால் கமலம் தான் அடிக்கடி இதைப் பற்றிப் பேசிக் கொண்டும், தன் நாத்தனாரின்மீது அபாண்டப் பழி சுமத்திக் கொண்டும் இருந்தாள். மனத் துயருடன் மதுரை சென்ற ராஜம் ஒன்றிரண்டு வருஷங்கள்வரை கடிதம்கூடப் போடவில்லை. பிறகு எப்பொழுதாவது ஒருமுறை கடிதம் எழுதினாள். இப்பொழுது தன் சகோதரி பழையபடி அன்பு பாராட்டி இருப்பதை அறிந்து ராமுவுக்கு வேலை பார்த்து வைத்து அவனுக்கு மீனாட்சியையும் மணம் செய்து செய்து வைத்துவிடுவது என்று அப்போதே தீர்மானித்து விட்டார் கோபாலய்யர்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ராமு சென்னைக்கு வந்து சேர்ந்தான். கோபாலய்யர் அவனை மிகுந்த அன்புடன் வரவேற்றார். அவனுடைய வளர்ச்சியும் அவரைத் திகைக்க வைத்தது. வயது அதிகம் ஆகாத போதிலும் நன்றாக வளர்ந்திருக்கும் ராமுவைக் கண்டபோது கமலத்துக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. ராமுவுக்கு மீனாட்சியை அடையாளம் புரிந்து கொள்ளச் சற்று நேரம் பிடித்தது. ‘மீனாட்சியா இப்படி வளர்ந்திருக்கிறாள்? இத்தனை வசீகரத்துடன் இருப்பாள் என்று நான் கனவில் கூட நினைக்க வில்லையே’ என்று அதிசயப் பட்டுப் போனான் ராமு. மீனாட்சியும் ராமுவைக் கண்டு ஆச்சரியப் பட்டாள்.

ராமு வந்த மறு நாளே ஆபீஸுக்கு அழைத்துச் சென்று துரையிடம் அறிமுகப் படுத்தி மனுவைக்கொடுத்தார் கோபாலய்யர்.

சுமார் ஒரு மாத காலத்திற்குப் பிறகு ராமுவுக்கு வேலைக்கு ஆர்டர் வந்தது. பெங்களூருக்குச் சென்று வேலையை ஏற்றுக் கொள்ள இரண்டு தினங்கள் இருந்தபடியால் உடனே தன் தாயாருக்குத் தந்தி அடித்து அவளை வரவழைத்தான். கோபாலய்யர் தான் அவர்கள் இருவரையும் ரயிலேற்றினார்.

அப்போது தன் விருப்பத்தை ராஜத்தினிடம் வெளியிட்டார் அவர்.

“நீ எதற்காக என்னைக் கேட்கணும்! உத்தியோகம் பார்த்து வைத்து இத்தனை உபகாரம் செய்த உனக்கு நாங்கள் வேறு என்ன செய்யப் போகிறோம்? மீனாட்சியின் ஜாதகத்தை அனுப்பிவை. ஜாதகம் சரியாக இருந்தால் கலியாணம் ஆனமாதிரிதான்” என்றாள் ராஜம்.

கோபாலய்யரின் மனம் குளிர்ந்தது. அவர் சில தினங்களுக்குள் மீனாட்சியின் ஜாதகத்தைப் பெங்களூருக்கு அனுப்பி வைத்தார். பெங்களூரிலிருந்து ராமு தன் மாமாவுக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தானே தவிர அவைகளில் கலியாண விஷயத்தைப் பற்றி அவன் ஒன்றும் குறிப்பிட வில்லை. அந்த வருஷத்திலேயே கலியாணத்தை முடித்து விட வேண்டு மென்று துடியாக இருந்த கோபால ஐயர் கலியாண விஷயமாய் ஏற்பாடுகளைச் செய்யலாமா வென்றும் எப்போது முகூர்த்தத்தை வைப்

## மிகப் பெரிய

பிராவிடண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு எல்லா முக்கிய ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**நல்ல கமிஷன் கொடுக்கப்படும்**

தொழிலாளர்கள் பிராவிடண்ட் பண்டிலிருந்து பணம் கட்டி வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

•

## பாரதமாதா

**பிராவிடண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமை அலுவலகம்: **தூத்துக்குடி**

கிளைகள்: **திருவனந்தபுரம் & கொழும்பு**

---

## "ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"



**1 மண்டலம் (48 நாள்)**
**பூஜை செய்தும்**
**ஆயுள் பூராவும் பலன் தரும்**
**வெள்ளி ரக்ஷை**

**ரூ. 43—12—0**

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் நியாயமான கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். மேற்படி தொகை வெள்ளி, விளம்பரம், தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38/-ம் ரக்ஷை அணிந்த 108 நாட்களுக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B. *(1)* ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். *(2)* வெளி நாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. P. கிடையாது. *(4)* அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

★

**கோட்டமருதூர்**

**ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜ்யோதிஷ ஆபீஸ்**

அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

---

*Years of writing pleasure!*



ஆண்டுகள் பல
ஆனந்தமாக எழுதலாம்!

வில்ஸன் வாக்யுமாடிக் உத்தரவாதமுள்ள பேனா

★ வாக்யுமாடிக் பில்லர்

★ இரிடியம் தோய்ந்த நிப்பு

விலை

ரூ. 5/12

(14 காரட் தங்க நிப்புடன்)

ரூ. 8/12

**WILSON**
VACUMATIC PEN
WITH A GUARANTEE

Sole distributors for India: **KIRON & CO., LTD.**

BOMBAY - CALCUTTA - MADRAS

மதராஸ் ஆபீஸ்:

கிரான் & கோ., லிட்., 82, நாராயண முதலி தெரு, ஜி. டி., சென்னை

பது என்றும் தன் சகோதரிக்கு எழுதி னார். அந்தக் கடிதத்திற்கு ஒரு மாதத்திற் குப் பிறகுதான் பதில் வந்தது. அதில் தனக்குக் கலியாணத்தில் தற்போது நாட்ட மில்லை என்றும் அவ்வாறு கலியாணம் செய்து கொள்ளும் எண்ணம் ஏற்படும் போது மீனாட்சியையே மணந்து கொள்வ தாயும் எழுதப் பட்டிருந்தது. இதைக் கண்டபோது கோபாலய்யரின் மனம் ஏமாற் றத்தினால் துடித்தது.

"நான் அப்போதே சொன்னேனே கேட் டீர்களா? எனக்குத் தெரியாதா உங்கள் அக்கா எப்பேர்ப் பட்டவள் என்று? பின்னே இப்போது சம்பாதிக்கிறான். எங்காவது வரதக்ஷிணையுடன் நல்ல இடமாகக் கிடைக் கும். அதனால் தான் இப்படி எழுதி இருக் கிறார்கள்" என்று அவருடைய கோபத் தைக் கொட்டி விட்டாள் கமலம்.

இவ்வாறு தான் ஏமாற்ற மடைவோம் என்று அவர் சற்றும் எதிர் பார்க்கவில்லை. ராமு தன்னிடம் பணிவுடன் நடந்து கொண் டதும், மீனாட்சியிடம் அன்புடன் பழகி யதும் வெறும் வேஷம் என்பது அவருக்கு அப்போதுதான் புரிந்தது. ஏமாற்றத்தினால் உள்ளம் குமுறிய அவர், "இருக்கட்டும். இந்தப் பயலுக்கு இவ்வளவு திமிரா? மீனாட் சியை வேறு நல்ல இடமாகப் பார்த்து இந்த வருஷமே அவளுடைய கலியாணத்தை முடித்து வைக்கா விட்டால் என் பெயர் கோபாலன் இல்லை" என்று கறுவினார்.



அந்த வைராக்கியத்துடன் வரன் தேட ஆரம்பித்தார், ஜாதகம் பொருந்த வில்லை. அப்படிப் பொருந்தின ஒன்றிரண்டு வரன்கள் தேவையான பணம் இல்லாத காரணத் தினால் தட்டிக் கழிக்கப் பட்டன. அந்த வருஷம் மீனாட்சிக்குக் கலியாணம் நடக்க வில்லை; விடாப் பிடியுடன் அடுத்த வருஷம் முயன்றார். ஒன்றும் பலன் ஏற்பட வில்லை. நாட்கள் செல்லச் செல்லக் குடும்பக் கஷ்டம் அதிகரித்ததே ஒழியக் குறைய வில்லை.


மூன்றாவது வருஷம் அவருடைய முயற்சி வீண் போகவில்லை. சென்னையிலேயே உபாத்தியாயராக இருந்த ஒருவருக்கு மீனாட் சியை மூன்றாம் தாரமாகக் கலியாணம் செய்து வைக்க முடிவு செய்து நிச்சயதார்த்தமும் செய்து விட்டார் கோபாலய்யர். ராமுவின் மீது அபார வெறுப்பு கொண்டிருந்த அவர் கடைசியாக ராமுவுக்கு ஒரு கடிதம் எழுதி னார். "நான் உன் குடும்ப விளக்கை ஏற்றி வைத்தேன். ஆனால் நீ என் குடும்ப விளக்கை அணைத்து விட்டாய். பரவாயில்லை. காலம் இப்படியே போய் விடாது" என்று கார சாரமாக எழுதிய பிறகுதான் கோபாலய் யரின் மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு எல்லோரும் ஆச்சரியப் படும் படியான சம்பவம் ஒன்று நடந்தது. ராமுவும் ராஜுவும் தம் வீட்டினுள் வருவதைக் கண்டு அதிசயப் பட்டுப் போனார் கோபாலய்யர். வந்ததும் மாமாவை நமஸ்கரித்தான் ராமு.

"உங்கள் கடிதம் வந்தவுடன் நான் புறப் பட்டு வந்து விட்டேன். மீனாட்சியைக் கலியா ணம் செய்து கொள்ள இப்போது தயாராக இருக்கிறேன். என் ஜாதகத்தில் களத்திர தோஷம் இருந்ததினால் மூன்று வருஷத்திற் குப் பிறகு கல்யாணமானால் பாதகமில்லை என்று பலர் சொன்னார்கள். ஆகையினால் கலியாணம் வேண்டாமென்று அப்பொழுது எழுதி யிருந்தேன். தாங்கள் பிடிவாதக் காரராகையினால் இது விஷயத்தைத் தங்க ளுக்கு எழுதவில்லை. மீனாட்சிக்கு ஏதாவது விபரீதம் நேர்ந்து விடப் போகிறதே என்று தான் அப்போது சம்மதிக்கவில்லை. இப் போது அந்தத் தோஷம் ஒன்றும் செய்யாது. நான் தங்கள் விருப்பப்படி மீனாட்சியை மணக்கச் சித்தமாக இருக்கிறேன்!" என்றான்.

பிறகுதான் ராமுவின் உண்மை உள்ளம் அவருக்கு விளங்கியது. அவன் மீதிருந்த சந்தேக இருள் அப்போதுதான் அகன்றது.

ஏற்கனவே குறிப்பிட்டிருந்த முகூர்த்த தினத்திலேயே ராமுவுக்கும் மீனாட்சிக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது. தம் எண் ணப்படி ராமுவும் மீனாட்சியும் தம்பதிக ளாகியதைக் குறித்துக் கோபாலய்யரின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.


எல்லோரும்
பிரிட்டானியா
பிஸ்கோத்துகளை
அனுபவிக்கிறார்கள்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
BC.3599



# குடும்பம் முழுவதற்குமே உன்னத பானம்!

சிறுவர், நடுத்தர பிராயத்தினர், முதியோர்—குடும்பத்தில் ஒவ்வொருவரும் உணவு அருந்தும்போது அல்லது இடையில் ஓவல்டின் பருகி நன்மை அடைகிறார்கள். ருசி மிகுந்த இந்த பானத்தில், அன்றாட உணவில் இருக்கும் ஜீவசத்து குறைபாடுகளை நிவர்த்திசெய்ய புஷ்டியான சத்துக்கள் இருக்கின்றன; அது நோயாளிகளுக்கும், சின்னஞ் சிறுவர்களுக்கும் சுலபமாக ஜீரணமாகக்கூடியது. ஓவல்டினில் பழுத்த பார்லி மால்ட், ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், சிறந்த கோகோ இயற்கையான பாஸ்பேடடுகளும், பி க் டி விடமின்களும் இருக்கின்றன. உடனே ஓவல்டின் வழங்க ஆரம்பியுங்கள். ஆனால் அது "ஓவல்டின்" தானா என்று நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். வேறெந்த உணவு பானமும் ஓவல்டின் ஆகாது!




விநியோகஸ்தர்கள் :
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிமிடெட்.

# ஓ வ ல் டி ன்

**உலகில் மிகவும் விரும்பப்படும் உணவுபானம்**

OV.394




## 13. சம்பாவின் சந்திப்பு

பணத்தையும் கடிதத்தையும் அனுப்பி விட்டு அதனால் மனோரமாவுக்கு ஏற்பட்டிருக்கும் உள்ளக் கிளர்ச்சியைக் கண்டு போக வந்த மாதவப் பிரஸாதைக் கண்டதும் சுபத்திரா மனோரமாவை அழைத்தாளே, அப்பொழுது உண்மையாகவே மனோரமாவுக்கு மிகவும் தலையை வலித்துக் கொண்டிருந்தது. அதைச் சாக்காகச் சொல்லி வர முடியாது என்று அவள் மறுத்து விட்டாள். அதைக் கண்ட அவளுடைய தாய் தந்தையருக்கு அவளுடைய அந்தச் செய்கை வியப்பாகப் போய் விட்டது. பெற்றோர் சொல்லுக்குக் கீழ்ப்படிவதையே சுபாவமாகக் கொண்ட ஒரு பெண், அவர்கள் அழைத்தும் வரமாட்டேன் என்று மறுத்தால் அவர்களுக்கு ஆச்சரியமாயிராதா? எத்தனை தான் தலையை வலித்தாலும் அறிவுள்ளவர்கள் சமயத்தில் அறிவை விட்டு விடக் கூடாதல்லவா? அப்படி விட்டு விட்டால் அவர்கள் எத்தனை தான் அறிவுள்ளவர்களாயிருந்தாலும் அவர்களை அறிவுள்ளவர்கள் என்று சொல்ல முடியுமா?

மனோரமா வர மறுத்து விடவே, மாதவப் பிரஸாத் நம்பிக்கை இழந்து வீடு திரும்பினார். மனோரமா வர மறுத்ததன் காரணம் அறியாத சுபத்திரா மனோரமாவைப் பார்க்க அவளுடைய அறைக்குச் சென்றாள். அப்பொழுது அவளுடைய அறைக் கதவு சாத்தியிருந்தது. மனோரமா இதுவரை ஒரு பொழுதும் அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உட்கார்ந்ததில்லை. மனோரமாவின் அந்தச் செய்கை சுபத்திராவுக்கு இன்னும் வியப்பை அளித்தது. அவள் மனோரமாவுக்குக் குரல் கொடுத்தாள். உடனே மனோரமா எழுந்து வந்து தாளிடப் பட்டிருந்த அறைக் கதவைத் திறந்தாள்.

மனோரமாவின் கண்கள் செக்கச் செவேல் என்று சிவந்திருந்தன. தலை மயிர் கலைந்து அலங்கோலமாகக் கிடந்தது. முகம் உலர்ந்து உணர்ச்சியே சிறிதும் அற்றதாகக் காட்சி அளித்தது. தாயார் 'என்ன, ஏது?' என்று கேட்பதற்கு முன்னாலேயே மனோரமா, "அம்மா! என் தலையை ரொம்ப வலிக்கிறது, அம்மா!" என்றாள். அதைச் சொல்லி முடிப்பதற் குள்ளாகவே, அவள் விசித்து விசித்து அழவும் ஆரம்பித்து விட்டாள்.

தாய் தந்தையரின் இருதயத்தைக் கரைப்பதற்குக் குழந்தைகள் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டாலே போதும். மனோரமாவோ விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள். தாயாருக்கு அதைக் காணச் சகிக்க வில்லை. பெண்ணின் அருகில் உட்கார்ந்து, தன் கைகளால் பெண்ணின் தலையைத் தடவிக் கொடுத்தாள். பிறகு தலைவலியின் சிரமத்தைப் போக்கும் நோக்கத்துடன் இதமாகப் பிடிக்கலானாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ராமலாலும் படியேறி மேலே வந்து விட்டார். பெண்ணையே பெரும் ஊன்று கோலாக மதித்து வாழும் தாய் தந்தையரின் மனம் பெண்ணுக்கு ஏதாவது சுகக்கேடு ஏற்பட்டு விட்டால் என்ன பாடு படும்? ராமலாலும் சுபத்திராவும் மனோரமாவின் நிலையைக் கண்டு கதி கலங்கிப் பதை பதைத்துப் போய் விட்டார்கள். தன் தாய் தந்தையரின் உள்ளத்தை வாட்டும் வேதனையை மனோரமா புரிந்து கொண்டு விட்டாள். அவளுக்குத் தலையைத் தாங்க முடியாமல் வலித்துக் கொண்டு தான் இருந்தது. இருந்தாலும் தான் கஷ்டப் படுவதைக் காணச் சகியாமல் தாய் தந்தையர் இருதயம் இடிந்து கஷ்டப் படுகின்றனர் என்பதைக் காண அவளுக்கு மிகக் கஷ்டமாகப் போய் விட்டது. எனவே சில விநாடிகளுக் கெல்லாம் தனக்குத் தலைவலி குறைந்து கொஞ்சம் குணமாகி விட்டது போல நடிக்கலானாள்; சிரித்துக் கலகலப்பாகவும் பேசலானாள்.

அதைக் கண்ட பின் தான் அவளுடைய பெற்றோருக்குக் கொஞ்சம் மன நிம்மதி ஏற்பட்டது. கட்டிலுக் கருகில் கிடந்த காகிதத் துண்டுகள் மீது தற்செயலாக ராமலாலின் பார்வை விழுந்தது. அடுத்த நிமிஷமே, பெண்ணுக்குக் கல்யாணம் செய்து விடவேண்டும் என்ற எண்ணம் அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றுப் பலமாக வேலை செய்யத் தொடங்கியது.

இதே சமயம் மனோரமாவின் ஒரு தோழி அவளைப் பார்ப்பதற்காக வந்தாள். ராமலாலும் சுபத்திராவும் மனோரமாவை அவளோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்குமாறு கூறி விட்டுக் கீழே இறங்கிச் சென்று விட்டார்கள்.

பால்ய விவாகத்தினால் தீமையைத் தவிர நன்மை அதிகம் இல்லை என்பதுதான் ராமலாலின் அபிப்பிராயம். ஆனால் அதற்காக மிகப் பெரியவளான பிறகு கல்

யாணம் செய்ய வேண்டும் என்னும் விஷயத்திலும் அவருக்கு நம்பிக்கை கிடையாது. சின்னஞ்சிறு பிராயத்தில் கல்யாணம் செய்து அதை மரப்பாச்சிக் கல்யாணமாக ஆக்கவோ, பிராயம் ஏறும் வரை கல்யாணம் செய்யாமல் வைத்து அதைப் பாட்டிக் கல்யாணம் என்று பெயர் பண்ணவோ அவருக்குப் பிடிக்கவில்லை. எதுவும் காலத்தில் நடக்க வேண்டும் என்பதுதான் அவருடைய அபிப்பிராயம். விவாகம் செய்து வைப்பது என்பது அவருடைய கைக்குள் அடங்கிய விஷயமாக இருந்தால், அவர் மனோரமாவுக்கு எப்பொழுதோ கல்யாணம் செய்து வைத்திருப்பார். ஆனால் தகுந்த வரன் அவருக்குக் கிடைக்கவில்லை. அதோடு அவருடைய பொருளாதார நிலையும் திருப்திகரமா யில்லை. இந்த இரண்டு விஷயங்களும்தான் இன்று வரை அவருடைய எண்ணத்துக்கு இடையூறாக நின்றன; மனோரமாவைக் கல்யாணமாகாத கன்னியாக வைத்திருந்தன.

மனோரமா சில சமயம் ஆற்ற மாட்டாத சோகத்தில் ஆழ்ந்து விடுவாள். சில சமயம் எக்களிக்கும் மகிழ்ச்சியில் மூழ்கியிருப்பவள் போலத் தோற்றமளிப்பாள். சில சமயம் வாய் ஓயாமல் கல கலவென்று ஏதாவது பேசிக் கொண்டே யிருப்பாள். சில சமயம் நாள் முழுவதும் ஒரு வார்த்தை யென்றால் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் வாய் மூடி மௌனியாகப் பொழுதைப் போக்குவாள். இதற்கெல்லாம் ஒரே வைத்தியம்தான் என்பதைச் சுபத்திராவும் கண்டு கொண்டாள். பெண்ணுக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் கல்யாணம் செய்து வைத்து விட வேண்டும். அப்பொழுதுதான் அவளிடம் உள்ள சஞ்சலத்தன்மை அகன்று ஸ்திரத்தன்மை ஏற்படும் என்பதைத் தாயுள்ளம் கண்டு கொள்வதில் வியப்பு ஏது?

வாழ்வைப் பெருங் கடலாகக் கூறி யிருக்கிறார்கள் ஆன்றோர்கள். அதில் உண்டாகும் யௌவனம் என்பது பயங்கரப் புயல் ஆகும். புயல் பயங்கரப் பேயாட்டம் ஆடி எப்படியெல்லாம் குறையாடி விடுகிறது என்பது விவரிக்க வேண்டிய விஷயமா? அது இமாலயத்தின் உச்சியையும் தாண்டி உயரே செல்லும் தன்மை வாய்ந்தது. அதல பாதாளத்துக்கும் கீழே இறங்கிச் செல்லும் சக்தி வாய்ந்தது. மனிதனின் அப்பாவி இருதயம் யௌவனப் புயலில் சிக்கிக் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் வானத்தைப் பார்க்கப் பறந்து செல்லுகிறது. அடுத்த கணமே பாதாளத்தை நோக்கிப் பருந்தாக விழுந்து அதன் ஆழத்தைக் காணவும் சென்று விடுகிறது. யௌவனப் புயலில் சிக்கி இருதயம் படும் பாட்டைக் கண்டு, அறிவில் முதிர்ந்த, சமூக சாஸ்திரம் அறிந்த ஆன்றோர்கள் 'விவாகம்' என்பதைச் சிருஷ்டித்து இந்தப் புயலை ஒரு வரையறைக்கு உட்பட்டதாகச் செய்ய முயன்றிருக்கிறார்கள். அவர்களுடைய அறிவின் பெருமையை என்னவென்று சொல்வது?

விவாகம் என்னும் நங்கூரம் பாய்ச்சப் பட்டதும் வாழ்க்கைப் படகு ஒரே இடத்தில் நிலை பெற்று நிற்கிறது; நின்ற இடத்தில் நின்றவாறே இங்கும் அங்கும் அசைந்து ஆடுகிறது. அலை மோதித் தத்தளிக்கிறது. கல்யாணம் என்னும் கட்டுப் பாட்டில் கட்டுண்ட பின் வாழ்க்கை சாந்தமே உருவானதாயும், நாகரிகம் வாய்ந்ததாகவும், சரளமானதாகவும் ஆகி விடுகிறது. வாழ்க்கை சம நிறை பெற்றதாகி விடுகிறது. தராசு முன் போல் நிறை நிலை பெற்றதாகி

## திருத்தப்பட்ட கல்வித் திட்டம்




இந்தப் பள்ளியில் 17-6-53 முதல் திருத்தப்பட்ட கல்வித் திட்டத்தின்படி 1 முதல் 5 வகுப்புகளுக்குப் போதிக்கப் பட்டு வருகிறது. மாணவர்கள் மிக்க உற்சாகத்துடன் பள்ளிக்கும், தொழில் பகுதிக்கும் சென்று வருகின்றனர்.

18-8-53ல் மதுரை கல்வி இலாகா டிவிஷனல் இன்ஸ்பெக்டர், தஞ்சை ஜில்லா கல்வி அதிகாரி, திருவையாறு ரேஞ்ச டிப்டி இன்ஸ்பெக்டர் முதலியோர் எங்கள் பாடசாலைக்கு விஜயம் செய்தபோது பாடசாலையின் 4, 5 வகுப்பு மாணவர்கள் ஈடுபடும் மட்பாண்டம் செய்யும் தொழிலை, தொழிற்சாலையில் சென்று பார்வையிட்டு அத்தொழிலாளியையும், மாணவர்களையும் பெரிதும் வாழ்த்தினர்.

திருவையாறு
26—8—53

வைகுண்டாச்சாரியார்
(போர்டு உயர்தரப் பாடசாலை தலைமையாசிரியர்)



விடுகிறது. வியாபாரியின் தராசைப் போல் இரண்டு தட்டுக்களும் சம நிறையுடையதாகி விடுகின்றன. ஒரு இம்மி அதிகம் ஆவதும் இல்லை; குறைவதும் இல்லை. சூதாடி லட்சம், பத்து லட்சம் என்று பணயம் வைத்து 'வெற்றியா, தோல்வியா?' என்று வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது போல் மண வாழ்க்கையில் பயம் உண்டாவதில்லை. 'என்ன ஆகுமோ?' என்ற கவலை ஏற்படுவதில்லை. ஆனால் இமாலயத்தின் உச்சி அழகை இல்வாழ்க்கை வாழ்பவர்கள் காண முடியாது; பாதாளத்தின் பயங்கரத்தையும் பார்க்க முடியாது. வாழ்க்கையென்னும் வண்டி வழி வந்த சுவட்டிலேயே செல்லத் தொடங்குகிறது.

மணவாழ்க்கை, மணமற்ற வாழ்க்கை இவற்றில் இது நல்லது? எது கெடுதலானது மணம் பொருந்திய வாழ்க்கையா, மணமற்ற வாழ்க்கையா என்பதை அறிவிற் சிறந்த மக்கள் தாமாகவே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். வாழ்வும் வாழ்வு தரும் கிராமங்களும் சமதளமான பூமியில்தான் வளருகின்றன; செழித்துக் குலுங்குகின்றன. இவையெல்லாம் நாம் கண் கூடாகக் காணும் விஷயங்கள். ஆனால் கடவுளின் கருத்து என்ன? ஏன் இமாலயத்தின் மீது மக்கள் வாழ முடிவதில்லை? இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் முடிவு காண முழு நேரம் ஏது?

எது எப்படிப் போனாலும் சரி, எப்படியிருந்தாலும் சரி, மணம் ஆனதும் புயலில் சிக்கித் தத்தளிக்கும் வாழ்வு தணிந்து தனிபொரு நிலைக்கு வந்து விடுகிறது; அமைதியே உருவானதாகி விடுகிறது என்பது மட்டும் உண்மை. இதை யாரும் மறுக்க முடியாது. யௌவனப் புயலில் தத்தளிக்கும் வாழ்க்கைக்கு ஒரு அதட்டல், ஒரு சூடு போதுமானது. 'உனக்குக் கல்யாணம் செய்து வைத்து விடுகிறேன், பார்!' என்று சொன்னால் போதும். அதன் ஆட்டம் எல்லாம் தானாகவே அடங்கி விடும். உயர உயர ஊர்க் குருவியாகப் பறந்து சென்று கொண்டிருக்கும் இருதயம் அடங்கி அமைதியே உருவானதாகி விடும்.

ஆகவே புயலின் வெறியாட்டத்தை அடக்க, இருதயத்தின் எழுச்சியை இறக்கச் சரியான ராமபாணத்தைப் போன்ற மருந்து விவாகம் தான். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இதை அறிந்துதான் அனைவரும் விவாகம் செய்து கொள்கிறார்கள். விவாகம் செய்து கொள்வதால் வாழ்வு உயருகிறது; வாழ்வு வாழ்வாகிறது. இதெல்லாம் உண்மைதானா? எத்தனையோ விவாகங்கள், விவாகம் என்றால் என்ன என்பதையே சரிவரப் புரிந்து கொள்ளாமல் நடை பெறுகின்றனவே! பெண் ஆணை விரும்புகிறாள். ஆண் பெண்ணை விரும்புகிறான். ஆனால் யாரும் கட்டுப்பாட்டை

விரும்புவதில்லை. 'விவாகம் என்பது பரஸ்பர சம்பந்தம் மட்டும் அல்ல; பரஸ்பர கட்டுப்பாடுங்கூட' என்பதைப் புரிந்து கொள்ளுபவர்கள் வெகு அபூர்வம். சம்பந்தம் இன்றிக் கட்டுப்பாடு ஏற்பட முடியாது. ஆனால் கட்டுப்பாடின்றிச் சம்பந்தம் ஏற்பட முடியும் என்பதைப் புரிந்து கொள்பவர்களும் வெகு குறைவுதான்.

ஹிந்து சமூகத்தில் இது போன்ற கட்டுப்பாடுகளை அமைப்பதில் தாய் தந்தையர்கள் வெகு திறமைசாலிகளாக, வெகு சாமர்த்தியசாலிகளாக இருந்து வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். வாழையடி வாழையாக வழங்கி வரும் விவாகம் என்னும் இந்தச் சம்பிரதாயம் இளம் பிராயத்தினர்களைச் சாந்தமானவர்களாகவும் தறிகெட்டுத் திரியாமல் அமைதியே உருவானவர்களாகவும் ஆக்க ஒப்பற்ற ஔஷதமாக விளங்குகிறது.

ராமலாலும் சுபத்திராவும் ஹிந்து சமூகத்தில் பிறந்து, ஹிந்து சமூகத்திலேயே வாழ்ந்தவர்கள் அல்லவா? இம் மாதிரிக் கட்டுப்பாடு நிறைந்த வாழ்வை நேரான முறையில் அமைக்கும் பண்பும் பழக்கமும் அவர்களுக்கும் பரம்பரைப் பிதுரார்ஜிதமாகக் கிடைத்திருந்ததில் ஆச்சரியம் என்ன? இந்தப் பண்பும் பழக்கமும் கொண்டிருந்த காரணத்தினால் தான் அவர்கள் மனோரமாவுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள். வரவும் முடிந்தது.

மனோரமாவின் தோழியின் பெயர் சம்பா. இருவரும் நெருங்கிப் பழகியவர்கள். ஒருவரை யொருவர் சர்வ சாதாரணமாகக் குசலப் பிரச்னம் விசாரித்துக் கொண்டனர். அந்த வேளையில் சம்பா தன்னைப் பார்க்க வந்தது மனோரமாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ ஆறுதலாக இருந்தது. அவள் அடிக்கடி மனோரமாவைப் பார்க்க வந்து போவது உண்டு. அவள் புக்ககம் இருந்தது அந்த ஊரில்தான். அவள் பிறந்தகம் போய் அப்பொழுது தான் புக்ககத்துக்குத் திரும்பி வந்திருந்தாள். அவளுடைய கணவன் அந்த ஊர்க் கல்லூரியிலேயே படித்தவன். அவன் அடிக்கடி மனோரமாவின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருந்த சுதாகரை வந்து பார்த்துப் போவது உண்டு. அவனும் சுதாகரும் நெருங்கிய நண்பர்கள். ஒரே வகுப்பில் படித்தவர்கள். ஆதலால் தான் அடிக்கடி சுதாகரைக் காண வரும் அவனை மனோரமா எத்தனையோ தடவை பார்க்க நேர்ந்திருந்தது.

மனோரமாவும் சம்பாவும் என்ன என்னவெல்லாமோ பேசத் தொடங்கினர். பேச ஆரம்பித்த அவர்களுக்குப் பொழுது போவதே தெரியவில்லை. மனோரமா தனக்கு ஏற்பட்டிருந்த தாங்க முடியாத தலைவலியைக் கூடப் பேச்சு சுவாரஸ்யத்தில் மறந்து போய் விட்டாள். அவர்கள் பேச்சில் அப்படி என்ன சுவாரஸ்யம் இருந்தது? பேச்சு பெரும்பாலும் சம்பாவின் கணவனைச் சுற்றிச் சுற்றியேதான் நடந்து கொண்டிருந்தது.

சம்பாவின் கணவன் கல்லூரிப் படிப்பை முடித்ததும் சட்டம் படித்து வக்கீல் ஆவதற்காகப் பம்பாய்க்குப் போயிருந்தான்.

"பம்பாயில் செலவு ரொம்ப ரொம்ப அதிகமாம். சின்னச் சின்ன அறைகளுக்கே வாடகை அதிகமாம். அதில்தான் புறாப் போல் அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறதாம். தனியாக இருப்பதில் சிறிதும் சௌகரியம் கிட்டுவதில்லையாம்.

இது போன்ற விஷயங்களை யெல்லாம் விடாமல் சம்பா தன் தோழிக்குச் சுவாரஸ்யமாகச் சொன்னாள். பிறகு, "உனக்குத் தெரியுமா, மனோரமா? பம்பாயில் கல்யாணமாகாத மனிதன் தனியாக வாழ முடிவதில்லையாம். யாராவது தோழனுடன்தான் இருக்க வேண்டியிருக்கிறதாம்" என்று கூறினாள்.

பம்பாயில் வாழ்வதென்றால் அதற்கு இப்படியும் ஒரு விபரீதமா?—மனோரமாவுக்கு அதைக் கேட்கவும் ஒரே வியப்பாகப் போய் விட்டது. "ஏன் அப்படி வாழ வேண்டியிருக்கிறதாம்? அப்படி வாழ வேண்டியதற்கு ஏதாவது காரணம் உண்டாமோ?" என்று சம்பாவைக் கேட்டாள் அவள்.

"என்ன சொல்வேன், போ! பம்பாய் ரொம்ப ரொம்ப மோசமான பட்டினமாம். நல்லவர்களைக் கூடக் கெடுத்து விடுகிறதாம்" என்று பீடிகை போட்ட சம்பா, "அவரிடமிருந்து கூடக் கடிதம் வந்திருந்தது. அவருடன் முன்னால் ஒரு சிநேகிதன் இருந்தானாம். அவன் அவரை விட்டு விட்டுப் போய்

## அவர்கள் பிரார்த்தனை

ஆசீர்வாதபுரம் பொதுஜன ஊழியர் சங்கம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது:

"மேன்மை தங்கிய சென்னை மாகாண முதன் மந்திரி ராஜாஜி அவர்களின் விசேட முயற்சியினால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எங்கள் பேட்டையின் சார்பாக எமது சங்கம் வரவேற்பதுமில்லாமல் இத்திட்டம் ஹரிஜன மக்களின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பிற்போக்குக் கட்சிகளான 'தி. க.', 'தி.மு.க.', 'கம்யூனிஸ்ட்' ஆகியவைகள் இவ்வரிய திட்டத்தை எதிர்ப்பதை இச் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுமல்லாமல் நமது ஒப்புயர்வற்ற தலைவர் ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு எமது ஹரிஜனசமூகம் என்றும் கடமைப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எல்லாம்வல்ல இறைவன் தமிழ் நாட்டின் தலைப் புதல்வருக்கு நீடிய ஆயுளைத் தந்து மேன்மேலும் இந்நாட்டுக்கு வழிகாட்டியாக விளங்க வேணுமாய்ப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்."

சென்னை — ரே. துரைக்கண்ணு
27—8—53 — (கௌரவ காரியதரிசி)

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா


பதினேழு வயதுப் பையன் உயர்தரப் படிப்புக்காக கல்லூரியில் சேர்ந்தான். தொடர்ந்து வாசிக்க முடியாமல் விதி வந்து குறுக்கிட்டது. எனவே, அவன் ஜீவனத்துக்கு வழி தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவன் தந்தை கிழக்கு ஆப்பிரிக்காவில் இருந்ததால் அவனும் கிழக்கு ஆப்பிரிக்காவுக்குச்சென்று, அங்கு ரயில்வே இலாக்காவில் ஐம்பது ரூபாய் சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்தான். அங்கு ஏழு வருஷம் வேலை செய்தான். அந்தவேலையில் நீடித்து இருந்தால், தன் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாது என்பதை அறிந்துகொண்டு, மறுபடியும் இந்தியாவுக்கே திரும்பி வந்து விட்டான். பிறகு அவன் இங்கேயே ஏதாவது வேலை தேட முற்பட்டான்.



அந்தப் பையன் வேறு யாருமில்லை. பம்பாயில் உள்ள நேஷனல் அட்வர்ட்டைஸிங் சர்விஸ் லிமிடெட் கம்பெனியின் ஸ்தாபகரும் நிர்வாகத் தலைவருமான ஸ்ரீ ஜகன் நாத் ஜெயினியின் வாழ்க்கை மேலே கூறிய விதம் தான் ஆரம்பமாயிற்று.

லாகூரில் உள்ள ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து, தமது விடா முயற்சியினாலும், உழைப்பினாலும், திறமையினாலும் படிப்படியாக உயர்ந்து இன்றைய உன்னத ஸ்தானத்தில் இருக்கும் ஸ்ரீ ஜகன் நாத் ஜெயினிக்கு, சென்ற ஆகஸ்டு மாதம் 31-ந்தேதி வெகு விமரிசையாக ஷஷ்டியப்த பூர்த்தி விழா நடை பெற்றது. இந்தியாவிலே விளம்பரத் துறையில் கீர்த்தி பெற்று விளங்கும் ஸ்ரீ ஜெயினியின் மேற்படி விழாவை முன்னிட்டுப் பல இடங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. இன்னும் நீண்ட காலம்ஸ்ரீஜெயினி அவர்கள் ஜீவதசையுடனிருந்து தொண்டு புரிந்து வருவாராக! விளம்பரத் துறையில் ஸ்ரீ ஜெயினின் புதல்வர்களான ஸ்ரீ ஹரீஷ் சந்திர ஜெயினும் ஸ்ரீ கைலாச நாத் ஜெயினும் அவருக்கு இரு கரங்களாக இருந்து ஊக்கத்துடன் தொண்டாற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

# குரல் மாறுதல்!



புது டில்லியில் மிக தேசபாவத்துடன் பேசிய பாகிஸ்தான் பிரதமர் கராச்சிக்குப் போனதும் வேறு விதமாகப் பேசுகிறார். காரணம் இதுவா யிருக்குமோ?

விட்டானும். அவனும் கல்யாணமாகாத வனும்!" என்றாள் சம்பா.

"யார்? அவருடைய சினேகிதனா? அவன் எங்கே போய் விட்டானும்?"

பேச்சு வாக்கில் சுதாகரைப் பற்றிய சமாசாரம் ஏதாவது தெரியக் கூடாதா என்று உள்ளூற அவளுக்குச் சபலம். அதனால்தான் மனோரமா சம்பாவிடம் அப்படி அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

அடேயப்பா! இந்தப் பாழாய்ப்போன நம்பிக்கையை என்னவென்று சொல்வது? ஊசி புக இடமிருந்தாலும் ஓடி வந்து முன்னல்லவா நிற்கிறது!


ஆனால்......


சம்பாவுக்கோ தன் கணவனைத் தவிர உலகத்தில் மகத்துவம் வாய்ந்த பொருள் வேறு ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை. 'கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்' என்பார்களே, அந்த நீதியைக் கடைப் பிடித்து அவள் தன் கணவனுடைய குணாதிசயங்களை வாய் ஓயாமல் வர்ணிக்கத் தொடங்கி விட்டாள். தன் கணவரிடமுள்ள இயல்புகளை, அவை நல்லதோ, கெட்டதோ ஒன்றுகூட விடாமல் அவள் உரைக்கத் தொடங்கவே மனோரமாவுக்குக் கொஞ்சம் அலுப்புக் கூடத் தட்டிவிட்டது. 'இவளுக்குச் சிறிதும் வாயையே வலிக்காதா, என்ன?' என்றுகூட எண்ணமிட்டாள். ஏனெனில் அவள் தன் தோழியின் கணவனுடைய குணாதிசயங்களைக் காட்டிலும், அவனுடைய நண்பனின் விஷயங்களைத்தான் அறிந்து கொள்ள அதிக ஆவல் கொண்டிருந்தாள். அவன் நண்பன் ஏன் ஓடினான், எப்படி ஓடினான் என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள விரும்பினாள். ஆயினும் அவளாக அந்த விஷயத்துக்கு வரும்வரை அவள் தன் ஆசைக்கு அணைகோலி வைக்க வேண்டியிருந்தது.

"பம்பாயில் மனிதனை மயக்கக் கூடிய ஆசைகள், பாசங்கள் ஒன்று, இரண்டா? ஓராயிரத்துக்குக் குறையாத ஊர்ப்பட்ட ஆசாபாசங்கள் அல்லவா இருக்கின்றன? அப்படியிருக்கும்பொழுது அவன் அவருடன் எப்படி யிருப்பான்? அவரோ யாரையும் ஏறெடுத்துக் கூடப் பார்க்க மாட்டார். அவர் எந்த மாதிரியான அச்சுப் பிச்சு விஷயங்களுக்கும் போகாதவர். அப்படி யிருக்கும் பொழுது அவருடன் ........." என்று கூறிக் கொண்டு வந்த சம்பா தன் கணவரின் குணாதிசயங்களை யெல்லாம் வர்ணிப்பதில் மறுபடியும் ஈடுபட்டு விட்டாள்.

தலை நிமிர்ந்து ஏறெடுத்தும் பாராத, ரசிகத்தன்மை என்பதே சிறிதும் இல்லாத ஒரு புருஷனைப் பற்றிச் சம்பா வாயாரப் புகழ்வதைக் காண மனோரமாவுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'ஓர் ஆசையைப் பற்றிச் சொன்னால் போதாதோ? ஒன்பதினாயிரம் ஆசைகளைக் காட்டிப் பயமுறுத்தப் பார்க்கிறாளே, இவள்!' என்று எண்ணமிட்டாள். அவளுக்குத் தன் தோழி சம்பாவின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. (தொடரும்)


ESTRELA
BRIGHT LIGHT
LONG LIFE
ESTRELA
REGD TRADE MARK
எஸ்ட்ரெலா பாட்டரீஸ்


Aryan
Regd.
இந்தியாவில்
லேயே
சிறந்த
டூத்
பிரஷ்
பிளாஸ்டிக்
குழாய்களில்
இப்பொழுது
கிடைக்கும்.


உயர்ந்தபக்ஷ மைல்கள் ஓட
லேடெக்ஸ்-இணைப்புள்ள
டன்லப் போர்ட்
இப்பொழுது ஷாகஞ்சில், டன்லப் கம்பெனி
பாரால், பிரசித்திபெற்ற எல்லா வகை கார்கள்
டிரக்குகள், பஸ்களுக்கும் தகுந்த துண்டுபடாத
நாளிலும் நீடித்துழைக்கும்படி அமைந்த டன்லப்
விஸிறி பெல்டுகள் தயாரிக்கப்படுகின்றன.
DX 446 TM

# அன்பு வழி

வசு

அன்று ரகுநாதனுக்கு அவருடைய பெண் ராஜத்தின் கல்யாணத்தைப் பற்றிய கவலையில் ஒரு பகுதி குறைந்தது. அதற்குக் காரணம் ராஜத்தைப் பார்க்க வந்திருந்த ராமமூர்த்தி அவளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொள்ளச் சம்மதம் என்று ரகுநாதனிடம் சூசகமாகத் தெரிவித்ததுதான்.

ஆனால் ராமமூர்த்தியுடன் ராஜத்தைப் பார்க்க வந்திருந்த ராமமூர்த்தியின் தூர உறவினர் ஒருவர் ரகுநாதனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படுமுன் அவரைத் தனியாக அழைத்து, "ஸார், ராமமூர்த்திக்கு ஏற்கெனவே காலஞ் சென்ற அவனுடைய மூத்த மனைவி அபயாம்பாள் மூலமாக இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அவைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ராமமூர்த்தியும் அவனுக்கு இளையாளாக வாழ்க்கைப் படப் போகும் உங்கள் பெண் ராஜமும் சேர்ந்து நிர்வகிக்க வேண்டுமென்பதை நான் மறுபடியும் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ராமமூர்த்தியின் குழந்தைகளில் பெரியவன் பாலுவுக்கு ஏழெட்டு வயதாகிறது. கொஞ்சம் முரண்டும் சுபாவம் உண்டு. அவனுக்கு இளையவன் முகுந்தனுக்கு மூன்று வயதாகிறது. அவன் பரம சாது. அவனால் ஒரு தொந்தரவும் இருக்காது. இந்தத் தாயில்லாக் குழந்தைகள் இருவரையும் குறைவின்றி வளர்க்கும் சாமர்த்தியம் உங்கள் பெண் ராஜத்திற்கு இருக்கும் என்று நீங்கள் நம்பினால் மட்டும் கல்யாணத்திற்கு வேண்டிய மற்ற ஏற்பாடுகளைச் செய்தால் போதும். எதற்கும் வயது வந்த உங்கள் பெண் ராஜத்தையும் இதுபற்றிக் கலந்து அவள் சம்மதிக்கிறாளா என்று அறிந்தபின் எங்களுக்குக் கடிதம் போடுங்கள். இதுதான் ராமமூர்த்தியின் விருப்பமும்" என்று கூறி விட்டுச் சென்றார்.

ராமமூர்த்தியையும் அவனுடன் வந்திருந்த பெரியவரையும் வழியனுப்பி விட்டுத் திரும்பி வந்தார் ரகுநாதன்.

"ராஜம்! ராஜம்!" என்று கூவினார் அவர்.

தோட்டத்தில் தனிமையில் நின்று தனக்கு இந்த வரனும் குதிராமல் போய் விடுமோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த ராஜம் தன் தந்தை கூப்பிடுவதைக் கேட்டதும் வீட்டுக்குள் ஓடோடி வந்தாள்.

அவர், ராஜத்தினிடம் ராமமூர்த்தியுடன் வந்திருந்த உறவினர் தெரிவித்த தகவல்களைக் கூறிவிட்டு, "ராஜம், நீ இந்த விஷயத்தில் உன்னுடைய அபிப்பிராயத்தை என்னிடம் தாராளமாகக் கூறலாம். இவ்வளவு பொறுப்புகளை உன்னால் ஏற்றுக் கொள்ள இயலாது என்று நீ நினைத்தால் இந்த வரனை விட்டு விடலாம். உன் முடிவைத் தெரிந்து கொண்டுதான் நான் ராமமூர்த்திக்குக் கடிதம் எழுத வேண்டும்" என்று சொன்னார்.

ராஜம் ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்தாள். கடந்த ஆறு வருஷங்களாக அவளைப் பார்க்க வந்த வரன்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காரணம் கூறி அவளை ஏற்றுக் கொள்ள மறுத்ததுதான் அவளுடைய அனுபவமாயிருந்தது. முதலில் அவளுக்கு வரன் பார்க்க ஆரம்பித்தபோது ரகுநாதன் அவளை எப்படியாவது மூத்தாளாகத்தான் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்ற சங்கற்பத்தோடு எவ்வளவோ முயன்று பார்த்தார். ஆனாலும் நாள் ஆக ஆக ராஜத்திற்கும் வயது வளர்ந்து கொண்டு வந்தது. வரனுக்கு வயது அதிகமில்லாமலும் மற்ற அம்சங்களில் சுமாராகவும் இருந்தால் ராஜத்தைத் தகுந்த இடத்தில் இளையாளாகக் கூடக் கொடுத்து விடலாம் என்ற அளவுக்கு அவர் மனம் இடம் கொடுத்தது.

அப்படி யிருந்தும் அவர் இட்டமிட்டபடி அவ்வளவு எளிதில் வரன்கள் குதிரவில்லை. இந்த நிலையில் தான் ராமமூர்த்தியைப் பற்றிய தகவல்கள் ரகுநாதனுக்குக் கிடைத்தது. அவனைப் போய்ப் பார்த்தார். ராமமூர்த்திக்கு வயது கிட்டத்தட்ட முப்பது தான் ஆகியிருந்தது. எம். ஏ. வரை படித்திருந்தான். நல்ல சம்பளத்திலும் உத்தியோகத் துறையில் மேலும் அபிவிருத்தி அடையக் கூடிய நிலைமையிலும் இருந்தான். பார்ப்பதற்கும் சுமாராக அழகுடன் விளங்கினான். எல்லாவற்றிற்கும் மேலாக அவனுடைய பேச்சும் குணமும் ரகுநாதனுக்குத் திருப்தியைக் கொடுத்தன. இவ்வளவும் இருந்தும் ராமமூர்த்திக்கு அவன் மூத்தாள் மூலமாக இரண்டு குழந்தைகள் உண்டு என்ற ஒரு காரணம் ரகுநாதன் மனத்தில் கொஞ்சம் சஞ்சலத்தைக் கொடுத்ததே தவிர, அவருடைய பெண் ராஜத்தை ராமமூர்த்திக்கு இளையாளாகக் கொடுத்து விடலாம் என்று அவர் செய்திருந்த தீர்மானத்தைக் கைவிடும் அளவுக்குச் சக்தி வாய்ந்ததாக இல்லை.

இவ்வளவு விஷயங்களையும் தன் மனக்கண் முன்பு கொண்டு வந்து நிறுத்திக் கொண்டாள் ராஜம். அதே தருணத்தில் அன்று பெண் பார்க்க வந்த ராமமூர்த்தி அவளைப் பார்த்து முடிந்ததும் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதில் அவனுக்குச் சம்மதம் என்று அவளுடைய தகப்பனார் மூலம் தெரிந்து கொண்ட அதே விநாடியில் ஆறு வருஷங்களுக்கு மேலாக அவள் மனத்தில் ஆட்சிசெலுத்திய இனம்தெரியாத இருள் விலகித் தனக்கும் மற்றப் பெண்களைப் போல் வருங்காலத்தில் தாம்பத்ய வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை எழுந்து உள்ளம் பூரித்ததையும் நினைவு படுத்திக் கொண்டாள். ராம



மூர்த்தியைத் தன் கணவனாக வரிக்க வேண்டுமென்று அவளுடைய உள்ளுணர்வு கூறியது.

அதற்கொப்ப அவள் ரகுநாதனைப் பார்த்து, "அப்பா, என்னுடைய நன்மையில் கருத்துள்ள நீங்கள் பார்த்துத் தேர்ந்தெடுத்திருக்கும் அவரை நான் எப்படி நிராகரிக்க முடியும்? தவிரவும் மூத்தாளுடைய குழந்தைகளை வைத்துப் பராமரிப்பது என்னுடைய கடமைதானே? ஒருவேளை அந்தக் குழந்தைகளைக் கவனித்து வளர்க்கவே இரண்டாம் தடவை கலியாணம் செய்து கொள்ள அவர் முன் வந்திருக்கலாம். இந்த வரனை ஏற்றுக் கொள்வதில் பூரண சம்மதம்" என்றாள்.

ராஜத்தின் விவேகமான பேச்சைக்கேட்டுத் தனக்குள்ளே வியந்த வண்ணம் "சரி அப்படியானால் இன்றைக்கே ராமமூர்த்திக்குப் பதில் எழுதி விடுகிறேன்" என்றார் ரகுநாதன்.

★

நல்லதொரு முகூர்த்தத்தில் ராஜமும் ராமமூர்த்தியும் தம்பதிகளானார்கள். ராமமூர்த்தியின் மூத்தாளின் குழந்தைகள் பாலுவும், முகுந்தனும் ஏதோ சில காரணங்களால் அந்தக் கலியாணத்துக்கு வரவில்லை. அதனால் அக் குழந்தைகள் எவ்விதமான குணங்கள் படைத்தவர்கள் என்று அறிந்து கொள்ள ராஜத்துக்கும் அவளுடைய குடும்பத்தாருக்கும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. விவாகம் முடிந்த சில நாட்கள் கழித்து ராஜத்தை அவள் கணவனுடைய வீட்டுக்கு அனுப்பி வைத்தார் ரகுநாதன்.

ராஜத்தை அன்புடன் வரவேற்றான் ராமமூர்த்தி. குழந்தைகள் பாலுவும் முகுந்தனும் அப்பொழுது வீட்டில் இல்லாத காரணத்தை ராஜம் அவள் கணவனிடம் கேட்பதற்கு முன்பே ராமமூர்த்தி, "குழந்தைகள் இரண்டு பேரையும் என்னுடைய ஒன்றுவிட்ட அத்தையிடம் அனுப்பி வைத்திருக்கிறேன். நாளைக்கு அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்துவிடுகிறேன். இங்கிருந்து நான்கு மைல் தள்ளியுள்ள கிராமத்திலே தான் அத்தை இருக்கிறாள். அவள் ஊரை விட்டு அடிக்கடி வெளியே போவதில்லை. இருந்தாலும் இந்தக் குழந்தைகளைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு சமயம் இங்கே வந்து போவதுண்டு. இனிமேலும் அம்மாதிரியே இருப்பாள் என்று நினைக்கிறேன். நாளைக்கு அத்தையையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறினான்.

அடுத்த நாள் ராமமூர்த்தி அவனுடைய குழந்தைகள் பாலுவையும், முகுந்தனையும் அத்தையையும் கூட்டிக் கொண்டு வந்து அவர்களை ராஜத்துக்கு அறிமுகம் செய்து வைத்தான். அன்று மாலை அத்தை ஊருக்குத் திரும்பும்போது "இந்தக் குழந்தைகளைப் பேணி வளர்ப்பதற்காகத்தான் ராமமூர்த்தி உன்னைக் கலியாணம் செய்து கொண்டான் என்று நான் சொல்லத் தேவையில்லை. தாயில்லாத குறையை இந்தக் குழந்தைகள் உணராதபடி நீ நடந்து கொள்ள வேண்டும். குழந்தை பாலு கொஞ்சம் முரடன். அதை நீ பொருட்படுத்தாதே. நாளடைவில் சரியாகப் போய்விடும். முகுந்தனைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம். அவனைவிடச் சாதுவான குழந்தையை இந்த நாளில் பார்க்க முடியாது. நான் சௌகரியப்பட்ட போது இங்கே வந்து போகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள் அத்தை.

ராஜம் குடித்தனம் நடத்த ஆரம்பித்துப் பத்து நாட்களுக்குள்ளாகவே அவளுக்கு அலுப்புத் தட்டிவிட்டது. அதற்கு முக்கிய காரணம் பாலுவின் பிடிவாத குணமும் மட்டுக்கு மீறிய துஷ்டத் தனமும் தான். நான் தவறாமல் அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளோடு வலுவிலேயே சண்டை போட்டு அயல் வீட்டார்கள் ராஜத்திடம் புகார் செய்யும்படி வைத்து விடுவான். ராஜம் அவனைக் கண்டிக்க ஆரம்பித்தால் வீட்டிலுள்ள பாத்திரம் பண்டங்களை உருட்டி உடைத்து அட்டகாசம் செய்வான்.

ராமமூர்த்தி ஆபீஸிலிருந்து திரும்பி வந்ததும் பாலுவினால் ஏற்பட்ட அல்லல்களை எடுத்துரைப்பாள் ராஜம். ஒவ்வொரு சமயம் ராமமூர்த்தி பாலுவைக் கண்டிப்பான். பல சமயங்களில் மௌனமாக இருந்து விடுவான். வழக்கமாக ராஜம் பாலுவைப் பற்றிக் குறை கூறுவதிலிருந்து ஒருவேளை வேண்டுமென்றே பாலுவை ராஜம் கொடுமையாக நடத்துகிறாளோ என்றுகூட ஒவ்வொரு சமயம் நினைப்பதுண்டு ராமமூர்த்தி. இவ்வித மனோநிலைமையில் இருக்கும்போது அவன் ஒருநாள் ராஜத்தினிடம், "பாலுவைச் சரியானபடி நடத்தி அவன் குணத்தை மாற்ற உனக்குச்

சுகந்த பரிமளத்திற்கு...

# மைசூர் பாத் டேப்லெட்டுகள்

மனோரம்யமான மல்லிகைப்பூ வாசனையுடன் கூடியது

புகழ்பெற்ற மைசூர் சந்தன சோப்பாரின் தயாரிப்பு

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

*

## கவர்ன்மெண்ட் சோப் பேக்டரி, பெங்களூர்

இந்திய சோப், வாசனைப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்

---

# கொடிய இருமல்



'பெப்ஸ் அருந்துங்கள்' என்று டாக்டர் சொல்லுகிறார்



இருமல், ஜலதோஷம், தொண்டைப்புண், சளி, இன்புளூயென்ஸா, மற்றும் தொண்டை, மார்பு, சம்பந்தமான நோய்கள் வளரும்படி விட்டுவைக்காதீர்கள். அவை உங்கள் இருதயத்திற்கும் சுவாசகோசங்களுக்கும் அபாயகரமான தொல்லையைக்கொடுக்கின்றன. பெப்ஸ் உபயோகித்து உடனே குணம் பெற முயலுங்கள். நீங்கள் பெப்ஸைச்சப்பிடும்போது நோய்தீர்க்கும் மருந்துச்சத்துள்ள ஜீவரஸங்கள் உங்கள் மார்புக்குள்ளும், சுவாச கோசங்களுக்கும் போய்ச்சேருகின்றன. பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்ணைக்குறைத்து, எரிச்சலைத்தணியவைக்கிறது. அபாயமளிக்கும் கிருமிகளை அழித்துவருகிறது. டாக்டர்கள் பெப்ஸைச் சிபார்சு செய்கிறார்கள். இன்சுவையளிக்கும் தொண்டை, மார்பு மாத்திரை அது.

பெப்ஸ் நன்கு அருந்துங்கள்.

# PEPS



தொண்டை, மார்பு வலி, நிவாரண மாத்திரைகள்

மதராஸிற்கு ஸோல் ஏஜன்டுகள்: மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பார்க் டவுன்

சாமர்த்திய மிருக்கும் என்று எண்ணி நான் உன்னைக் கலியாணம் செய்து கொண்டேன். அது தவறு என்று இப்பொழுது எனக்குத் தெரிகிறது' என்று சீறி விழுந்தான்.

தன்னுடைய அனாதரவான நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டாள் ராஜம். பாலு இனி மேல் என்ன விஷமம் செய்தாலும் அதைப்பற்றி ராமமூர்த்தியிடம் பிரஸ்தாபிப்பதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தாள். இதன் பயனாகப் பாலுவின் கை ஓங்கியது. பள்ளிக்கூடம் போவதை நிறுத்தினான். தெருவில் போகும் மற்றப் பையன்களை அழைத்துக் கொண்டு வீட்டில் ஓயாமல் விளையாடுவதையே பொழுது போக்காக வைத்துக் கொண்டான். ராஜத்தின் பொறுமையைச் சோதிக்கும் அளவுக்குப் பாலுவின் துஷ்டத்தனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. தன்னுடைய கஷ்டத்திற்கு விமோசனம் ஏற்பட வழி தெரியாது தவித்தாள் ராஜம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருநாள் ராமமூர்த்தியின் அத்தை வந்திருந்தாள். அத்தையிடம் தன்னுடைய நிலைமையை எடுத்துரைத்தால் அவள் ஏதாவது பரிகாரம் சொல்லக் கூடும் என்ற நம்பிக்கையுடன் பேச்சோடு பேச்சாகப் பாலுவினால் தனக்கு ஏற்படும் தொல்லைகளை எடுத்துச் சொன்னாள். அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "மூத்தாள் குழந்தைகளைப் பற்றிக் குறை கூறாத மாற்றார் தாய்மாரே கிடையாது. அதற்கு நீ மட்டும் எப்படி விதி விலக்காக இருக்க முடியும்? ஒவ்வொரு குடும்பத்தில் சில குழந்தைகளிடம் கொஞ்சம் துஷ்டத்தனம் அதிகமாக இருக்கலாம். இதைப் பெரிதாக்கி என்னிடம் கூற வந்து விட்டாயே? வயது வந்த பெண்ணாயிருந்தும் குழந்தைகளை நல்ல விதமாக நடத்தும் திறமை உனக்கு இல்லையே? அதுதான் இவ்வளவு இடைஞ்சல்களுக்கும் காரணம்" என்று முகத்தில் அடித்தாற் போல் பதில் அளித்தாள் அத்தை.

அத்தையின் உதவியினால் தனக்கு விமோசனம் ஏற்படும் என்று நம்பியிருந்த ராஜத்திற்கு அத்தையின் வார்த்தைகள் மிகுந்த ஏமாற்றத்தையும் துக்கத்தையும் அளித்தன. அப்பொழுது தான் முதன் முதலாக மூத்தாளுக்குக் குழந்தைகள் இருக்கும் ஒரு கணவனுக்குத் தான் இளையாளாக வாழ்க்கைப் பட்டது தவறு என்று எண்ணியது அவள் மனம். தன் முழு மனத்துடன் ராமமூர்த்தியை மணந்த காரணத்தால் அப்பொழுது தனக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைப் பற்றிப் பிறந்தகத்துக்கு எழுத அவள் விரும்பவில்லை. விதிவிட்ட வழியே செல்வதுதான் விவேகம் என்று உணர்ந்து கஷ்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நல்ல காலத்தை எதிர் நோக்கி நாட்களைக் கழித்தாள் ராஜம்.

★

இதற்கிடையில் ஆபீஸ் அலுவல் நிமித்தமாக ராமமூர்த்தி அடிக்கடி வெளியூருக்குப்



"பாட புத்தகங்களுக்கு அதிக விலை வைப்பது நியாயமல்ல. மறு வருஷம் அந்தப் புத்தகங்களை விற்கப் போனால் அவற்றின் விலையில் கால் பாகம்கூடக் கிடைப்பதில்லை."

"அது இருக்கட்டும். நீ துணி வாங்கி ஒரு 'ஷர்ட்' தைக்கிறாய். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அதை விற்றால் அதே விலை கிடைக்க வேண்டும் என்று எதிர் பார்க்கலாமா?"

"அது சரிதான். ஆனால் நான் ஷர்ட்டைக் கொஞ்ச நாட்களாவது உபயோகிப்பதற்கு முடியுமே!"

போய் வரவேண்டியிருந்தது. நாள் கணக்காக ராமமூர்த்தி வீட்டில் இல்லாமல் போனது பாலுவின் துஷ்டத்தனத்துக்குப் பெரிதும் உதவி செய்தது. ராஜத்துக்கு ஒரு நாள் போவது ஒரு யுகம் கழிவது போலிருந்தது. குழந்தை முருகனை வேறு அடிக்கடி துன்புறுத்தி அழவிட்டு ராஜத்துக்கு ஓயாத் தொல்லை கொடுக்கத் தலைப்பட்டான் பாலு.

அன்றொரு நாள் காலை ஒன்பது மணிக்கு வெளியூருக்குப் பயணமானான் ராமமூர்த்தி. ராமமூர்த்தி வீட்டிலிருக்கும் போது புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பின பாலு. ராமமூர்த்தி வீட்டை விட்டு வெளியேறியதும் அவனுடைய பள்ளித் தோழர்களுடன் வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டான். வந்ததும் எல்லோருமாகச் சேர்ந்து வீட்டிற்குள்ளேயே ஒரு மரப் பந்தை மட்டையால் அடித்து விளையாட ஆரம்பித்தார்கள்.

ராஜம், பாலுவிடம் "இங்கே இருக்கும் கண்ணாடி பீரோ, சுவர் கடிகாரம், ரேடியோ இவைகளின்மேல் பந்து பட்டால் அவைகள் உடைந்து போய்விடும். வேண்டுமானால் பின் பக்கத்துத் தோட்டத்தில் போய் விளையாடுங்கள்" என்று மன்றாடினாள். அவளுடைய வார்த்தைகளை அலட்சியம் செய்து விட்டுப் பாலுவும் அவன் சிநேகிதர்களும் விளையாடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

ராஜம் வேறு வழியின்றி வீட்டின் பின் கட்டுக்குத் திரும்பினாள். சற்று நேரத்துக்



அப்பா :—நீ ஏன் சயன்ஸ் வாத்தியார் வகுப்புக்கும் போகாமல் மட்டம் போடு கிறாய்? அவர் கடினமான கேள்விகள் கேட்கிறாரா?

பையன் :—இல்லை, அப்பா! நான்தான் அவருக்குப் புரியாத கேள்விகளை யெல் லாம் கேட்கிறேனாம்.

கெல்லாம் முன் ஹாலில் ஏதோ பெரிய சத்தம் கேட்டு, ராஜம் ஓடோடியும் வந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளைத் திடுக்கிட வைத்தது. அவள் பயந்தது போலவே சுவரில் மாட்டியிருந்த பெரிய கடிகாரம் மரப் பந்தினால் அடிபட்டு அது இருந்த இடத்திலிருந்து பெயர்ந்து கீழே விழுந்து சுக்கல் சுக்கலாகப் போயிருந்தது.

பாலுவுடன் கூட வந்திருந்த சிறுவர்கள் 'பாலுதான் மட்டையைக் கொண்டு பந்தைக் கடிகாரத்தின் மேல் படும்படி அடித்து உடைத்து விட்டான்' என்று கூறிவிட்டு அங் கிருந்து ஓட்டம் பிடித்தனர். பாலுவும் அவர் களைப்பின் தொடர்ந்து ஓடியிருப்பான். ஆனால் அவன் சற்றும் எதிர் பாராத ஒரு சம்பவம் அதற்குத் தடையாக நின்றது. வெளியூருக்குப் பிரயாணமான ராமமூர்த்தி ரயில் தவறிய காரணத்தால் வீட்டுக்குத் திரும்பி வந்து அப் பொழுதுதான் கூடத்திற்குள் நுழைந்தான்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் விழுந்து அதன் பகுதிகள் சிதறுண்டு கிடப்பதையும் பந்து மட்டையுடன் பாலு அங்கே நிற்பதை யும் கண்ணுற்ற ராமமூர்த்தியின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. 'இன்றைக்கு இவனை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை' என்று கூறிய வண்ணம் மூலையில் சாத்தி யிருந்த பிரம்பை எடுத்துப் பாலுவை நோக்கி ஓங்கினான் ராமமூர்த்தி. பாலுவின் மேல் அந்த ஒரு அடி விழுந்திருந்தால் வலி தாளா மல் குழந்தை துடி துடித்துப் போயிருப் பான். மருட்சி நிறைந்த பாலுவின் கண்கள் ராஜத்தை நோக்கின. 'சித்தி, நீ என்னைக் கைவிட்டு விடாதே' என்று அவனுடைய பார்வை ராஜத்தைக் கெஞ்சியது.

ராஜத்தின் பெண் உள்ளம் பதைபதைத்தது. கண் இமைக்கும் நேரத்திற்குள் ராமமூர்த்தி ஓங்கின பிரம்புக்கும் பாலுவுக்கும் இடையே பாய்ந்தாள் ராஜம். பாலுவை நோக்கி ராம மூர்த்தி வீசிய பிரம்பின் அடி ராஜத்தின் கையில் விழுந்தது. அவள் அணிந்திருந்த கண்ணாடி வளையல்கள் உடைந்து ஒன் றிரண்டு கண்ணாடித் துண்டுகள் அவளுடைய கைகளில் புகுந்து ரத்தம் பீறிடச் செய்தன.

"உன்னை யார் நடுவில் வரச் சொன்னார்கள்" என்று கர்ஜித்த வண்ணம் பாலுவை நோக்கிப் பாய்ந்தான் ராமமூர்த்தி.

பாலுவைத் தன்னுடன் அணைத்தவாறு ராஜம் "ஏன் இவ்வளவு பதட்டம்? நான் கூறு வதைக் கொஞ்சம் கேளுங்கள். நான்தான் பாலுவை வெய்யிலில் அலையாமல் வீட்டுக் குள்ளேயே விளையாடிக் கொண்டு இருக்கச் சொன்னேன். கடிகாரம் உடைந்ததற்கு நான்தான் பொறுப்பு. தப்பு என்னுடையது தான்" என்றாள்.

"நீங்கள் இரண்டு பேரும் இருக்கும் வரை இந்த வீடு ஒழுங்காக இருக்காது" என்று கூறி விட்டுக் கையிலிருந்த பிரம்பை வீசி எறிந்து விட்டு மாடியிலிருந்த தன்னுடைய அறைக்கு விரைந்தான் ராமமூர்த்தி.

ராமமூர்த்தி அங்கிருந்து அகன்றதும் பாலு கண்களில் கண்ணீர் மல்க ராஜத்தை நோக்கி, "சித்தி, என்னால்தான் உனக்கு இன்னிக்கு இவ்வளவு கஷ்டமும் வந்தது. இனிமேல் நான் ஒரு விஷமமும் செய்ய மாட்டேன்" என்று கூறி அவனுடைய பிஞ்சு மனம் பாகாக உருகிய வண்ணம், விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

தன்னுடைய புடவைத் தலைப்பால் குழந்தை பாலுவின் கண்களைத் துடைத்தவாறு அவனைச் சமாதானப் படுத்திக்கொண்டிருந் தாள் ராஜம்.

மாடியிலிருந்து மறுபடியும் கீழே இறங்கி வந்தான் ராமமூர்த்தி. அவனுடைய கோபம் தணிந்திருந்ததைப் பார்த்ததும் பாலு அவ னிடம் சென்று, "அப்பா! நான்தான் சித்தி இங்கே பந்து விளையாடக் கூடாதுன்னு சொல்லியும் விளையாடினேன். தப்பு பூராவும் என் மேலேதான்" என்றான் விசித்தவாறு.

"சரி போனது போகட்டும் இனி மேல் நீ சமர்த்தாக இரு" என்று கூறிக்கொண்டே ராஜத்தை நோக்கினான் ராமமூர்த்தி. அவன் அவளை அப்போது பார்த்த பார்வை 'ராஜம், என்னுடைய குழந்தைகள் உன்னைச் சித்தி யாக அடைந்தது அவர்களுடைய அதிர்ஷ்டம் தான்' என்று கூறுவது போல இருந்தது.

அன்று, தான் கடைப் பிடித்த அன்பு வழி பாலுவின் மனத்தை மாற்றியது மல்லா மல், தன் கணவனின் இதயத்திலும் தனக்கு ஒரு நிரந்தர இடம் வகுத்துக் கொடுத்ததை எண்ணி ராஜத்தின் உள்ளம் உவகையால் நிரம்பி இருந்தது.


நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும் வாசனையுடனும் இருக்க, உயர்ந்த, புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட் பவுடர். மென்மையும், நறுமணமும் சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும் வெப்பத்தில் குளுமையும் இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின் வாசனைப் பூஷணம். ஈரத்தை உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்! கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை! யும்-குழந்தைக்கு ஏற்றது.
மிக எடுப்பானது உங்கள் வதனத்தை அழகு படுத்தும் பவுடர்.
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்
புதிது!
PROTEX
All-Purpose
TOILET POWDER
கால்கேட்டின் புதிய சிறந்த தயாரிப்பு

நடுங்கும் குளிர் ஜுரம் மேலும் உடலில் வலி இவற்றுடன் ஆரம்பமாகும்

# மலேரியாவை

# 'பாலுட்ரின்'

# நீக்குகிறது

மலேரியாவின் சின்னங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

முதலில் குளிரால் நடுக்கம் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.

•

வயதுவந்தவர்களுக்கும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை

6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை

6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.

ICI



# அபூர்வ சகோதரிகள்

கடகம்

“சின்னம்மா! அம்மாவைப் பற்றிச் சொல்லுவதாக வாக்களித்திருக்கிறீர்களே. எப்பொழுது சொல்லப் போகிறீர்கள்” என்று கேட்டான் பிரபல சினிமா டைரக்டரான ரங்கன்.

அவனுக்கு எதிரில் கோரைப் படுக்கையில் ஒரு வயோதிக மாது படுத்திருந்தாள். அவள் பேச முடியாமல் பேசினாள்.

“உன் அம்மா மட்டும் உயிருடன் இருந்து இன்று உன் நிலைமையைப் பார்த்து விட்டால் எப்படி மனம் பூரித்துப் போவாள் தெரியுமா! இருந்தாலும் அவள் ஆத்மா சாந்தியடையும், அவளுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டேன்” என்றாள் அந்த மூதாட்டி.

“சின்னம்மா! தயவு செய்து சொல்லுங்கள். என் அம்மாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று என் மனம் துடியாய்த் துடிக்கிறது” என்று கெஞ்சினான் ரங்கன்.

“அது ஒரு சோகக் கதை. அதைத் தெரிந்து கொள்ளவே வேண்டாம்” என்றாள் மூதாட்டி.

ரங்கன் பிடிவாதம் பிடிக்கவே கோரைப் படுக்கையில் இருந்த அந்த மூதாட்டி அவனுக்கு அவன் தாயைப் பற்றிய விவரத்தைச் சொன்னாள்.

*       *       *

அவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரிகள்; அனாதைகள். தெருவில் பாட்டுப்பாடி வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் அவர்களைச் சேர்ந்தே காணலாம். அவர்களுக்குச் சொந்த ஊர் என்று ஒன்றில்லை. இன்று இங்கிருப்பார்கள். மறுநாளைக்கு எந்த ஊரில் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. எங்கேயும் அவர்கள் நிலைத்து நின்றதில்லை. நாடோடிகளாகவே அவர்கள் இருந்து வந்து விட்டனர்.

அவர்கள் பெற்றோர்களும் நாடோடிகள் தானோ என்னவோ! அவர்களுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய், அன்புடன் அணைத்து ஆதரிப்பதற்கு யாருமின்றித் தங்களையே நம்பி, இப்பரந்த உலகில் உயிர் வாழ வேண்டும் என்பதைத்தான் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். தெருவில் பாட்டுப் பாடிப் பிழைப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியும் இல்லை. தைரியமாக அவர்கள் இந்தத் துறையில் இறங்கி விட்டார்கள்.

ஒவ்வொரு வீட்டுக்கு எதிரேயும் சிறிது நேரம் பாடுவார்கள். ஆமாம், இந்தப் பாடும் திறமை தான் அவர்களை வாழ வைத்தது: வாழ வைத்துக் கொண்டிருந்தது. அவர்கள் சேர்ந்து பாடினாலும் சரி, தனித் தனியே பாடினாலும் சரி, மரக் கட்டைத் தாளத்தோடு, கேட்பதற்கு மிக மிக இனிமையாக விருக்கும். அவ்வளவு ஞானம் அவர்கள் இருவரது சாரீரமும் இசைந்து போயிருந்தது. சினிமாபாட்டுக்களிலிருந்து தேவாரம், திருவாசகம், ஆண்டாள் பாசுரம், திருப்புகழ், அருட்பா, தாயுமானவர் பாடல், மற்ற சித்தர் பாடல்கள் வரை எல்லாம் அவர்களுக்குத் தண்ணீர்ப் பட்ட பாடு தான். பாடக் கிளம்பி விட்டால், சக்கைப்போடு போட்டு விட்டுத்தான் நிறுத்துவார்கள். கேட்பவர்கள் அயர்ந்து போய் விடுவார்கள். மெய்ச் சிலிர்ப்பு ஏற்பட்டு விடும்; உள்ளமும் கூடவே உருகிவிடும்; உடல் முழுதும் பக்தி உணர்ச்சி ஏறி விடும். இன்னமும் கேட்டுக் கொண்டே யிருக்க மாட்டோமா என்று எண்ணத் தோன்றும். காலணா, அரையணாக் காசோ, அரிசியோ அல்லது சாப்பாடோ அவர்களுக்கு இல்லை என்று சொல்ல யாருக்குமே மனம் வராது. போதிய— அளவு சேர்ந்தவுடன், அவர்கள் தங்குமிடத்தை ஊர்க் கோடியிலிருந்த மண்டபமோ, கோயிலோ அல்லது ஏதாவது சாவடியோ — அதை நோக்கிப் போய் விடுவார்கள்.

கருணை மிகுந்த ஜனங்களை நம்பித்தான், அவர்களுடைய ஆதரவை நம்பித்தான், அதுவும் தங்கள் பாட்டுக்கென்று ஏற்பட்டிருந்த அந்தப் பரிசை நம்பித்தான், அவர்கள் வாழ்ந்தார்கள்; வாழ வேண்டியவர்களாக இருந்தார்கள்.

அநாதையாய், ஆதரவற்றுப் போயிருந்த அவர்கள், இயற்கையிலேயே ஒட்டிய பாசத்தாலும் உள்ளத்தின் பிணைப்பினாலும், ஒருவரை விட்டு ஒருவர் கணமும் பிரிக்க முடியாதபடி இணைந்திருந்தனர், அக்காள் தங்கையாக. ஒருத்தியை விட்டால் ஒருத்திக்கு வேறு நாதியில்லை; வழியுமில்லை; ஆதரவுமில்லை.


அவர்களில் மூத்தவள் மீனாட்சி; வயது பதினெட்டு. இளையவள் காமாட்சி; இவளுக்கு அவளை விட மூன்று வயது குறைவு. அவர்களாகத் தங்களுக்கு இந்தப் பெயர்களை வைத்துக் கொண்டார்களோ, என்னவோ! மீனாட்சியும், காமாட்சியுமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

மீனாட்சி உடல் வனப்பு மிகுந்தவள். வெந்த மேனியும், மருண்ட விழிகளும், களர்ச்சி நிறைந்த ‘களை’யான முகமும், அவள் அழகைக் கண்டவர் மயங்கும் வண்ணம் அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. ஆனால் காமாட்சி அக்காளைப் போல அவ்வளவு அழகுடையவள் அல்ல. முகத்திலிருந்த அம்மை வடுக்கள் அவள் அழகைக் குறைத்திருந்தன. அத்துடன் அவளுக்கு ஒரு கால் சொண்டி. ‘மரக் கால்’ன் துணை கொண்டும், அக்காளின் ஆதரவினாலும் நடந்து கொண்டிருந்த அவள் சற்று விகாரமாகத்தான் காணப்பட்டாள்.

உடலில் ஊறிப் போயிருந்த உள்ளத்தில் பதிந்து கிடந்த சோகம், ஏமாற்றம், விரக்தி, வறுமைப் பிணி போன்றவைகளின் பிரதிபிம்பமாக அவர்கள் இருந்தார்கள். மீனாட்சியின் அழகுத் தோற்றத்தில் இவையெல்லாம் மறைந்து போனது போலத்தான் தோன்றும். ஆனால் காமாட்சியின் முகமோ, எல்லாவற்றையும் பிரதிபலித்துக் கொண்டு, பார்ப்பவர்களின் உள்ளத்தில் சஞ்சலமுண்டாகி, அனுதாபம் கொள்ளும்படி செய்துவிடும். இந்த அபூர்வ சகோதரிகள், எப்படியோ, எதையும் சமாளித்துக் கொண்டு, சந்தோஷமாகவே தங்கள் நாட்களை ஓட்டி வந்தனர்.

மீனாட்சியின் அழகை உத்தேசித்து எவனாவது ஒருவன், அவளைக் கல்யாணம் செய்து கொண்டு விடுவான். அவளோ தன் நொண்டித் தங்கையை உத்தேசித்து, எதிலும், தன் மனத்தைச் செலுத்தாமலிருந்தாள். வெறுப்பு, விருப்பற்ற மனமுடையவளாகவே இருந்தாள்.

காமாட்சிக்குத் தன்னுடைய நிராதரவான நிலைமை நன்கு தெரிந்து தானிருந்தது. அக்காளை விட்டால், அவளுக்கு வேறு கதியில்லை. “அக்காள் என்னை மோசம் செய்ய மாட்டாள்; என்னை விட்டுப் போகமாட்டாள். சாகும் வரையில் இப்படியே இருந்து விடுவோம்” என்றுதான் அவள் எண்ணினாள்; நம்பினாள். தன் அருமை அக்காளிடம் உயிரையே வைத்திருந்தாள்.



கடலூர் 'கல்கி' ஏஜண்டும் 'மெயில்' ஏஜண்டும் திருபருமான ஸ்ரீ என். ராஜகோபாலனின் இளைய சகோதரர் சிரஞ்சீவி என். வெங்கடராமனுக்கும், கடலூர் முனிசிபல் உயர்தரப் பாடசாலை நிலையர்த் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஆர். சாமிநாத ஐயர் அவர்களின் குமாரத்தி செள. சாரதாம்பாளுக்கும் சென்ற ஆகஸ்டு மாதம் 26உ கடலூரில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

— வாழ்க மணமக்கள் —

இவ்விருவர் உள்ளத்திலும் தவறான எண்ணங்களோ, அபி'ப்பிராய பேதங்களை உண்டு பண்ணும் விஷவித்தோ இதுவரையில் ஏற்பட்டதில்லை.

*　　*

சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனத் திருவிழா. எங்கெங்கோ மூலை முடுக்குகளி லிருந்தெல்லாம் வந்திருந்த ஜனக் கூட்டம் அதிகமாகத்தா னிருந்தது. தங்கள் பிழைப்பை நாடி வந்த நாடோடிகளும் அநேகம் பேர்கள். நொண்டி, முடம், கூன், குருடு — இப்படிப் பலப்பல அநாதைகள்.

அத்தகையோரில் இந்த இரு சகோதரிகளும் கூட இருந்தனர். கடைத் தெரு, தேரடி மற்று முள்ள இடமெல்லாம் அவர்கள் நின்று பாடினார்கள். அவர்கள் பாட்டின் இனிமையில், இசை வெள்ளத்தில், மயங்கி நின்றவர்கள் எல்லாம் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அங்கே ஒரு பெரிய கூட்டம்தான். கா[redacted]க் காசுகளாகவே அவர்களுக்கு நிறையக் கிடைத்தன.

அவர்களுக்கு நேர் எதிரேயும் ஒரே கும்பல். அங்கும் ஒருவன் பாடிக் கொண்டிருந்தான். அவனும் ஒரு பாடிப் பிழைக்கும் நாடோடிதான். வாலிப வயது அவனுக்கு. தன் தலைமயிரைப் பின்னால் அலங்காரமாக வாரி விட்டிருந்தான். அவன் நெற்றியிலே ஒரு கருஞ்சாந்துப் பொட்டு. வாட்ட சாட்டமாய் இருந்தான். அவன் நன்றாகப் பாடினான். அவனுக்கும் நிறையக் காசுகள் கிடைத்தன.

மீனாட்சியும், காமாட்சியும் அவனைப் பலமுறை பல இடங்களில் பார்த்திருந்தார்கள். அவனும் பார்த்திருக்க வேண்டும். சொல்லி வைத்தாற் போல், அவர்கள் கூட்டம் போட்ட இடத்துக்கு எதிரே அவனும் கூட்டம் கூட்டி மக்களிடம் காசு பெற்றுக் கொண்டிருந்தான்.

காமாட்சிக்கு அவன் அப்படிச் செய்தது பொறாமையாக இருந்தது. "இவன் ஒருவன் எங்கிருந்து நமக்குப் போட்டியாக வந்து முளைத்தான்!" என்று எண்ணும் போதெல்லாம், அவள் உள்ளம் ஆத்திரத்தில் பற்றி எரிந்தது.

ஆனால் மீனாட்சியின் மனமோ தங்கையைப் போல் வேதனைப் படுவதாக இல்லை.

"அவனும் நம்மைப் போல் ஒரு அநாதை போலிருக்கு. ஆள் அழகாய், கம்பீரமாகத்தானிருக்கிறான். நமக்குக் காசு நிறையக் கிடைக்கா விட்டாலும், அவனுக்காவது கிடைத்துவிட்டுப் போகட்டும்" என்று நினைத்தாள் மீனாட்சி. அவனது நிலை கண்டு தன்னுள்ளே வருந்தினாள்; இரங்கினாள்; அனுதாபப் பட்டாள்.

"அவனுக்கு மனைவி என்று ஒருத்தி இருப்பாளா! அல்லது அவனும் தனி ஆள்தானா?"—அவளுக்கு இப்படி ஒரு சந்தேகம் கூடவே எழுந்தது. ஏனோ, தெரியவில்லை. அவனை முதல் முதலாகப் பார்த்ததிலிருந்து, அவனிடம் அவளுக்கு இனம் விளங்காத அன்பு, விவரம் அறியாத பாசம் ஏற்பட்டது.

அன்றையப் பொழுது சாய்ந்தது; இரவு நேரத்தைக் கழிக்க அச் சகோதரிகள், ஊருக்கு அப்பால் குளத்து மேட்டி லிருந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து, அந்த நாடோடி பாட்டுக்கார இளைஞனும் அந்த மண்டபத்துக்கே வந்து சேர்ந்தான்.

மீனாட்சி சந்தேகப் பட்டபடி மனைவி என்று யாரும் அங்கு அவனுக்காகக் காத்திருக்கவில்லை. அவன் ஒரு பக்கம் கற்களை அடுக்கி, அடுப்புப் பற்றவைத்து, சமைக்கத் தொடங்கினான். மீனாட்சியின் அனுதாபம் இன்னும் அதிகரித்தது. அவனுக்காக அவள் பரிதாபப் பட்டாள்.

"நீங்கள் இரண்டு பேரும் நன்றாகப் பாடினீர்களே! எங்கே, எப்படி இதை யெல்லாம் கற்றுக் கொண்டீர்களோ" என்று சிரித்துக் கொண்டே அவன் கேட்டான். மங்கிய வெளிச்சத்தில் அவர்களிருவரையும் அவன் நிமிர்ந்து பார்த்தான்.

அவன் பேச்சைக் கேட்டதும், மீனாட்சியின் மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகளில்லை.

"நீங்களும்தான் ரொம்ப நன்றாகப் பாடினீர்கள். ஏன், நீங்களே சமைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! உங்கள் மனைவி எங்கே!"

"நாடோடிக்கு அது ஒன்றுதான் குறைச்சல்!"

"நாங்கள்தான் சமைக்கிறோமே, உங்களுக்கும் சேர்த்துச் சமைத்து விடுகிறோம்."

"ரொம்ப நல்லதாய்ப் போச்சு."

காமாட்சிக்கு அக்காள் அவ்வாறு சொன்னது பிடிக்கவில்லை. அவனிடத்தில் அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே ஒருவித வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இருந்தும் அவள் எதையும் வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை. எதிலும் பட்டதும் படாததுமாக இருந்துவிடுவது என்று தீர்மானித்து விட்டாள்.

சாப்பாடு முடிந்தது; சொக்கனுக்கு வெகுவாகத் திருப்தி ஏற்பட்டது. ஆமாம், அந்தச் சகோதரிகளிடம் தன் பெயரைச் சொக்கன் என்று சொல்லி யிருந்தான் அவன்.

அன்றிரவு நீண்ட நேரம், சொக்கனும், மீனாட்சியும் எதை எதையோ பற்றிப் பேசிக்கொண்டும், சிரித்துக் கொண்டு மிருந்தார்கள்.

மறுநாள் காலையில் சொக்கன் அந்தச் சகோதரிகளுக்கு ஒரு யோசனை சொன்னான்.

"பாவம், காமாட்சி ஏன் இந்தக் காலோடு அலையவேணும்! இங்கேயே மண்டபத்தில் இருந்து விடட்டும். நாம் மட்டும் கடைத் தெருவுக்குப் போவோம்; பாடுவோம். கிடைக்கும் காசுகளை மூன்றாகவே பிரித்துக் கொண்டால் போச்சு" என்றான் அவன். மீனாட்சிக்கு அது நல்ல யோசனையாகவே பட்டது. அவளும் "சரி" என்று உடனே ஏற்றுக் கொண்டாள்.

காமாட்சிக்கு அவன் அப்படிச் சொன்னதும், அதற்கு அவள் அக்காள் சம்மதித்ததும், மனத்தில் வேதனை செய்தது. "சனியன், இவன் எம்

இருந்து வந்து தொலைந்தான். நொண்டி என்று என்னை அலட்சியப் படுத்துகிறான். இவனால் என்ன சங்கடங்கள் நேருமோ!" என்று அவள் தனக்குள்ளே நினைத்துக் கொண்டாள்.

சொக்கனும் மீனாட்சியும் திட்டமிட்டபடியே தினந்தோறும் கடைத் தெருக்களுக்குப் போய்ப் பாடினார்கள்; நிறையக் காசுகள் பெற்றார்கள். காமாட்சியை எங்காவது ஓரிடத்தில் இருத்தி விட்டு, அவ்விருவரும் வெளியில் போய்த் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். நொண்டிப் பெண் காமாட்சி எண்ணியபடி, அவன் இலகுவில் பிரிந்து போய் விடுபவனாக இல்லை.

அந்த இரு சகோதரிகளும், ஊர் மாறி ஊர் போய்க் கொண்டிருந்தார்கள். சொக்கனும் நிழல் போல் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

இப்படி மூன்று மாத காலம் போயிற்று. இதற்குள் அவனும் மீனாட்சியும் மிகவும் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்ததைக் காமாட்சி நன்கு அறிந்து கொண்டிருந்தாள். "மூடமான என் கதி என்ன ஆகுமோ! ஆவதென்ன! கடவுள் இருக்கிறார். கைவிடப் போவதில்லை" என்று எண்ணினாள். விவரம் தெரியாத ஏதோ ஒருவித பயம் அவள் உள்ளத்தைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருந்ததையும் அவள் உணர்ந்தாள்.

அவள் பயந்தபடியே நடந்து விட்டது. ஒரு நாள் சொக்கன் மீனாட்சியைக் கல்யாணம் செய்து கொண்டான். அத்துடன் காமாட்சியின் உள்ளக் கவலையும் அதிகமாயிற்று. "எந்த நிமிஷம் அவர்கள் என்னை விட்டுப் பிரிந்து போய்விடுவார்களோ!" என்று கூட அவள் பயந்தாள். அவளுடைய அந்த நினைப்பும் சரியாகி விட்டது. ஒரு நாள், நள்ளிரவில் காமாட்சியைத் தனியே விடுத்து, அவ்விருவரும் போயே போய்விட்டார்கள்.

நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல், சொக்கன் ஒரு நாள் அமைதியான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த அவ்விரு சகோதரிகளினிடையே வந்து தோன்றினான்; சின்னஞ் சிறு வயது முதற்கொண்டு இணைபிரியாதிருந்த அவர்களையும் பிரித்து விட்டான். தங்கையின் நலனுக்காகவே, கல்யாணத்தைப் பற்றியே கவனம் செலுத்தாதிருந்த மீனாட்சியின் மனத்தைக் கலைத்து, நொண்டிப் பெண் காமாட்சியின் நல்வாழ்வையும் குலைத்து, அவளைப் பிரித்து, எங்கோ அழைத்துக் கொண்டுபோய் விட்டான்.

தன் வாழ்க்கையில் திடீரென்று ஏற்பட்ட இந்தத் திருப்பத்தைக் கண்டு, காமாட்சி வருந்தினாலும், அவள் கவலையெல்லாம் "அக்காளை அவன் அடித்து விரட்டி யனுப்பாமல் இருக்க வேணுமே. அவளை அனாதரவாக எங்காவது விட்டுப் பிரிந்து போகாமலிருக்க வேணுமே" என்ற கவலைதான். இந்தக் கவலை நாளுக்கு நாள் அவளிடம் அதிகரித்துக் காணப்பட்டது.

காமாட்சியினாலும், மக்களின் மனதைக் கவரும் முறையில், இசையோடு நன்றாய்ப் பாட முடியும். உந்தி. உந்தி நடமாடியவாறு அவள் பாடினாள்; பணம் கிடைத்தது; வயிறார உண்டாள். அவளுடைய நாட்களும் கழிந்து கொண்டிருந்தன.

நொண்டித் தங்கையைப் பற்றி, மீனாட்சி எண்ணிப் பார்த்தாளோ, இல்லையோ, காமாட்சி மட்டும் "அக்காளை மறுமுறை எந்த ஊரிலாவது பார்க்க மாட்டோமா! அல்லது சுகமாக இருக்கிறாள் என்ற செய்தியாவதும் கேட்கமாட்டோமா!" என்று ஒவ்வொரு கணமும் எண்ணினாள். இந்த நம்பிக்கையோடு கூடிய ஆசையும் ஆவலும் உந்தித் தள்ள, அவளும் கிராமம் கிராமமாக, ஊர் ஊராகப் போய்க் கொண்டிருந்தாள்.

இப்படி இரண்டு ஆண்டுகள் போயும், அவளால் மீனாட்சியையோ, சொக்கனையோ எந்த ஊரிலும் காண முடியவில்லை. இருந்தும் அவள் நம்பிக்கையை இழக்காது போய்க் கொண்டே யிருந்தாள். ஒரு தரம் அக்காளைப் பார்த்து விட்டால், பிறகு அவள் உயிர் வாழப் பிரியம் வைக்கமாட்டாள். உள்ளத் திருப்தியோடு சாவதற்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டிருந்தாள்.

* * *

வைகாசி மாதம்; திருப்பாதிரிப் புலியூரில் பாடலீஸ்வரருக்குத் திருநாள். வெள்ளி ரதம் என்றால் ஜனக் கூட்டத்துக்குக் கேட்கவே வேண்டியதில்லை. இந்தத் திருவிழாவைக் காமாட்சி கேள்விப் பட்டாள். "போனால் காசு கிடைக்கும். அத்துடன் அக்காளையும் ஒருவேளை சந்தித்தாலும் சந்திக்கலாம்" என்று அவளும் வந்திருந்தாள்.

உற்சவத்தில், கடை வீதியில் நின்று காமாட்சி பாடினாள்; காசு சேர்த்துக் கொண்டாள்; பசியையும் ஆற்றிக் கொண்டாள். பொழுது சாயும் நேரம் வரையில் ஊர் சுற்றினாள். பின் அவ்வூர் சத்திரத்தில் ஒரு பக்கம் வந்து தங்கினாள். "இங்கேயும் அக்காளைப் பார்க்க முடியவில்லையே. நான் கொடுத்து வைக்காத பாவி" என்று அவள் எண்ணப் பறவை, மீனாட்சியைத் தாங்கிக் கொண்டு வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அப்பொழுது அங்கே சத்திரத்தின் வேறொரு மூலையிலிருந்து, யாரோ ஒரு பெண் முனகிக் கொண்டிருந்த தீனக் குரல் கேட்டது. அவளுக்கு என்ன வியாதியோ! அவதி பொறுக்க மாட்டாது, கதறவும் சக்தியற்றவளாக அவள் இருக்க வேண்டும் என்று தோன்றியது காமாட்சிக்கு. அவள் எழுப்பிக் கொண்டிருந்த முனகலைத் தொடர்ந்து ஒரு குழந்தையின் அழுகுரலையும் அவள் கேட்டாள். "யாரோ, எவரோ, நமக்கென்ன கிடக்கிறது" என்று அலட்சியமாக உட்கார்ந்திருக்க அவளால் முடியவில்லை. அவள் எழுந்து குரல் வந்த திக்கை நோக்கி நடந்தாள். இருளில் அவள் யாரென்றும் தெரியவில்லை.

தெருவில் ஒரு கார் பிரகாசமான வெளிச்சம் போட்டுக் கொண்டு அந்தச் சமயம் ஓடியது. காரின் வெளிச்சம் சத்திரத்தினுள்ளும் ஊடுருவிப்



"உனக்குத் தெரியுமா? இப்பொழுது சாவித்திரியின் கணவர் காப்பி சாப்பிடுவதையே நிறுத்தி விட்டார்!"

"அப்படியா? அதற்கு மிகவும் மன உறுதி வேண்டும்!"

"வாஸ்தவம். அந்த மன உறுதி சாவித்திரியிடம் இருக்கிறது!"

பார்த்து, மறைந்தது. அதற்குள்ளே காமாட்சி அவளையும், அவள் அருகிலிருந்த ஒரு வயதுக் குழந்தையையும் ஒருமுறை நன்றாகப் பார்த்துக் கொண்டாள். அதே சமயம் அந்தக் காட்சி, அவள் களங்கமற்ற இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. 'ஓ' வென்று வாய்விட்டு அலறி அழ வேண்டும் போல் தோன்றியது.

"அக்கா, நீயா!" என்று அலறினாள்.

"யார்?"

"நான்தான் காமாட்சி. உன் தங்கச்சி வந்திருக்கிறேன்; உன்னைக்காண எங்கெங்கு அலைவது!"

"வா தங்கச்சி, இப்படி வா. நல்ல சமயத்தில் தான் வந்திருக்கிறாய்."

"அத்தான் எங்கே அக்கா! உடம்புக்கு என்ன! ஏன் இப்படி இளைத்து விட்டாய்! எலும்பும் தோலுமாய் உன்னைப் பார்க்கச் சகிக்கவில்லையே. நான் உனக்குத் தங்கச்சி என்று ஒருத்தி இருந்து என்ன பிரயோசனம்?" என்றாள்.

காமாட்சிக்குப் பீறிட்டுக் கொண்டு அழுகை வந்தது; அக்காளைத் தழுவிக் கொண்டு வேண்டிய மட்டும் அழுது தீர்த்தாள். அவள் கருநீலக் கண்கள் வற்றினாலும், அக்காளின் மீதுள்ள அவள் உள்ளத்தின் பாசம் வற்றவில்லை. அவள் குழந்தையை எடுக்க முத்தமிட்டு, கையில் அணைத்து வைத்துக் கொண்டாள்.

மீனாட்சியின் ஒட்டி உலர்ந்து, குழி விழுந்து போயிருந்த கண்களிலிருந்து பொலபொலவெனக் கண்ணீர் பெருகியதை அந்த இருட்டில், காமாட்சியினால் காண முடியாவிட்டாலும், அவள் தேம்பலின் சத்தத்தைக் கேட்க முடிந்தது. அவள் விட்ட பெருமூச்சு தங்கையின் காதுகளில் வந்து தாக்கியது. வியாதியினால் — அது அப்பொழுது தீரக் கூடியதல்ல — அவள் பட்டுக் கொண்டிருந்த அவதியையும் ஒருவாறு உணர முடிந்தது. மீனாட்சியினால் பேசவே முடியவில்லை. திக்கித் திணறிக் கொண்டிருந்தாள் அவள்.

"தங்கச்சி! என்னத்தை என்று உனக்குச் சொல்லப் போகிறேன்! இந்தக் குழந்தைப் பிரசவத்துக்குப் படாத பாடெல்லாம் பட்டு விட்டேன். அப்போதே செத்துப் போயிருக்க வேண்டியவள், உன்னைப் பார்க்க வேணுமென்றுதான் பிழைத்து விட்டேன் போலிருக்கு. பச்சைப் பிள்ளைக் காரியை அம்மை நோய் வேறு வாட்டி விட்டது. அம்மை வடுக்களினால், என் அழகு போனதுடன், ஒரு கண்ணும் போய் விட்டது. என் கணவரும் அதே வலையில் படுத்த படுக்கையாகிவிட்டார். கடைசிக் காலத்தில் உன்னைப்பார்ப்பதற்கு என்ன ஆசைப்பட்டார் தெரியுமா! கருணையற்ற கடவுள் அவரைக் காப்பாற்ற வில்லை. அவர் இறந்து போனார். கொண்டித் தங்கை என்றும் பாராது, உன்னை விட்டுப் பிரிந்து வந்தேன். இந்தத் தண்டனை யெல்லாம் எனக்கு வேண்டியதுதான்...... தங்கச்சி, என்னை மன்னித்துவிடு. மன்னித்தேன் என்று நீ சொன்னால்தான் என் மனசு குளிரும். கொஞ்சம் தெம்பு ஏற்படும்" என்றாள் மீனாட்சி. முடிந்தவரையில் அழுதாள்; தங்கையின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"அக்கா, நீ ஒன்றும் தப்பு செய்யவில்லை. கடவுள் உன்னை மன்னித்து விட்டார்......அழாதே அக்கா; இந்தக் குழந்தை ராசாவை வைத்துக் கொண்டு குறை காலத்தையும் தள்ளி விடுவோம்......உன்னைப் பார்க்க வேண்டுமென்று நான் எப்படி யெல்லாம் துடித்துப் போனேன் தெரியுமா, அக்கா. உன்னை மறுபடியும் பார்க்க முடிந்ததே என் அதிர்ஷ்டம்தான். அது போதும்" என்றாள் காமாட்சி. நடந்து போனவற்றையெல்லாம் மறந்தாள். முன்போலவே, அக்காளும் தங்கையுமாக, அந்தக் குழந்தையின் கூட்டுறவோடு, பாடிப் பிழைத்து வாழ்ந்து விடலாம் என்று அவள் முழுக்க முழுக்க நம்பினாள். அந்த நம்பிக்கையினால், மீனாட்சிக்கு வேண்டிய மட்டும் தைரிய வார்த்தைகள் சொன்னாள்.

"தங்கச்சி! எனக்கு வந்திருப்பது தீரும் வியாதியாகத் தெரியவில்லை. மூன்று நாலு நாளாகவே செத்துப் போயிடுவேன் என்று தோன்றிவிட்டது. இந்தக் குழந்தையின் கதி என்னவாகுமோ என்று கவலையாயிருந்தது. அந்தப் பாசம்தான் என் உயிர் போகவில்லை. இப்பொழுதுதான் நீ வந்து விட்டாயே. இனி குழந்தை பிழைத்துக் கொள்ளும்..." என்றாள்.

"அக்கா! அப்படி யெல்லாம் சொல்லாதே. நீ சாகமாட்டாய். நீ சாகும்படி நான் பார்க்க மாட்டேன். பொழுது விடிந்ததும், ஆஸ்பத்திரிக்குப் போவோம். நிம்மதியாகத் தூங்கு அக்கா. நான் குழந்தையைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று காமாட்சி சொன்னாள். அக்காளின் வியாதி நீங்கி, பிழைத்து விடுவாள் என்று அவள் நம்பினாள்.

அன்று இரவு கழிந்து, பொழுது விடிந்தது.

காமாட்சி அக்காளையும் அவள் குழந்தையையும் நன்றாகப் பார்த்தாள். ஒட்டி உலர்ந்து நோயினால் குன்றி, எலும்பு வெளியில் குத்த, விகாரமான தோற்றத்தைப் பெற்றிருந்த அக்காளைப் பார்த்து, அவளுக்கு நேர்ந்த கதியை எண்ணி, காமாட்சி அழுதாள். மீனாட்சி பிழைக்க மாட்டாள் என்று அவளுக்குத் தோன்றி விட்டது. இருந்தாலும் ஆஸ்பத்திரிக்குப் போகும் ஆசை மட்டும் அவளை விட்டு இன்னும் அகல வில்லை.

அதற்குள் மீனாட்சியின் உடல் நிலை மிக மிக மோசமாகி விட்டது. அவள் மூச்சுத் திணறியது.

"தங்கச்சி! நான் இனிமேல் பிழைக்க மாட்டேன். குழந்தை பத்திரம்......"

"அக்கா...அக்கா...இந்தக் குழந்தைதான் என் உயிர்...என் ராசாவை நாடோடியாக வளர்க்க மாட்டேன். நீ பிழைத்தெழுந்தால் பார்க்கலாமே!" என்று காமாட்சி உள்ளம் கசிந்துருகிச் சொன்னது மீனாட்சியின் காதில் விழுந்தது.

மீனாட்சியின் கண்களில் கண்ணீர் வற்றியது போல், அவள் உடலின் உயிரும் ஒரு நொடியில் வற்றியது; அவள் தலை சாய்ந்தது.

பாசத்தின் பிணைப்பை, அறுத்துக் கொண்டு, இம்முறை அக்காள் திரும்பிவர இயலாத இடத்துக்குப் போனதில் உள்ள துக்கத்தையும், அழுகையையும் மறந்து, "அதுவரைக்கும் குழந்தை அதிர்ஷ்டசாலிதான். அனாதையாகப் போகாமல், காப்பாற்றச் சமயத்தில் வந்தேனே! இதற்காகவாவது கடவுள் கண் திறந்தாரே" என்று காமாட்சி எண்ணி எண்ணி மனம் தேறினாள்; தைரியம் வரப்பெற்றாள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு, உந்தி உந்தி, தங்களிருவரின் எதிர்காலத்தை நோக்கிக் காமாட்சி நடந்தாள். வாழ்க்கையை நடத்த, இடம் மாறி, ஊர் மாறி, அவள் நடந்தாள். நடந்துகொண்டேயிருந்தாள். காலம் மாறியது.

அவளும் அந்தச் சிறு குழந்தையும் ஒரு பிரபல சினிமா டைரக்டர் கண்ணில் பட்டனர்.

"கொண்டி" என்ற படத்தில் காமாட்சி தோன்றினாள். அற்புதமாக நடித்தாள். அபாரமாகப் பாடினாள். சினிமா ரசிகர்களின் மனத்தில் அழியாத இடம் பெற்றாள். அதே படத்தில் அவள் சகோதரியின் குழந்தையும் நடித்தாள்.



# மிகுந்த போஷாக்களிக்கும் சிசு உணவு—ஒரு நிமிஷத்தில் தயாரிக்கக் கூடியது.

"க்ளாக்ஸோ மில்க் புட் (பால் ஆகாரம்)" தயாரிக்க ஒரே ஒரு நிமிஷமும், தர்மாஸில் உள்ள வென்னீருமே, தேவை. க்ளாக்ஸோ முறையானது பால் முழு வதையும் எளிதில் ஜீரணிக்கச் செய்கிறது. க்ளாக்ஸோ எச்சமயத்தும் கெடாமலிருப்பதால், உஷ்ண பிரதேசங்களிலும் புதிதாயும், பரிசுத்தமாயுமிருக்கிறது. குழந்தைகளுக்கேற்ற உணவுப் பொருள்கள் சிறந்த லட்சியத்தோடு சமநிலை படுத்தப்பட்டு ஒரே மாதிரியாய் அமைந்துள்ளது க்ளாக்ஸோ. கணைச்சூடு, ரத்த சோகை இவற்றினின்று பாதுகாப்பதற்கெனவே இரும்புச் சத்தும் வைட்டமின் "டி" யும் சேர்க்கப் பட்டுள்ளது.

க்ளாக்ஸோ குழந்தைகளுக்கேற்ற
பூர்ணமான பால் ஆகாரம்.

Glaxo




**க்ளாக்ஸோ லேபரடரீஸ் (இந்தியா) லிமிடெட்.**
**பம்பாய்—கல்கத்தா—மதராஸ்.**

---

இன்னும் பல படங்களுக்குப் பின்னணி கீதம் பாடினான். "அனாதை" என்ற படத்தில் மீண்டும் தோன்றினான். அபாரமாக நடித்தான். சினிமா உலகில் ஒரு புது அத்தியாயத்தையே ஆரம்பித்து விட்டான், தன்னுடைய உணர்ச்சி மிகுந்த நடிப்பாலும், சோகம் நிறைந்த கீதத்தாலும். இந்தப் படத்திலும் அந்தச் சிறுவனுடைய நடிப்பைக் கண்டு உலகமே வியந்தது.

மீனாட்சிக்குப் பணம் சேர்ந்தது. சிறுவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினாள்; படிக்க வைத்தாள். படத்தொழிலின் நுணுக்கங்களைத் தெரிந்து வர மேல் நாட்டுக்கும் அனுப்பி வைத்தாள். மேல் நாடு சென்றவன் திரும்பி வந்து, புகழ் பெற்ற டைரக்டர் ரங்கனாக விளங்கினான்.

இதுவரை மௌனமாக உட்கார்ந்திருந்த ரங்கன் தன் சிறிய தாயாரின் பாதங்களைத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

உங்களுடைய வாழ்க்கையையே படம் பிடிக்கப் போகிறேன் என்றான். "அபூர்வ சகோதரிகள்" என்ற பெயரில் அற்புதமான படத்தைத் தயாரித்து வெளியிட்டான்.

ஆனால் அந்தப் படத்தைப் பார்த்து மகிழத்தான் காமாட்சி இவ்வுலகில் இருக்கவில்லை.

# புதுக் கல்வித்திட்டம் ஓர் அரிய சாதனை

## ஸ்ரீ டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் எம். எல். ஸி.

இன்று நமது முதன் மந்திரி ராஜாஜி அவர்கள் மிக்க தீர்க்காலோசனையுடனும், நிகரற்ற மதியூகத்துடனும் நாட்டின் வருங்காலத்தை உத்தேசித்து 5 முதல் 12 வயதுள்ள நமது குழந்தைகளுக்குச் சாதிமத பேதமின்றி ஏட்டுக் கல்வி, கைத்தொழில் வன்மை ஆகிய இரு மகத்தான இலட்சியங்களை ஒருங்கே கொண்ட ஒரு திட்டத்தை முதன் முதல் சென்னை சர்க்கார் மூலம் கொண்டு வந்துள்ளார். இதைப் பலர் காரணமின்றியும், தீர்க்கயோசனையின்றியும் ராஜாஜி கொண்டு வரும் திட்டங்களையோ, சட்டங்களையோ எதிர்க்கும் ஒரே நோக்கத்துடன் பொது மேடைகளிலும், சட்ட சபைகளிலும் காரசாரமாக விவாதித்து வருகின்றனர்.


இதைப் பற்றிய விவாதம் சென்னை மேல் சபையிலும் வந்தபோது, இந்நாட்டுக் கைத்தொழில் சமூகத்தின் தலைவன் என்ற முறையில், இந்தத் திட்டத்தால் எல்லா மக்களும் சாதி பேதமின்றிக் கைத்தொழில்களைக் கற்று விடுவார்களே என்ற அச்சமும், பொறாமையும் கொள்ளாமல், ஊன்றி நோக்கி இத் திட்டத்தை மிக அழுத்தமாக ஆதரித்தேன். இத் திட்டத்தால் பிற்பட்ட வகுப்பார்களுக்கு ஒரு வகைப்பட்ட கைத்தொழில் சாதனை ஏற்படுமென்பது என் துணிவு. இப்பொழுது சர்க்கார் பிற்போக்குப் பட்டியலிலுள்ள 185 சாதியர்கள் குறைந்து அந்தப் பட்டியலே எடுபட்டு விடும் காலமும் விரைவில் ஏற்படும். இன்று கல்வியில் ஒரு வகுப்பாருக்குத் தனிப்பட்ட உயர்வும் ஊக்கமும் இருந்து வருவதுபோல, கைத் தொழிலைப் பிறப்புரிமையாகக் கொண்ட வகுப்பார்களுக்கும் மிக்க ஊக்கம் ஏற்பட்டு அதன் மூலம் இதர வகுப்பினர்களுக்கும் அவர்கள் அரிய வழி காட்டியாவார்கள் என்பது திண்ணம். இத் திட்டத்தால் சோம்பிக் கிடக்கும் பெற்றோர்களும் ஒருவகைக் கல்வியையும் தொழிற் பழக்கத்தையும், அடைய முயல்வார்கள்; அடைந்தாக வேண்டும். கிராம வாசிகள் 'வெளியேறாமல் தங்கள் கிராமங்களிலேயே வசிக்க வசதி யேற்படும். வேலையில்லாத் திண்டாட்டமும் நாளடைவில் ஒழிய வழியுண்டு. குடிசைத் தொழில்கள் நாடெங்கும் வளர்ந்தோங்கி, வறுமைப் பிணியை ஓட்டும். இன்னும் அதில் உள்ள வசதிகளை எல்லாம் பெருக்கில் விரியும்.

அடுத்த ஓராண்டுக்குள் இத் திட்டத்தை ஒரு நிபுணர் குழுவால் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டு, இப்பொழுது அதற்கு ஒரு குழுவும் அமைக்கப்பட்டு இருக்கிறது.

இந்தத் திட்டம் உண்மையிலேயே காரிய சித்தியாக வேண்டுமானால், இதனை அமுலுக்குக் கொண்டுவர ஏற்படுத்தப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு வெறும் கல்வியறிவு மட்டும் போதியதல்ல. நிரம்பிய கரசாதனத்துடன்கூடிய தொழிலறிவு வேண்டும். வேலைக்காரர்களின் தப்பிதங்களை ஒழுங்குபடுத்தித் திருத்தும் தொழில் ஞானம் வேண்டும். பழந் தொழில்களுடன் நூதனத் தொழில்களைப் பிணைத்து வழி காட்டும் அறிவு குடிசைத் தொழில் அபிவிருத்திக்கு மிக முக்கியமானது. பாட்டன் பூட்டன் செய்த வேலைகளைப் பின் பற்றுவதும் அவைகளை உயிர்ப்பிக்க முற்படுவதும் சர்க்கார் குடிசைத் தொழில் முன்னேற்றத்துக்கு அடுத்ததல்ல. இத்தகைய அறிவு, கைத்தறி நெசவாளர்களைப் போல், இரத்த சம்பந்தமுடையதானால் "பொன் மலர் நாற்ற முடைத்து" போலாம். மேலும் எந்தத் தொழிலை எந்த வட்டாரத்தில் எந்த நிபுணர்களைக் கொண்டு அபிவிருத்தி செய்யக் கூடுமென்ற தீர்க்கமான அறிவும் அவர்களுக்கு வேண்டும்.

குடிசைத் தொழிலபிவிருத்தி விஷயத்தில் 'தடி யெடுத்தவர்களெல்லாம் தண்டல்காரர்' என்று இல்லாமல், தராதரம், யோக்கியதாம்சம் ஆகியவைகளைக் குறிக்கோளாகக் கொண்டும், உண்மையான முன்னேற்றப் பாதையில் சர்க்கார் கைத்தொழில் இலாக்காவைச் சீர்ப்படுத்தியும் இக் கல்வித் திட்டத்தைச் சிறந்த முறையில் கொண்டுவர முற்படுவது மிக அவசியமாகும். இல்லையேல் மூதறிவு பெற்ற இந்த அருமையான திட்டம் காரியாம்சத்தில் வெறும் பகற் கனவாகவே முடியும்.





# வாழ்க்கையே தியாகம்

நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர்

●

ஏதாகிலும் ஒன்று செய்யத் தீர்மானிக்கவேண்டிய கட்டம் வந்தது. மிகவும் ஆழ்ந்த ஆலோசனைக்குப் பிறகு சொந்தமாகத் தொழில் நடத்துவது என்று தீர்மானித்தான். அவன் சீதாவினிடம் சொன்னான்: "நான் விரும்பியபடி நடந்து கொள்ள எனக்குச் சுதந்திரம் வேண்டும். சர்க்கார் உத்தியோகத்தி லிருந்தால் நாம் விரும்பிய விதமெல்லாம் நடக்க முடியாது. டாக்டரின் சுதந்திரத்துக்கும் வக்கீலின் சுதந்திரத்துக்கும் ஈடு இணையுண்டா? அவர்கள் இஷ்டப்பட்டது செய்யலா மல்லவா?" என்றான்.

இதைக் கேட்ட சீதா, "பேஷாக, உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். ஆயினும் நீங்கள் கூறிய காரணம் மட்டும் பொருத்தமாக இல்லை. என் தந்தையார், தான் சர்க்கார் ஊழியனாக இருந்திருந்தால், அதாவது ஜில்லா வைத்திய அதிகாரியாக இருந்திருந்தால் எவ்வளவோ நன்மை பயக்கும் உருப்படியான காரியங்களைச் செய்திருக்கலாம் என்று அடிக்கடி கூறுவார். வெறும் டாக்டராக இருந்தால் தன்னைத்தான் சீர்திருத்திக் கொள்ள முடியும்; அதே சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்திருந்தால் ஒரு ஜில்லா முழுவதையுமே சீர்திருத்தி யிருக்கலாமே என்றும் கூறுவார்" என்றாள்.

"வைத்தியர்கள் சம்பந்தமாக நீ சொல்வது சரியாகக் கூட இருக்கலாம். ஏனெனில் வைத்தியத் தொழிலில் ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு காரியம் செய்ய வேண்டும் என்பதில்லை. ஆனால் ஐ. ஸி. எஸ்., எப். ஸி. எஸ். அதிகாரிகளாக இருந்து அரசாங்க நிர்வாகத்தில் ஈடுபட் டிருப்பவர்களுக்கு நீ சொல்வது சரியாகாது" என்றான்.

"நீங்கள் சொல்வதை என்னால் ஒப்ப முடியாது. இன்றைய உலகில் ஒவ்வொரு விஷயத்துக்கும், உணவானாலும் சரி, மருந்தானாலும் சரி, ஒரு கொள்கை, ஒரு திட்டம் அவசியம் வேண்டியதாகத்தான் இருக்கிறது. அரிசிச் சோற்றைச் சாப்பிடுபவர்கள், யுத்த காலத்திலும், பற்றாக்குறை ஏற்படும் காலங்களிலும் கேழ்வரகையும், கோதுமையையும்

## 2

கிருஷ்ணமூர்த்தி கேட்ட கேள்விக்கு, "இனி கார் ஓட்ட முன் வரமாட்டேன். நான் தீர்மானித்து விட்டேன்" என்று பதில் கூறினாள் அவன் மனைவி சீதா.

"அசட்டுத் தனமாக உளறாதே! ஏதோ ஒரு கெட்ட சம்பவம் சேர்ந்து விட்டது என்பதற்காகத் தைரியம் இழந்து கார் ஓட்டுவதையே நிறுத்தி விடுவதா என்ன? என் நண்பர் ஜெகதாசனுடைய மகள் ரொம்ப நன்றாகக் கார் ஓட்டுவாள். அவளை வேண்டுமானால் உனக்குக் கார் ஓட்டக் கற்றுத் தரச் சொல்லுகிறேன்" என்று சொன்னான் கிருஷ்ணமூர்த்தி.

"நீங்கள் இனி அந்த விஷயமாகக் கவலைப் படாதீர்கள்! கார் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றிருந்த அந்த அகம்பாவம் தீர்ந்து விட்டது. இனிமேல் நீங்கள் என்னைக் கார் ஓட்டும்படி வற்புறுத்தினால் கூடத் தொட மாட்டேன் காரை. இது தீர்ந்த முடிவுதான். அதனால் இனி இதைப் பற்றித் தர்க்கம் செய்யாதீர்கள்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறி அந்த விஷயத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

* * *

கல்யாணமான மறு ஆண்டில் கிருஷ்ணமூர்த்தி தன் இருபத்தோராவது வயதை அடைந்தான். மேலே ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குப் போவதோ அல்லது எப். ஸி. எஸ். பரீட்சைக்குப் போவதோ அல்லது தனியாகத் தொழில் புரிய ஆரம்பிப்பதோ—இதில்

சாப்பிடச் சொல்லிக் கட்டாயப் படுத்த வேண்டியதாகத்தான் இருக்கிறது. மருந்துகளிலும் அப்படித்தான். ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யூனானி வைத்தியம்—இம் முறைகளில் தயாரிக்கப்பட்ட மருந்துகள் புழக்கத்தில் போதிய அளவு இன்று வரவில்லை. 'அல்லோபதி' மருந்துகள் அவற்றைத் தலையெடுக்க விடுவதில்லை. ஏன், ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போகும் விஷயத்தில்கூட, ரோடு மார்க்கமாகப் போவதா, ரயிலில் போவதா, கப்பலில் செல்வதா, விமானத்தில் செல்வதா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு விஷயத்திலும் கொள்கை என்பது இருக்கத்தான் செய்கிறது. கல்யாணம் செய்து கொள்ளும் விஷயத்திலும் சரி, குழந்தை பெறும் விஷயத்திலும் சரி" என்றான் தீரா.

"ஓரளவுக்கு நீ சொல்வது சரிதான். ஆனால் சொந்தத் தொழிலிலும் சர்க்கார் உத்தியோகத்திலும் 'கொள்கை' என்பது எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதில் வித்தியாசம் இருக்கிறது. சர்க்கார் உத்தியோகஸ்தனாகப் போய்விட்டால் சொந்த அபிப்பிராயத்தைக் கொள்ள முடியாது. அந்தச் சுதந்திரத்தை இழந்துவிட வேண்டியதுதான்."

"அந்த இடத்தில்தான் நீங்கள் தவறு செய்கிறீர்கள். சர்க்கார் உத்தியோகத்தில் தவிர வேறு எந்த இடத்தில் உங்கள் சொந்த அபிப்பிராயத்துக்கு அதிக சுதந்திரம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. தனிப்பட்ட நபருக்கு, சர்க்கார் உத்தியோகஸ்தனைப்போல் பல்வேறு அபிப்பிராயங்களை அறியக்கூடிய சந்தர்ப்பமே கிடையாதே! சொந்த அபிப்பிராயம் கொள்ள அவனுக்கு உரிமைகூடக் கிடையாதே. உதாரணத்துக்கு ஒரு நீதிபதியை எடுத்துக் கொள்ளுங்கள். நீதிபதி தன் வேலையைச் செய்யும் முறையில், சர்க்காரினால் தடை விதிக்கப்பட்ட புஸ்தகங்களைப் படிக்கிறார். சர்க்காருக்குத் துரோகமான பிரசங்கங்களைப் படிக்க நேர்கிறது. கள்ள நாணயங்கள், கள்ள ரூபாய் நோட்டுகள் எல்லாம் கையால் தொட்டுப் பார்க்க நேர்கிறது. ரகசிய தஸ்தாவேஜுகளைப் படிக்கிறார்; எந்த வக்கீலுக்கும், தனிப்பட்ட நபருக்கும் கேட்க முடியாத சாட்சியங்களை ரகசியமாகத் தனியறையில் கேட்க முடிகிறது. ஆனால் காரியம் என்று வரும்போது தான் சர்க்கார் உத்தியோகஸ்தனுடைய கைகள் கட்டப் பட்டிருக்கின்றன. அவ்வளவு சுதந்திரமில்லை. இந்தக் கட்டுப்பாடு ஓரளவு வேண்டும் என்பதை நீங்களும் ஒத்துக்கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்" என்றான்.

"அப்படியானால் நீ என்னை என்னைச் சர்க்கார் உத்தியோகம் ஏற்றுக் கொள்ளச் சொல்லுகிறாயா?" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"அதில்லை; உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். மற்றவர்கள் தங்கள் எண்ணத்திலோ, காரியத்திலோ மிகவும் சுயேச்சையாக இருக்கிறார்கள் என்ற உங்கள் தவறான எண்ணத்தைப் போக்கத்தான் இவ்வளவு தூரம் பேசினேன்" என்றான் தீரா.

"தீரா; நான் ஒரு ஜனநாயகவாதி. எல்லா மனிதர்களும் சமம் என்ற அபிப்பிராயம் கொண்டவன். இதை நீ ஒப்புக் கொள்கிறாய் அல்லவா?" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"சமம் என்றால் எதில்?"

"உணவில் உடையில், ஒளியில், காற்றில் இருப்பிடத்தில், பேச்சில், கடவுள் வழிபாட்டில், எல்லாப் பொது நலன்களிலும் தான்" என்றான் அவன்.

"உண்மை. ஆனால் ஒரு முக்கியமான விபத்தை. அதாவது எல்லா மனிதர்களும் நீங்கள் கூறிய அந்த விஷயங்களுக்காகவும் ஏதோ கொஞ்சம் தியாகம் பண்ணச் சித்தமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் கூறும் சமத்துவம் சாத்தியம். இந்த உலகிலாயினும் சரி, அல்லது அடுத்த உலகிலாயினும் சரி தியாகமில்லாமல் ஒன்றும் பெற முடியாது......"

"என்று நீதை சொல்லுகிறதாக்கும்!" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"ஏன், இந்தக் கீதா கூடத்தான் சொல்லுகிறான்" என்றான்.

இதைக் கேட்டு அவன் சிரித்தான். "நீ சொல்வது ரொம்ப சரி. தீரா நான் நான்கு கொள்கைகள் வைத்திருக்கிறேன்."

"அவை என்ன?" என்றான்.

"முதலாவது, உலகம் முழுவதுமே நமது தாய். இதில் 'இந்தத் தேசம், அந்தத் தேசம்' என்ற குறுகிய எண்ணத்துக்கே இடம் கிடையாது. உலகம் என்பதே ஓர் தனிப் பெரும் நாடாகக் கருத வேண்டும். ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் 'நான் பூமாதேவியின் புதல்வன்', 'நான் பூமாதேவியின் புதல்வி' என்று எண்ண வேண்டும்" என்றான்.

தீரா, "ஆகா! மிக அழகான லட்சியம்! இந்த லட்சியத்தை அடையச் சிலகாலம் பிடிக்கும். அகில உலக உணர்ச்சி என்பது ரொம்ப சரி. ஆனால் தேசிய உணர்ச்சி அதற்கு முதற்படியாயிற்றே. தேசங்கள் இல்லாமல் சர்வதேச சர்க்கார் ஏற்பட முடியாதே! முதலில் தந்தையாகாமல் தாத்தாவாக முடியுமா? சிற்க, உங்கள் அடுத்த கொள்கை என்ன?" என்றான்.

"அதாவது, சுதந்திரம் என்னும் மாளிகையின் கற்கள் மனித இரத்தத்தால் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப் பட்டிருக்கின்றன. இதில் வாழ உரிமை கொண்டாடுபவர்கள் தங்கள் உயிரை எந்த நிமிஷத்திலும் தியாகம் செய்யத் துணிந்திருக்க வேண்டும்" என்றான்.

"ஆகா! இதுவும் ரொம்ப நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் எல்லோரும் கொள்கைக்காகவோ தேசத்துக்காகவோ 'உயிரை விட்டு விடுவேன்' என்று தீர்மானிக்கலாகாது. ஒரு சிலராவது தேசத்துக்காக 'உயிர் வாழ்வேன்' என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இந்த உங்கள் இரண்டாவது

கொள்கையைப் பற்றித் தீவிரமாக யோசித்தால் படு மோசமான பலன்கள் ஏற்படும் போல் தோன்றுகிறது. மக்கள் தங்கள் நிலை தவறித் தலை குப்புற விழுந்து, வாழ்க்கை ரஸமற்றுப் போய் விடும். உங்கள் இக்கொள்கையைக் காரியாம்சத்தில் கடைப்பிடிக்கப் போனால், பயிர் கொழிக்கும் கங்கைப் பிரதேசம் போன்ற மக்கள் வாழ்க்கை, ஸகாரா பாலைவனம் போல் வறண்டு விடும்! மூன்றாவது என்ன?" என்றாள்.

"அன்பு, ஒற்றுமை, ஒத்துழைப்பு இவற்றில் மனித சமுதாயத்தின் எதிர்கால சுபிட்சம் நிலவுகிறது; கிடைப்பவற்றைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும், அதுவும் சரிசமமாக" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"பிரமாதம். ஆனால் செய்கையில் கணவன்-மனைவி, தந்தை-தனயன், இவர்களிடையில் கடைப் பிடிப்பதே சிரமம். மூன்றாவது நபர்கள் விஷயம் இருக்கட்டும்" என்றாள்.

"இந்தச் சிரம சாத்தியமான காரியத்தைச் சாதிப்பதில்தானே சுவாரஸ்யம் இருக்கிறது. உலகத்தின் இந்தக் கோடியும், அந்தக் கோடியும் அன்பில் இணையவேண்டும்; சமுதாயத்தின் மிக உன்னதப் படியிலிருப்பவர்களும், மிகமிகக் கீழ்ப்படியி லுள்ளவர்களும் இன்ப ஒத்துழைப்பில் பிணைய வேண்டும்!"

"பெரிய லட்சியம்! ஆனால் இன்றைய உலகத்தினால் ஏற்க முடியாத சற்று முற்போக்கான லட்சியம். நம்முடைய பாரத தேசத்தைப் பற்றியே எண்ணிப் பாருங்கள். வானத்தையே கூரையாகக் கொண்ட லட்சக் கணக்கான பரம தரித்திரர்களுக்கும், பத்து இருபது கணக்கிலிருக்கும் ஒரு சில லக்ஷாதிபதிகளுக்கு மிடையிலும், விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில புண்யாத்மாக்களுக்கும், கோடிக் கணக்கிலிருக்கும் பாபாத்மாக்களுக்கு இடையிலும் எவ்வளவு பெரிய அகழி இருக்கிறது. இவை இரண்டும் இணைப்பது என்பது சாத்தியமா? ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கு மிடையிலிருக்கும் பஸிபிக் மகா சமுத்திரத்துக்குப் பாலம் அமைக்க முற்படுவது போன்றதோர் காரியம் அல்லவா?" என்றாள்.

"அதற்கும் இப்பொழுது முயன்றுதானே வருகிறார்கள்?" என்றான்.

"ஆனால், பலன்தான் என்னவென்று இது வரை தெரியவில்லை. பிற்காலத்தில் பிரமாதமான பலன் விளைந்துவிடப் போகிறதென்று எதிர்பார்க்கிறார்கள். ஒத்துழைப்பு என்பது இரண்டு பக்கத்தவர்களும் சேர்ந்து ஒத்துழைத்து விரும்புகிற பயனைப் பெற முயற்சிப்பதுதான்; ஒரு பக்கத்தவர் மட்டும் வேலை செய்வது என்பதல்ல. மேலும் அன்பில்லாத ஒத்துழைப்பு, மணலைக் கயிறாகத் திரிப்பது போலாகும்" என்றாள் கீதா.

"நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். பஞ்ச தந்திரக் கதையில் வரும் இரண்டு தலைப் பறவையின் கதைதான் என் லட்சியம். அப்பறவையின் ஒரு தலை, எங்கோ தேன் கூண்டைப் பார்த்தது. அந்தத் தலை தேனைத் தன் சகோதர தலையுடன் பங்கிட்டுக் கொள்ள மறுத்தது. உடனே மற்ற தலை விஷத்தை அருந்தியது. அவ்வளவுதான்; இரண்டு தலைகளும் மடிந்தன. இப்படித்தான் இரண்டு தலை கொண்ட எல்லாப் பறவைகளின் கதியும்—கணவன் மனைவி என்றாலும் சரி, தந்தை தனயன் என்றாலும் சரி, ஆள்பவர்—ஆளப்படுபவர் என்றாலும் சரி, வேலைக்கு வைத்துக் கொள்பவர் — வேலை செய்பவர்களாயினும் சரி, உபாத்தியாயர்—மாணவர் ஆயினும் சரி, அண்டை — அயல் வீட்டுக்காரர்களாயினும் சரி! அதனால்தான் சமுதாயத்தில் லக்ஷாதிபதிகளும் வேண்டாம், பிக்ஷாதிகாரிகளும் வேண்டாம் என்று சொல்லுகிறேன். மனிதனுடைய தேவைக்குப் போதிய அளவு இல்லாதவனும் இருக்கக் கூடாது. போதிய அளவுக்கு மேற்பட்டிருப்பவனும் இருக்கக் கூடாது. தன் வாழ்க்கையின் கதியை நிர்ணயிக்கும் அதிகாரம் படைத்தவனும் இருக்கக் கூடாது. கம்பர் ராம ராஜ்யத்தைப் பற்றிக் கூறியபோது, 'மனிதன் மனிதன்தான்! அவனைவிட உயர்ந்தவர் யார்?' என்று கேட்டார். இதுதான் என் நான்காவது அடிப்படைக் கொள்கை!"

"நல்லது; இதைத்தான் நானும் எதிர்பார்த்தேன். பஞ்ச தந்திரத்தில் வரும் இரண்டு தலைப் பறவைக் கதை போதிக்கும் நீதி. ராம ராஜ்யத்தில் வரும் 'மனிதர் யாவரும் சமம்' என்ற உணர்ச்சி இவை யாவும் வாழ்க்கையில் கொண்டு வர முடியுமா? பேச்சில் 'மனிதன் மனிதன்தான்—அவனுக்கு மேலும் இல்லை, கீழுமில்லை' என்றும், 'திறமைக்குத் தகுந்த தொண்டு, தேவைக்குத் தகுந்த பங்கு' என்றும் இனிமையாகப் பேசலாம். ஆனால் இது கிரியாம்சையில் சாத்தியமா? இப்படி நடக்க முடியுமா? நடைமுறையில் சாத்தியப்படுமா என்று பார்ப்பதுதான் இதற்குத் தகுந்த பரீட்சை?"

"என் மனப் பூர்த்தியாக நான் இதைப் பரீட்சை செய்து பார்க்கப் போகிறேன்—காரியாம்சத்தில் சாத்தியப்படுமா என்று சோதிக்கப் போகிறேன். இதில் உன் உதவியைப் பெரிதும் நம்பியிருக்கிறேன், கீதா!" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"அன்பே, நான் உங்கள் உயிரின் ஒரு பகுதி. யார் உங்களைக் கைவிட்டாலும் நான் கைவிட மாட்டேன்" என்று கூறி அவன் கைகளை அழுத்திப் பிடித்து நன்றி பொங்கப் பார்த்தாள் அருமை கீதா.

ஆகவே, 1924-ம் வருஷம் கிருஷ்ணமூர்த்தி வக்கீல் தொழிலை மேற்கொண்டான். ஆனால் விஷயங்கள் சுலபமாகவும் சுமுகமாகவும் இல்லை. ஆரம்பத்திலேயே அவனுக்கு மூன்று பிரச்னைகள் எழுந்தன. வழக்குகள், கட்சிக்காரர்கள், நியாயம் என்ற பிரச்னைகள் தான் அவை. பொய் வழக்குகள் எடுத்து வாதாட அவன் தயாராக இருக்கவில்லை.

மேலும் அவன் சீக்கிரத்தில் ஓர் உண்மையைக் கண்டான். நம் நாட்டில் கோர்ட்டுகளுக்கு வரும் வழக்குகளில் தொண்ணூறு சதவிகிதம் பொய் வழக்குகளே! அவனுடைய நண்பர்கள்கூடச் சொன்னார்கள்: "யதார்த்தம் என்னும் செங் கற்களுக்குப் பொய்கள்தான் சிமெண்டு" என்று. பொய்க் கலப்படமில்லாத வழக்குகள் எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்தால், அவன் ஒரு வழக்குமே எடுத்துக் கொள்ள முடியாது; தொழிலே நடத்த முடியாது என்ற நிலைமை ஏற்படும்போலிருந்தது. ஆகவே, அவன் தன் கொள்கையுடன் சற்று பேரம் பேசிக் கொண்டான். அதன் விளைவாக, கொஞ்சத்துக்குக் கொஞ்சம் நியாயம் இருக்கக் கூடிய வழக்குகளாக எடுத்துக் கொண்டான். அவற்றுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட சாட்சியங்களில் அதிக உண்மையில்லையாயினும் பரவாயில்லை என்று தீர்மானித்தான். 'இவைகள் அப்படி யொன்றும் படுமோசமான வழக்குகள் அல்ல' என்று தீர்மானித்து அவன் எடுத்துக் கொண்ட வழக்குகளிலும் பல அவனுக்குப் பிடிக்காதவையாகவே இருந்தன. அவனிடம் வந்த கட்சிக்காரர்கள், எப்படியாவது கோர்ட்டில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கங் கொண்டவர்களாக இருந்தார்களே யொழிய, யாரும் தங்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற தீவிர ஆசை கொண்டவர்களாக இல்லை. கட்சிக்காரர்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள், நியாயத்தை விரும்புங்கள் என்று உபதேசித்தால், அவர்கள் கிருஷ்ணமூர்த்தியை விட்டு வேறு வக்கீல்களிடம் கேஸ் கட்டுகளைக் கொண்டு போக ஆரம்பித்தார்கள்.

(தொடரும்)

# குடந்தையில் சிவகாமி

நேயர்கள் திகைக்க வேண்டாம்! உண்மையாகச் சொல்லுகிறேன்'; தமிழ் நாட்டின் மகோன்னத காலத்தில் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் ஆட்சியில் ஆயனரின் மகளாக அவதரித்து, நடன ராணியாகத் திகழ்ந்து மாமல்ல நரசிம்மரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சிவகாமிதேவி, திருக் குடந்தை மாநகரிலே நடனமாடியதுடன் பாடியும் பேசியும் அன்பர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டாள்! அத்துடன் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்துக்கு ஆறாயிரம் ரூபாயை வசூலித்தும் கொடுத்தாள்!

'இதென்ன முன்பின் முரணாயிருக்கிறதே! இந்த அதிசயம் எப்போது நடந்தது?' என்று பலர் கேட்கலாம். சென்ற 22-8-53 அன்று இரவு ஒன்பது மணிக்குக் கும்பகோணம் வாணிவிலாஸ் சபா தியேட்டரில் சென்னை 'ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர்'களால் ஆசிரியர் 'கல்கி' அவர்களின் 'சிவகாமியின் சபதம்' நாடகம் நடைபெற்ற போதுதான் அந்த அதிசயம் நடைபெற்றது. நாலு மணி நேரமும் சபையோர்கள் மெய் மறந்து உட்கார்ந்திருந்தார்கள் என்று சொல்வது தவறு; கதை நடந்த காலத்திற்கே எல்லோரும் போய் விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாடகத்தைத் திறம்பட டைரெக்ட் செய்த டாக்டர் வி. ராமமூர்த்தி அவர்கள் நாகநந்தி அடிகளாக நடித்தார். அவருடைய தெளிவான உச்சரிப்பும் அனுபாசமான நடிப்பும் சபையோரைப் பெரிதும் கவர்ந்தன. தம் சகோதரன் புலிகேசியுடன் சிவகாமியைக் குறித்துப் பேசும்போதும் சிவகாமியிடம் தன் காதலைத் தெரியப் படுத்தும்போதும் இவரது நடிப்பு தத்ரூபமா யிருந்தது. சிவகாமியிடம் பேசும்போது நாகநந்தி சிரிக்கும் அந்தப் பயங்கரச் சிரிப்பு சபையோரையே பயமுறுத்திய போது மெல்லியலாளான சிவகாமி அதைக் கேட்டுப் பயந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது! திருப்பாற்கடலை வெட்டிவிடும் நிமித்தம் அவர் செல்லும்போது நாகநந்தியின் வீராவேசப் பேச்சு கரகோஷத்தைப் பெற்றது. அவரை இனிமேல் டாக்டர் நாகநந்தி என்றே அழைக்கலாம்.

சிவகாமி வேடம்பூண்டு ஸ்ரீ வி. எஸ். ராமமூர்த்தி நடித்தார். அவர் ஆண் பிள்ளைதான் என்று தெரிந்தவர்கள்கூடச் சந்தேகிக்கும்படி அவ்வளவு நன்றாகப் பேசி, பாடி, நடனமாடி சபையோரை மகிழ்வித்தார். நரசிம்மப் பல்லவருடன் மகிழ்வுடன் காதல் கீதம் பாடும்போதும் காதல் பேச்சுகள் பேசும்போதும் இனிமையுடன் கொஞ்சும் போதும் (ஆம்...கிளிகளும் மானும் மேடைக்கு வந்தன!) இவரது சிருங்கார ரஸ நடிப்பு சிறப்பாக இருந்தது. "என்னைச் சாட்டையால் அடித்துத் தெரு மூலைகளில் ஆடச்செய்த புலிகேசியும் அவனது குடிகளும் வாழும் இந்த வாதாபி நகரின் வீடுகள் தீப்பற்றி எரியவேண்டும்...... இங்கே இரத்த ஆறு ஓடவேண்டும்......" என்று சிவகாமி சபதம் செய்யுமிடத்தில் சபையினரும் பெண்மையின் வீரத்துக்குப் பாராட்டுதலாகக் கரகோஷம் செய்தனர். கடைசியாக நரசிம்மர் தன் காதலைத் திரஸ்கரித்து விட்டதை அறிந்து காஞ்சி ஏகாம்பரருக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடித்தது மிகவும் உருக்கமா யிருந்தது.

மகேந்திர பல்லவராக நடித்தவர் காம்பீரியத்துடன் நடித்தார். "பரந்த பல்லவ சாம்ராஜ்யத்துக்காக உன் காதலை மறந்துவிடு. தாயே!" என்று சிவகாமியின் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்கும் காட்சி மிகவும் உருக்கமாக இருந்தது. நரசிம்மப் பல்லவராக நடித்தவரும் பரஞ்சோதியாக நடித்தவரும் சிறப்பாக நடித்தார்கள். ஆயனர், புலிகேசி முதலிய யாவரும் நன்றாக நடித்தார்கள். காபாலிகர்களின் பாட்டும் நடனமும் தமாஷாக இருந்ததுடன் நன்றாயு மிருந்தது. யானை மதம் பிடித்து ஓடுவது, சிவகாமியைச் சாட்டையால் அடிப்பது, வாதாபி நகரில் வீரர்கள் குதிரைமீது செல்வது, வாதாபி நகரம் பற்றி எரிவது முதலிய நிழற் காட்சிகளைச் சபையோர் பெரிதும் ரசித்தனர்.

சுருங்கச் சொன்னால் 'சிவகாமியின் சபதம்' அமெச்சூர்களின் ஆதர்ச நாடகம். இவ்வளவு உயரிய நாடகத்தைத் தயாரித்த ஸ்ரீராமகிருஷ்ண கிருபா அமெச்சூர்ஸாரின் தன்னல மற்ற தொண்டையும் நாடகக் கலைக்கு அவர்களது சேவையையும் தஞ்சை மாவட்ட மக்களின் சார்பில் பெரிதும் பாராட்டுகிறேன். மேலும் மேலும் இம்மாதிரி உயர்வான நாடகங்களைத் தயாரித்துத் தமிழ்நாடெங்கும் நடிக்க அவர்களுக்குக் காஞ்சி ஏகாம்பரர் அருள் புரியட்டும்! — வி. மகாதேவன்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras


ஏன் கிப்ஸ்
உபயோகிக்கும் குழந்தைகள்
அதிருஷ்டமுடையவர்கள்?
அதிருஷ்டமுடையவர்கள் ஏனென்றால்
அவர்களுடைய பெற்றோர்கள் கிப்ஸ் டென்டிபிரீஸ் வாங்குகிறார்கள்!
அதிருஷ்டமுடையவர்கள் ஏனென்றால்
அவர்கள் அதன் சுவையை அனுபவிக்கிறார்கள்!
அதிருஷ்டமுடையவர்கள் ஏனென்றால்
கிப்ஸ் டென்டிபிரீஸ் பற்களை வெண்மையாகவும் ஈறுகளை ஆரோக்கியமாகவும் இருக்கச்செய்கிறது!
நீலம்,
சிவப்பு,
பச்சை
டப்பிகளில்
Gibbs
கிப்ஸ் டென்டிபிரீஸ்
பற்களுக்கு சீரிய குணமளிக்கிறது—குறைந்த செலவில்!
GD. 33-50 TM

REGD. NO. M. 4392
*Registered as a newspaper in Ceylon*



# நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த
அற்புத வேலையைச் செய்யட்டும்

தினமும் ரெக்ஸோனு சோப் உபயோகியுங்கள். இதன் கேடில் கலந்த நுரை உங்கள் சருமத்தை நாளுக்கு நாள் அதிக மிருதுவாகவும், தெளிவாகவும் இருக்கச் செய்யும்.




## ரெக்ஸோனு
## கேடில் கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 109-50 TM
ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.